# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 165 | பெப்.11 - பெப் 24, 1999 | விலை ரூபா 10.00




## மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம்!

## வாக்குப்பெட்டிகளை நிரப்பும் ஜனநாயகம்!

## 250வது நாளாகத் தொடரும் தணிக்கை!

## 51வது சுதந்திர தினக் கொண்டாட்டம்!



## சுட்டது யார்? அகப்பட்டது யார்?

கல்வியங்காட்டுக்கும் நல்லூருக்கும் இடையே பருத்தித்துறை வீதியில் ரெலோ இயக்கத்தினர் சென்று கொண்டிருந்த வான் மீது கிரனைட் தாக்குதல் நடாத்தப்பட்டது. பெப்.07ம் திகதியான மாலை ஆறு மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. ரெலோவிற்கும் அங்குள்ள விளையாட்டு கழகங்களுக்கும் இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றில் கலந்து கொண்டுவிட்டு இரண்டு வானில் ரெலோவின்ர் திரும்பி வந்து கொண்டிருந்த போதே கல்வியங்காட்டுச் சந்திக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீதியோரமாக இருந்த ஒரு வீட்டு வளவுக்குள் இருந்தே கிரனைட் வீசப்பட்டது.

ரெலோவினர் சென்ற வான் மீது முதலாவது கிரனைட் வீசப்பட்டதும் அவர்கள் வானிலிருந்து இறங்கி வெளியே ஓடினர். அதனைத் தொடர்ந்து இரண்டாவது கிரனைட் வீசப்பட்டதோடு துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது.

இரண்டாவது வானில் வந்தவர்கள் புளொட் முகாமில் வந்து அறிவிக்க அங்கிருந்த புளொட்டினர் ஆயுதங்களுடன் (ரெலோவினரிடம் போதிய ஆயுதங்கள் இல்லாததால்) சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற வேளை தாக்கியவர்கள் தலைமறைவாகி விட்டனர்.

கிரனைட் வீச்சினால் வான் சிறிது சேதமடைந்தது. எனினும் இச்சம்பவத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை என ரெலோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரு வாலிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பெப்.07ம் திகதி மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தின் பின்னர் அப்பிரதேசத்தில் தேடுதல் மேற்கொண்ட இராணுவத்தினர் கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் ஆலயத்தின் அருகில் வைத்து இந்த இரு இளைஞரையும் கைது செய்தனர். கல்வியங்காடு கலைமகள் வீதியைச் சேர்ந்த பாலசிங்கம் தயாளன் (19), நல்லூர் வடக்கு புதுச்செட்டித்தெரு வாசியான யோகராஜா குலோதுங்கன் (21) ஆகியோரே கைது செய்யப்பட்டு விசாரணைக்காக நல்லூர் கோவில் வீதி படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

## அசடு வழிந்த படையதிகாரி!

யாழ்.கச்சேரியில் தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்கள் மேலதிக அரச அதிபரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது மிதி வெடி அகற்றும்பணி எந்தளவில் பூர்த்தியாகியுள்ளது என்று கேட்டனர்.

படைத் தரப்பினர் இதற்கான அனுமதியைத் தரவில்லை என்று அங்கு பிரசன்னமாயிருந்த UNDP பிரதிநிதி தெரிவித்தார்.

உடனே அங்கிருந்த பிரிகேடியர் திலகரட்ன புலிகள் புதைத்த கண்ணி வெடிகள் தான் அகற்றப்படவில்லை. படையினரால் புதைக்கப்பட்டது அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டது என்றார்.

மீளவும் UNDP பிரதிநிதி சொன்னார் நாங்கள் கண்ணி வெடிகள் எவற்றையும் அப்புறப்படுத்தவில்லை. அதற்கான அனுமதியும் படைத்தரப்பினரால் வழங்கப்படவில்லை என்றார்.

படை அதிகாரியின் முகத்தில் அசடு வழிந்தது.

## உதவிக்கும் வயதெல்லை!

வன்னிப் பெரு நிலப்பரப்பிலிருந்து அம்புலன்ஸ் மூலம் நோயாளர்களை ஏற்றி வருவது தொடர்பாக இராணுவத்தினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்கள்.

அம்புலன்ஸ் மூலம் ஆண்நோயாளி ஒருவரைக் கொண்டு வருவதானால் உதவிக்கு வரும் உறவினர் 55 வயதிற்கு மேற்பட்ட ஆணாக இருத்தல் வேண்டும். பெண்நோயாளியாக இருந்தால் உதவிக்கு வருபவர் 45 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரை குழந்தைகளின் தாயாரே உதவிக்கு வர வேண்டும் என்று இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் இப்புதிய கட்டுப்பாடுகள் குறித்து வவுனியாவிலுள்ள மனித நேய அமைப்புகள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

## பொலிசாரின் பிழைக்கு இவருக்குத் தண்டனை!

கடந்தபெப்.7ம் திகதி மாலை கச்சேரி நல்லூர் வீதியும் நாவலர் றோட்டும் சந்திக்கும் இடத்தில் மயில்வாகனம் சாந்தகுமார் (16) என்ற இளைஞர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தனது அடையாள அட்டை தொலைந்தது தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்து இருந்தார். ஆனால் சில தினங்களுக்குப் பின்னர் இவரது அடையாள அட்டை மீளக் கிடைத்ததையடுத்து இவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு சென்று தனது அடையாள அட்டை மீளக் கிடைத்து விட்டதாகவும் அதனால் முறைப்பாட்டை இரத்துச் செய்யும்படியும் கோரியிருந்தார். தற்போது யாழ். குடாநாட்டில் தேசிய அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை ஆகிய இரண்டையும் அல்லது இரண்டில் ஒன்றையும் தொலைத்தவர்கள் தொடர்பாக படையினர் விசாரணை செய்து வருகின்றனர். இதனடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தனது அடையாள அட்டை மீளக் கிடைத்து விட்டதால் முறைப்பாட்டை இரத்துச் செய்யும்படி தான் கோப்பாய் பொலிஸாரிடம் தெரிவித்ததாகவும் அவர்கள் முறைப்பாட்டை இரத்துச் செய்யாதது தனது தவறு அல்ல என்று படையினரிடம் எடுத்துக் கூறியும் படையினர் அவற்றைக் கவனியாது இவரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர நீர்வேலி சிறுப்பிட்டியைச் சேர்ந்த நாகமணி சதீஸ் என்ற 25 வயது இளைஞன் பெப்.3ம் திகதி நீர்வேலி படையிரால் கடுமையாகத் தாக்கப்பட்டதால் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் கைது, தாக்குதல் தொடர்பாக தாயார் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

சதீஸ் சாப்பிட முடியாத நிலையிலே உள்ளார் என்றும் இவரின் கழுத்து நெரிக்கப்பட்டதாகவும் தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## அது யாருடைய சடலம்?

பெப்.08ம் மாலை காங்சேகன்துறைப் பொலிஸாரால் யாழ். வைத்தியசாலையில் 18 அல்லது 20 வயது மதிக்கத் தக்க இளைஞன் ஒருவரது சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவுக் கடலில் இச்சடலத்தைக் கண்டெடுத்து கடற்படையினர் தம்மிடம் ஒப்படைத்ததாக காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்விளைஞரின் சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. பெப்.7 மாலை குறிகட்டுவானில் வைத்துக் கடற்படையினரால் ஒரு இளைஞர் தடுத்து வைக்கப்பட்டதாகவும் அவ்விளைஞருடைய சடலமாக இது இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

## சிங்கள மகா வித்தியாலயத்தில் ரெலோவின் வதை முகாம்!

யாழ்ப்பாணத்தில் ரெலோ இயக்கத்தினரால் கைது செய்யப்படும் இளைஞர்கள் சிங்கள மகா வித்தியாலயத்திற்கு அருகில் இருக்கும் ரெலோ இயக்க முகாமில் வைத்துத் தாக்கப்படுவதாக தமக்குப் புகார் கிடைத்துள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ரெலோ முகாம் அமைந்துள்ள சிங்கள மகா வித்தியாலயப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ளது.

ரெலோ அமைப்பினர் தம்மால் கைது செய்யப்பட்டு அழைத்து வருபவர்களை இம் முகாமில் வைத்தே தாக்குவர். விசாரணையின் போது சிங்களத்தில் பேசுவதே அவர்களது வழக்கம்.

ரெலோவினரால் கைது செய்யப்பட்டு தாக்குதலின் பின் விடுவிக்கப்பட்ட சிலர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று படையினர் தம்மை விசாரணைக்கென அழைத்துச் சென்று சிங்கள மகாவித்தியாலயத்திற்கருகில் இருக்கும் முகாமில் வைத்துத் தாக்கியதாக முறையிட்டதைத் தொடர்ந்து இடம் பெற்ற விசாரணைகளை அடுத்தே அங்கு ரெலோ அமைப்பின் இரகசிய முகாம், ஒன்று இயங்குவது தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஹோட்டலில் வைத்து தாக்குதல்!

வண்ணார்பண்ணை வடமேற்கைச் சேர்ந்த பாலசிங்கம் ராஜு என்ற 12 வயதுச் சிறுவனும்,சிறுவனுடைய தந்தையான சின்னத்துரை பாலசிங்கம் என்பவரும் யாழ். ஞானம்ஸ் ஹோட்டேலில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

இது தவிர கொழும்புத்துறையைச் சேர்ந்த மயில்வாகனம் சாந்தகுமார்(25) என்ற இளைஞன் பெப்.7ம் திகதி மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

## புளொட்டின் ஆசை!

யாழ் மீன் சந்தைப் பகுதி கடைகளுக்குச் சென்று கடந்த பெப்ரவரி 4ஆம் திகதியன்று அங்கு வேளை செய்து வந்த இளைஞர்களை பிடித்து விசாரணை நடாத்திய புளொட் இயக்கத்தினர் வவுனியாவில் தாம் செய்து வருவது போல் இங்கும் செய்தால் தான் சரிவரும் என்று கூறி மிரட்டியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இன்னொரு படுகொலை!

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உப தலைவர் நடராசா சிவராசா(60) பெப்.2ம் திகதி மாலை ஆறு மணியளவில் இருபாலை கட்டைப்பிராயில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஈ.பி.டி.பி அமைப்பின் சார்பில் பிரதேச சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். வெறும் உள்ளூராட்சி சபைக்காக உயிர்கள் உதிரும் காலம் நிற்காதோ?

## கா. சூர்யா எழுதுவது...

## அஷ்ரப்பின் ஜனநாயக தேவதை!

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியினால் ஆளப்படும் ஒரு நாட்டில் இடம்பெறும் முக்கிய அரசு சார்ந்த அரசியல் செயல்பாடுகளில் அந்த ஜனாதிபதியின் பங்களிப்பு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கத்தான் செய்யும். நிறைவேற்று அதிகாரம் என்பது சர்வாதிகாரத் தன்மை கொண்டது. ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர அதனால் எல்லாம் செய்ய முடியும் என்பது அது குறித்த அபிப்பிராயம்.

அவ்வாறான ஜனாதிபதியின் அரசியல் கட்சி தேர்தல் வன்முறையில் படுமோசமாக ஈடுபடும்போது அதில் ஜனாதிபதியின் பங்களிப்பு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இல்லை எனச் சொல்வது வேடிக்கையானது. அதுவும் இத் தேர்தலின் திகதி அறிவிக்கப்பட்டபின் ஜனாதிபதியின் கூற்று "என்ன விலை கொடுத்தாவது வெல்ல வேண்டும்" என்பதாகவே அமைந்தது. அந்த விலையாகத் தான் வடமேல் மாகாண மக்கள் தம் முதன்மையான உரிமையான வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை கொடுத்து இருந்தனர். அத்துடன் ஜனாதிபதி ஒவ்வொரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் ஐ.தே.கவை புலிகளை விட மோசமான பயங்கரவாதிகள் எனவும் குறிப்பிட்டு இருந்தார். அதன் மீதான வன்முறையை பயங்கரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகளாக அடையாளப்படுத்த முனையும் ஒரு வெளிப்பாடாகவே இருந்தது.

இத்தனை இருந்தும் இன்னும் ஜனாதிபதியின் கைகள் சுத்தமானவை என்றும், அவர் ஒரு சமாதான சின்னம் என்றும், வன்முறை அரசியலின் முழு எதிரி என்றும் அஷ்ரஃப்பும் அவரைப் போன்றவர்களும் அறிக்கை விடுகின்றனர். உயர் நீதிமன்றமே ஜனாதிபதி அரசியலமைப்பிற்கு விரோதமாக நடந்து கொண்டுள்ளார் எனத் தீர்ப்பு வழங்கியப் பின்னும் இவர்கள் இப்படிச் சொல்வது அவர்களின் அரசியல் வங்குரோத் தனத்தையும், பதவிச் சுகத்திற்காக எதனையும் செய்யத் துணிபவர்கள் என்பதையுமே எடுத்துக் காட்டுகிறது.

இந்த நேரத்தில் எனக்கு ஒன்று நினைவிற்கு வருகின்றது. பொதுத்தேர்தல் 94 இல் நடைபெற முன் தம்மை ஜனநாயகவாதிகளாக வெளியே (மட்டும்) காட்டிக் கொள்பவர்கள் ஒன்று சேர்ந்து மக்களை பொ.ஐ.முன்னணிக்கு வாக்களிக்குமாறும், அதன் மூலம் ஜனநாயக சக்திக்கு உயிர்கொடுக்கு மாறும் கேட்டு இருந்தனர். இன்று இவர்கள் இவ் அரசையிட்டு என்ன சொல்லப் போகின்றனர்.

### விழித்தெழுந்தவர்கள்...

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் இடம்பெற்ற மோசமான ஜனநாயக விரோத வன்முறைகளைக் கண்டபின் இன்றுதான் விழித்தெழுந்தவர்கள் போல் ஐ.தே.கவும் சரி, ஏனையவர்களும் சரி இத்தனை கூப்பாடு போடுவது பற்றி எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இதற்கு முதல் எத்தனை நிகழ்வுகள் இவ்வாறு நிகழ்ந்தன?

இதன் விதை, வடக்கு -கிழக்கு எங்கும் தூவப்படும்போது மட்டும் இவர்கள் ஏன் வாய்மூடி மௌனித்துக் கிடந்தனர்? 1981ல் நடந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் இடம்பெற்ற மோசமான தேர்தலின்போது ஜனநாயகம் செத்துவிடவில்லையா?

கிழக்கு முழுவதும் இராணுவ அடக்கு முறையினுள் மூழ்கிக்கிடக்க, கொக்கட்டிச்சோலை போன்ற இடங்களில் முழு அளவிலான இன அழிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்க ஐ.தே.க. அரசு அன்று இராணுவத்தை முழுதும் நிறுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடாத்துகையில் ஏன் இவர்கள் வாயைத் திறக்கவில்லை? வாய் புலி எதிர்ப்பினுள் மூழ்கிக்கிடந்ததா அல்லது பௌத்த பேரினவாதத்தை ஆழப்படுத்தியதால் மகிழ்ந்து இருந்தனரா?

பாராளுமன்றத் தேர்தலில் முழு யாழ். மாவட்டத்திற்கான உறுப்பினர் தெரிவிற்காக தீவுப்பகுதிகளிலும் தெல்லிப்பழைப் போன்ற இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் மட்டுமே தேர்தலை வைத்து அது முழு குடா நாட்டிற்கானது என நாடகம் நடத்துகையில் ஐ.தே.கவிற்கு ஜனநாயக தேர்தல் பற்றிய இன்றைய மதிப்புகள் எங்கு போயிருந்தன? வெறும் நூறு, இருநூறு வாக்குகளில் வந்த யாழ். எம்.பிக்கள் தானே இன்று வரை ஜனநாயகம் பேசித் திரிகின்றனர்?

ரிவிரசவின் பின் முழு குடாநாடுமே திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியபின், தினமும் நூறுக்கணக்கானவர் காணாமல் போய்க்கொண்டும், கொலை செய்யப்பட்டுக் கொண்டும் இருக்கையில், ஜனநாயக ரீதியான தேர்தலை வைக்கும் நிலை அறவே இல்லாது இருக்கையில், பல இலட்சம் வாக்காளர்கள் அகதிகளாகி இடம்பெயர்ந்து குடாநாடு விட்டு அகன்று இருக்கையில் இடம்பெற்றத் தேர்தல் ஜனநாய ரீதியானது எனின், இன்றைய இந்த வடமேல் மாகாண சபைத் தேர்தல் மட்டும் எவ்வாறு ஜனநாயகமற்றதாக இவர்களிற்கு தெரிகிறதாம்.

ஐ.தே.க.வும் சரி, போலி ஜனநாயகவாதிகளும் சரி, தமிழ் மக்கள் மீது ஜனநாயக விரோத செயல்பாடுகளை அரசுகள் கட்டவிழ்த்து விடும்போது மட்டும் எதுவும் கூறாது வேடிக்கை பார்ப்பார்கள். அவர்களின் புலி எதிர்ப்பு புத்திசீவித்தனத்திற்கு அவை ஜனநாயக விரோதமாக ஒருபோதுமே தெரியமாட்டாது. இனவாதம் கண்ணை மறைத்து விடும்.

ஆனால், இங்குள்ள அதிகாரவர்க்கங்கள் இனவாதத்தை மட்டுமே கொண்டதாக இருப்பதில்லை. அதனுடன் சேர்ந்து வர்க்க சிந்தனை அடக்குமுறை, பாட்டாளி வர்க்க எதிர்ப்புணர்வு, ஆக்கிரமிப்பு போன்றவற்றையும் கொண்டிருப்பவை. அவை தம் அதிகார உரிமைக்கு எதிரான, சவாலான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் போது இப்படித்தான் தம்கோர முகத்தை காட்டும். தமிழ் மக்கள் மீது இடம்பெறும் ஜனநாயக விரோத நிகழ்வுகளைக் கண்டு கொதித்து எழாது, வாய்மூடி மௌனித்தும், ரசித்தும் இருந்ததன் பலனே இன்று இவர்கள் காண்பது என்று சொன்னால் தவறாகுமா? இனியும் இதனை முழு சக்தியுடன் எதிர்க்காவிடில் வரப்போகும் நாளை நரகமாகத்தான் நிச்சயம் இருக்கும்!

# யாழ் சிவில் நிர்வாகத்தில் சமூக விரோதிகளுக்கு சுதந்திரம்!

யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம்(?) ஒப்படைப்பதற்காகவும், அங்கு ஜனநாயகத்தை 'வாழ்விப்பதற்காக'வும் உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடாத்தியது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக அரசு அறிவித்த போதே யாழ்ப்பாணத்தில் நிலைமை சுமுகமாக இருப்பதாக வெளியுலகிற்குப் பறை சாற்றவும், மக்கள் அங்கு சகல சுகபோகங்களுடனும் வாழ்கிறார்கள் என்று காட்டவுமே அரசு இத்தேர்தலை நடாத்துவதாகப் பலமான அபிப்பிராயங்கள் வெளிவந்திருந்தன.

ஆனாலும் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் அங்கு ஜனநாயகத்தை 'வாழ்விக்க' அரசின் கூப்பிட்ட குரலுக்குச்செவி சாய்த்து ஓடோடிச் சென்று தேர்தலில் போட்டியிட்டன.

தேர்தல் நடந்து முடிந்து ஒரு வருடம் முடிந்து விட்டது. குடாநாடு இன்னமும் படையினரின் நிர்வாகத்தின் கீழ் தான் இருக்கிறது. பல உள்ளூராட்சி சபைகள் இன்னமும் இயங்கவில்லை. படையினரால் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. பல பாடசாலைகளில் இராணுவமே இன்னமும் குடியிருக்கிறது.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஜனவரி மாத மாதாந்த அறிக்கை யாழ்ப்பாணத்தில் எப்படிச் சிவில் நிர்வாகம் இருக்கிறது என்பதனை அம்பலப்படுத்துகிறது. அதிலிருந்து சில பகுதிகள் இவை.

"யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன என்று கூறப்படுகிறது. எனினும் பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தி கரமானதாக இல்லை. யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்குலைந்துள்ள இன்றைய நிலையில் சட்டத்தை நிலை நாட்ட வேண்டியவர்கள் அதில் அக்கறை இன்றி இருக்கின்றார்கள்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொள்ளை, களவு, கசிப்பு விற்பனை, அனுமதியற்ற மதுபான விற்பனை, காளான்கள் போன்று தோன்றியுள்ள சினிமாக்கள் என்பன எந்த விதமான இடையூறுகளுமின்றி பயமற்ற முறையில் நடைபெற்று வருகின்றன. வாகனங்கள் அனுமதிப்பத்திரம் இன்றி ஓடுவதும், வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்காமல் போக்குவரத்துச் செய்வதும் அதிகரித்துள்ளன. குற்றவாளிகளும், சமூக விரோதிகளும் பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் எந்த விதமான வித்தியாசமுமின்றி செயற்பட்டு வருகின்றனர்.

தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான தடைகள், தொழில் செய்வதற்கான எல்லைகள் வரையறை செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டமை என்பவற்றால் ஏற்பட்ட தொழில் வாய்ப்பின்மை என்பவற்றால் தான் இவ்வாறு சமூக விரோதச் செயல்களும், குற்றங்களும் குடாநாட்டில் பெருகியுள்ளன.

இந்தச் சமூக விரோத மற்றும் குற்றச் செயல்களினால் வாழையடி வாழையாக வரும் தமது கலாசார விழுமிங்கள் சீரழியும் நிலை ஏற்பட்டு விடுமோ? என்று குடாநாட்டு மக்கள் பயப்படுவதுடன் மன வேதனையும் அடைகின்றார்கள்.

குடாநாட்டிலுள்ள கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் நடைபெறுகின்றது என்று கூறப்படுகின்றது. ஆனால் அந்தப் பணிகள் உண்மையில் நடைபெறவில்லை. கண்ணி வெடிகள் அகற்றப்படாமலேயே இருப்பதனால் பொது மக்கள் தமது அவயவங்களை இழப்பது தொடர்கிறது. அத்துடன் கண்ணி வெடிகள் இருக்கும் பிரதேசங்களுக்கு மக்கள் செல்ல முடியாதுமுள்ளது. கண்ணிவெடி அகற்றும் பணிகள் தாமதமடைவதற்கு அரசாங்கத்தின் மெத்தனப் போக்கே காரணமாகவுள்ளது.

சுகாதார குறைபாடுகள் பற்றி பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகாரிகளுக்கு எடுத்துக் காட்டியும் அவை இன்னும் தீர்க்கப்படவில்லை. குடாநாட்டுக்குத் தேவையான மருந்துகளைப் பெறுவதில் தொடர்ந்தும் கட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குடாநாட்டில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்கள் புனரமைக்கப்படவில்லை. 1996ம் ஆண்டில் இவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவை மீளத் திருத்தி அமைக்கப்படவில்லை. இதனால் அவை மிகவும் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன.

1990ம் ஆண்டு ஜுலைக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள 78 ஆயிரம் வீடுகளுக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இலங்கை மின்சார சபை தற்போது 24 மணிநேர மின்சாரம் வழங்குவதாகக் கூறுகின்ற போதும் அது ஒரு சிறு பகுதிக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

அதுவும் சீரற்ற விநியோகமாகவேயுள்ளது. மின்சார இணைப்புக்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. ஏனெனில் யாழ் நகரில் இருந்து மிகக் கூடிய தொலைவில் இருக்கும் இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதும் நகருக்கு அண்மையிலுள்ள கோப்பாய் போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வல்லுறவு முயற்சிக்கு தண்டனை இடமாற்றமா?

பொலிசாரால் பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று திருமலைப் பொலிஸ் பிரிவிலுள்ள உப்புவெளி மூன்றாம் கட்டை என்ற இடத்தில் ஜனவரி 18ம் திகதி மாலை 7மணியளவில் இடம் பெற்றிருக்கிறது.

இதுபற்றி சரிநிகருக்குக் கிடைத்த தகவல் இவை: தியாகராசா சதீஸ்குமார் (28) ஒரு மேசன் தொழிலாளி. இவரது மனைவி யோகேஸ்வரி (26). இவர்கள் இருவரும் மூன்றாம்கட்டை பொலிஸ் அரணுக்கு அருகில் உள்ள சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் குடியிருக்கின்றனர்.

சம்பவதினத்தன்று மாலை பாண் வாங்குவதற்காக சதீஸ்குமார் கடைக்கு வந்திருக்கிறார். சார்ஜன்ட் பெரேரா என்று அழைக்கப்படும் பொலிஸ்காரர் காவலரணில் நின்று எங்கே போகிறாய் என்று கேட்டார். கடைக்குச் செல்வதாகச் சதீஸ்குமார் சொன்னபோது வரும் போது தன்னைச் சந்திக்குமாறு நட்புரீதியில் அந்தப் பொலிஸ்காரர் கேட்டிருக்கிறார்.

அதன்படியே கடைக்குச் சென்று வந்தவரிடம் பாணை வாங்கி வைத்துக் கொண்டு நூறு ரூபாய் கொடுத்து சாராயம் வாங்கி வருமாறு பெரேரா கூறியிருக்கிறார். இது வழக்கமான நிகழ்வாகையால் சதீஸ்குமார் சாராயம் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த போது பெரேராவைக் காணவில்லை. "பெரேராவுடன் கூட நின்ற மற்றைய பொலிஸ்காரர் பெரிய ஐயா கூப்பிட்டதால் பெரேரா மாத்தையா போயிருக்கிறார். அவர் வரும் வரை நிற்கும்படி கூறியிருக்கிறார். வேண்டுமானால் சாராயத்தில் கொஞ்சத்தை நீயும் குடி" என்று சதீஸ்குமாரைச் செல்ல விடாது நிறுத்தி வைத்திருக்கிறார்.

நேரம் தான் போய்க் கொண்டிருந்தது. பெரேராவைக் காணவில்லை. பெரேராவோ சதீஸ்குமார் வீட்டுக்குள் நுழைந்து அங்கே சுகவீனங்காரணமாகப் படுத்திருந்த யோகேஸ்வரியின் வாயைப் பொத்தி வல்லுறவுக்கு முயன்றுள்ளார். மனைவி யோகேஸ்வரி திமிறவே நாய், பூனையை இழுத்துச் செல்வதுபோல அங்குமிங்கும் இழுத்துச் சென்றிருக்கிறார். என்றாலும் யோகேஸ்வரி விடவில்லை.

நேரம் போவதால் வீட்டுக்குச் செல்ல முயன்ற சதீஸ்குமாரை மற்றப் பொலிஸ்காரர் தடுத்திருக்கிறார். மீறிச்செல்ல முயன்ற போது "சென்றால் சுடுவேன்" என்றும் பயமுறுத்தி இருக்கிறார். அதனால் சந்தேகங் கொண்ட சதீஸ்குமார் பயமுறுத்தலைக் கவனியாது வீட்டுக்கு வந்த போது பெரேரா முயற்சி கை கூடாத நிலையில் மூலையில் சாத்தி வைத்திருந்த துப்பாக்கியையும் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்.

உடனடியாக உப்புவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டபோது அவர் தமது மேலதிகாரிகளுக்கு விடயத்தைக் கொண்டு சென்றதால் அந்த இரு பொலிஸ்காரர்களும், உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள்.

காவலுக்கு நின்று கொண்டே காடைத்தனம் பண்ணுகிறார்கள் பொலிஸ் கொஸ்த்தாரப்புக்கள். சரி தண்டனை என்னவாக இருக்கும்?

'பயங்கரவாதப் பிரச்சினை' இல்லாத ஊருக்கு மாற்றல்?

— திரிபுரன்

# வாழைச்சேனை: நஷ்ட ஈடு வழங்க அரசாங்கத்திடம் பணம் இல்லையாம்!

வாழைச்சேனையில் அரச அதிகாரிகள் திரட்டிய தகவல்களின்படி 1998இல் இலங்கை இராணுவத்தின் ஷெல் வீச்சினாலும், கண்மூடித்தனமான தாக்குதலாலும் ஐந்து பாடசாலை மாணவன் உட்பட 35 பொது மக்கள் இப்பிரதேச செயலகப்பிரிவில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

வாழைச்சேனை பத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புப் பகுதிகளைக் கொண்ட பிரதேசமாகும். மட்டக்களப்பிலிருந்து 32 கிலோ மீற்றர் வடக்காகவுள்ள இப்பிரதேசம் இராணுவ நடவடிக்கைகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சிறு பிரதேசத்தைச்சுற்றி இலங்கை இராணுவத்தின் 9 படையணி முகாம்களும், 8 பொலிஸ் காவலரண்களும் உள்ளன. யுத்தப் பிரதேசத்தில் கடமையாற்றும் பொலிசாரும் இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் என்பதும், அவர்களைப் போன்றே ஆயுதங்களைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை பிரதேச செயலக அறிக்கையின்படி 97 பொதுமக்கள் படுகாயமுற்று அங்கவீனமாகியுள்ளனர். இதில் 14 பேர் (6 பெண் பிள்ளைகள், 8 ஆண்பிள்ளைகள்) பாடசாலை மாணவர்கள் ஆவர்.

97ம் ஆண்டு போரில் 8 பேர் இராணுவத்தின் தேடுதல் நடவடிக்கையின் போது அவர்களாலேயே தாக்கப்பட்டிருக்கின்றனர்.

கருவாக்கேணி, புதுக்குடியிருப்பு, நாசிவன் தீவு போன்ற பிரதேசங்களில் 98இல் இடம்பெற்ற ஷெல் தாக்குதலால் 96 வீடுகள் சேதமடைந்துள்ளன. 957 நிரந்தர கட்டிடங்கள் உள்ள இப்பிரதேசத்தில் இது 10 வீதமாகும்.

அதிகாரபூர்வமான அறிக்கைகளின்படி 90-98 காலப்பிரிவில் வாழைச்சேனையில் 746 பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். எனினும், இந்த எண்ணிக்கையை விடக் கூடுதலான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஏனெனில், பொது மக்கள் மரணம் தொடர்பான அரசாங்க பதிவேட்டு நடைமுறை ஒழுங்கற்றிருப்பது இவ்வாறான எண்ணிக்கை குறைப்புக்குக் காரணமாகின்றது.

மரணச்சான்றிதழ்கள் பெறுவதற்கான முதல் விசாரணையை பிரதேச செயலகம் மேற்கொள்கிறது. இவ்விசாரணை முடிந்ததும், அந்தக் கோவைகள் மட்டக்களப்பு சி.ஐ.டியினரிடம் வழங்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பதாரி பெரும்பாலும் மனைவியாக, தாயாக, இருப்பார். இவர்கள் இரண்டு சாட்சிகளுடன் சி.ஐ.டி முன் விசாரணைக்கு தோற்ற வேண்டும். விசாரணை முடிவில் இறந்தவர் பயங்கரவாத சந்தேக நபராக, பயங்கரவாதியாக இல்லையென்று கருதும் பட்சத்தில் அவர் சார்பிலான நஷ்ட ஈட்டுக்கு சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

நஷ்டஈட்டுத் தொகை திருமணம் முடித்தவர்களுக்கு 50ஆயிரம் ரூபாவாகவும், 21 வயதுக்கு மேற்பட்ட திருமணம் முடிக்காத ஒருவருக்கு 25ஆயிரம் ரூபாவாகவும், 21வயதுக்குக் குறைந்தவருக்கு 15 ஆயிரம் ரூபாவாகவும் வழங்கப்படுகிறது.

வாழைச்சேனை பிரதேச செயலக தகவலின்படி அப்பகுதியில் கொல்லப்பட்ட746பேரில் 319பேருக்கே அரசாங்கத்தால் நஷ்டஈடு வழங்க ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு வழங்க நிதி இல்லையெனவும், அரசாங்க செயகத்திற்கு அரசு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு நிதி என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருள்களிலும், எனைய சேவைகளிலும் 4.7 வீதம் தேசிய பாதுகாப்பு வரியாக அறவிடப்படுகின்றது.

நட்டஈடு கொடுக்க பணம் இல்லையென்று கூறிய அரசாங்கம், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திலிருந்தும் மிக மோசமான முறையில் அந்த நிதியை அறவிடுகிறது என்று வாழைச்சேனைப் பிரதேச சமூக சேவையாளர் ஒருவர் தெரிவித்தார்.

வாழைச்சேனையின் தற்போதைய சனத்தொகை எண்ணிக்கை 53100.

சி.ஐ.டி. ஏற்றுக்கொண்டதன் படி பார்த்தால் கூட அதில் 1.5 வீதமானவர்கள் 98-99க்கிடையில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

# 99 ஜனவரியில் காணாமல் போனோரும், கைது செய்யப்பட்டோரும்!

99 ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் இரண்டு பேர் காணாமல் போயுள்ளார்கள். 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். காணாமல் போன் இருவரையும் தான் கைது செய்யவில்லையென படையினர் தெரிவித்துள்ளனர்.


சின்னத்தம்பி தவராஜா (18), மூத்த விநாயகர் வீதி நல்லூர் என்பவரும், கிறிஸ்டி ஜோன்சன் கசில்ராஜ் மவுன் கார்மல், யாழ்ப்பாணம் என்போருமே காணமல் போனவர்களாவர்.

படையினரால் கைது செய்யப்பட்டோர் விபரத்தை அட்டவணை காட்டுகிறது.

கைத செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை, அனுராதபுரம் களுத்துறை போன்ற இடங்களிலுள்ள தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

| பெயர் | முகவரி |
|---|---|
| பாலசிங்கம் கந்தசாமி | மருதங்கேணி |
| ஜேசுதாஸ் செல்வராஜ் | மானிப்பாய் |
| தங்கராஜா துஷ்யந்தன் | ஏழாலை தெற்கு |
| சின்னக்குட்டி செல்வரட்னம் | பருத்தித்துறை |
| முருகேசு நாககுமார் | யாழ்ப்பாணம் |
| மார்க்கண்டு தெய்வேந்திரம் | கைதடி மேற்கு |
| வேலன் கனகலிங்கம் | கைதடி மேற்கு |
| ஆறுமுகம் கனகரட்னம் | வல்வெட்டித்துறை |

| பெயர் | முகவரி |
|---|---|
| கந்தசாமி லிங்கேஸ்வரன் | கொழும்புத்துறை |
| அரியநாயகம் ஸ்ரீகாந்த் | திருநெல்வேலி |
| சுப்பிரமணியம் விஜயகுமார் | கொக்குவில் கிழக்கு |
| ராமலிங்கம் தவத்துரை | தும்பளை |
| சுதாகரன் துளசிதாசன் | சாவகச்சேரி |
| ரத்தினசிங்கம் ராஜசிங்கம் | பருத்தித்துறை |
| சச்சிதானந்தம் சுதர்சன் | திருநெல்வேலி |





# நவீன துச்சாதனர்கள்!

தமிழில் : சி . செ . ராஜா.

நன்றி : த சண்டே ரைம்ஸ் 07021999

"அவர்கள் எனது ஆடைகளைக் களையுமாறு சொன்னார்கள். நான் மறுத்த போது, அவர்கள் என்னை அடித்தார்கள். நான் எனது மேற்சட்டையின் இரு பொத்தான்களை தயக்கத்துடன் கழற்றினேன். அவர்கள் அதனைப் பிடித்து இழுத்துக் கழற்றி வீசினார்கள். அவர்கள் எனது மார்புக் கச்சையின் பட்டியையும் பிடித்து இழுத்தனர். ஆனால், நான் அதனை இறுக்கப் பிடித்திருந்தேன். பின்பு நான் அணிந்திருந்த துணியைப் பிடித்து இழுத்துக் கழற்றினர். எனது உள் பாவாடையை நான் கழற்றாவிட்டால் என்னைக் கத்தியால் குத்தப் போவதாக அவர்கள் அச்சுறுத்தினார்கள். ஒருவன் எனது பாவடையின் இடுப்பு இலாஸ்ரிக்கை இரும்புக் கம்பியால் பிடித்து இழுத்துப் பிடுங்கினான். என்னை நோக்கித் துப்பாக்கியை நீட்டிப்பிடித்து ஒருவன் மிரட்டினான். இன்னொருவன் ஒரு துப்பாக்கி வேட்டைத் தீர்த்தான். பின்பு அவர்கள் எங்களை கட்டுபொத்த நோக்கி ஓடுமாறு விரட்டினர். நான் எனது உட்பாவாடையை ஒருவாறு அணிந்து கொண்டேன், அவர்கள் எங்களைத் தொடர்ந்தும் அடித்துத் துரத்திக் கொண்டே வந்தனர். எங்களுக்கு ஓடுவதைத் தவிர வேறு வழி எதுவுமே இருக்கவில்லை. அந்தக் கோஷ்டி வான் ஒன்றில் எங்களைப் பின் தொடர்ந்து வந்தது. நாங்கள் அரை மைல் துரத்திற்கப்பாலிருந்த சந்தி வரை ஓடினோம். சந்தியில் வைத்து அவர்கள் எங்களைக் கடந்து சென்றனர்"

***பீ.எம்.சந்திராவதி [50]***
***வாரியப்பொல.***

"அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஏனைய மூன்று இளம் பெண் பிள்ளைகளுடன் நானும் இருந்தேன். அப்போது எங்கள் அருகே வான் ஒன்று வந்து நின்றது. என்னுடன் நின்ற மற்றப் பிள்ளைகள் வானைக் கண்டவுடன் சிதறி ஓடினார்கள். நான் அபாயத்தை உணரவில்லை. எனவே நான் தனித்து நின்று கொண்டிருந்தேன். வானிலிருந்து ஆயுதங்களுடன் எட்டு ஆண்கள் மட்டில் வெளியே குதித்தனர். அவர்களைக் கண்டதும், நான் அச்சத்துடன் ஓடினேன். அவர்கள் என்னைத் துரத்தினார்கள். ஓடும் போது வீதியில் விழுந்த என்னை எவனோ ஒருவன் ஒரு தடியால் அடித்தான். அவர்கள் என்னை ஒரு கிறவல் வீதியினூடாக இழுத்துச் சென்று நிலத்தில் முழங்காலிட்டு நிற்கச் சொன்னார்கள். ஏனைய பெண் பிள்ளைகளில் இருவரையும் பிடித்து வந்து அவர்களையும் முட்டுக் காலிட்டு இருக்கச் செய்தனர். ஆனால், அவர்களை அடிக்கவில்லை."

"எனது உடைகளை அகற்ற நான் மறுத்த போது, அவர்கள் எனது தலைமயிரில் பிடித்து இழுத்து ஒரு இரும்புப் பொல்லால் மூன்று அல்லது நான்கு தடவை தாக்கினர். எனது தந்தை யாரெனக் கேட்டு என்னை அடித்தார்கள். நான் பதில் கூற மறுத்தபோது அவர்கள் எனது கன்னங்களில் அறைந்து துப்பாக்கிப் பிடியால் தாக்கினர். கூடவே எனது கழுத்திலும் உடைத்தனர். பின்பு அவர்கள் தங்களை எனக்குத் தெரியுமா? எனக் கேட்டனர். அவர்களில் அநேகரை நான் அறிந்திருந்தேன். எனது தகப்பனார் யார் எனவும், நான் எங்கு வாழ்கிறேன் என்றும் தாம் அறிவதாக அவர்கள் கூறினார்கள். நாம் பொலிசில் புகார் செய்தால் எம்மைக் கொன்று விடுவார்களென்றும் பயமுறுத்தினார்கள்.

"அதே சமயம் அக்கோஷ்டி வரிசையில் எங்களுடன் நிறுத்தி வைத்திருந்த இரு கிராமத்தவர்கள் சிதறி ஓடினார்கள். அவர்களுக்குப் பின்னால் அந்தக் கோஷ்டியினர் ஓடிய போது நான் எழுந்து ஓட முயற்சி செய்தேன். அவர்கள் என்னைக் கண்டனர். எனது குடையைப் பறித்து, எனது தலையில் அடித்தனர். திரும்பவும் என்னை அசையாது முழங்காலில் இருக்கச் செய்யுமாறு கட்டளையிட்டு விட்டு அந்தக் கிராமத்தவர்கள் இருவருக்கும் பின்னால் துரத்திச் சென்றனர். அங்கே, அச் சந்தியில் 500 பேரளவில் மக்கள் இருந்தனர். எங்களுக்கு அருகே வரும் எவரையும் தாம் சுடுவோம் என அக்கோஷ்டி அச்சுறுத்தியது. இறுதியாக, நாங்கள் ஒருவாறு சுதாகரித்து எழுந்திருந்து ஒரு கடையின் பின்புறமாக ஒழிந்து கொண்டோம். நான் அரைவாசித் து'ரம் தவழ்ந்தும், ப்ாதித் துாரம் இழுபட்டுக் கொண்டும் கடையின் சுவரைப் பிடித்தபடியே சென்றேன். நாங்கள் கடை ஒன்றினுள் சென்றோம். நான் மிகுந்த வருத்தத்துக்கு உள்ளானேன். என்னால் கதைக்கவோ அன்றி விழுங்கவோ முடியவில்லை. கிராமத்தவர் ஒருவர் என்னை வாரியப்பொல வைத்தியசாலைக்குக் கொண்டு போனார். அங்கிருந்து நான் குருணாகலை வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டேன்."

***செல்வி துஷானி [17]***
***வாரியப்பொல***

யாரிந்த அவர்கள்? ஹிந்தி திரைப்பட வில்லன்கள் போல நடு வீதியில் துகிலுரிந்த துச்சாதனர்கள் என்று யோசிக்கிறீகளா?

நமது மதிப்புக்குரிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் தொண்டரடிப்பொடிகள் தான்! இவை நடந்தது பாரதப்போரில் அல்ல! வடமேல் மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின் போது.

வாழ்க அம்மணியின் ஜனநாயகம்!

---

# முல்லோயாவில் கோவிந்தன் நினைவிற்காய் ஒரு நினைவுத் தூபி

கோவிந்தன் வரலாற்றில், பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான முதல் தொழிலாளி. சுமார் 60 வருடங்களுக்கு முன் முல்லோய தோட்ட போராட்டதின் போது அச் சம்பவம் இடம் பெற்றது.

அன்று தொடக்கம் இன்று வரை, கோவிந்தன் சிரார்த்த தினத்தை அனுட்டிக்க பலரும், பல நிறுவனங்களும் முயற்சி எடுத்தன. முல்லோயா தோட்டத்தின் உடைந்த சாலைகளை தொட்டுக் கொண்டு எத்தனை வாகனங்கள் அங்குமிங்குமாக பயணிக்கின்றன? எத்தனை பேர் லயன் வீடுகளில் உள்ள மக்களுடன் உரையாடிவிட்டுச் சென்றிருப்பர்?

அவை அனைத்தும் தோட்டப்புறத்தின் அனைத்து விடயங்களையும் போல வரலாற்றுடன் இணைந்து விட்டன.


'எத்தனையோபேர் கோவிந்தனுக்கு அஞ்சலி செலுத்த வந்தார்கள். அவை அனைத்தும் வெறும் பேச்சு மட்டும் தான்' முல்லோய தோட்டத்துக்கு முதல் தடவை சென்றவேளை, பெரியசாமி அவ்வாறு கூறிய போது நாமே நம்மை சபித்துக் கொண்டோம்.

கோவிந்தனுக்காக நினைவுச்சின்னத்தை அமைக்க உற்சாகப்படுத்தியது டெல்ட்டா தோட்டத்தைச் சேர்ந்த தோழர் வாசுதேவன்.

டெல்ட்டா தோட்டத்திலிருந்து முல்லோயா மலையை சுட்டிக்காட்டிக் கொண்டு அவர், 'அது தான் முல்லோயா தோட்டம். அத் தோட்டத்தைச் சேர்ந்த கோவிந்தன் தான் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான முதல் தோட்டத் தொழிலாளி' எனச் சொன்னார். நினைவுத் துாபி தொடர்பான யோசனை பின்னர் அவராலேயே முன் வைக்கப்பட்டது.



கோவிந்தன் நினைவுச் சின்னத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஜனவரி 28ம் திகதி, முல்லோயா தோட்ட மக்களின் முகங்களில், 'கோவிந்தனுக்காக இவ்வளவு நாள் சென்றாவது இவ்வாறானதொரு நோக்கத்தை நிறைவேற்றுவது எவ்வளவு நல்லது' என்று எழுதியிருந்தது தெளிவாகத் தெரிந்தது.



தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைக்காகப் போராடவும், வாழ்வை அர்ப்பணிக்கவும் முடியும் என்பதை 1940 ஜனவரி 15ம் திகதி சுட்டிக் காட்டிய முல்லோயா தோட்டத்தைச் சேர்ந்த தோழர் கோவிந்தன் பற்றிய நினைவாக அமைக்கப்படும் நினைவுத்துாபிக்கு அடிக்கல் நாட்டப்படும் எனக் கூறும் சுலோகம் உயர்த்தப்படும் போது, முல்லோயா தோட்ட மக்களின் கண்கள் கலங்கியிருந்தன. அக் கண்களில், நீண்ட எதிர்பார்ப்பின் அடையாளங்கள் தென்பட்டன.

நிமல்கா பர்னாந்து அடிக்கல் நாட்டும் சந்தர்ப்பத்தில் அம்மக்களின் கண்களில் பிரகாசத்தைக் காண முடிந்தது.

கோவிந்தன் நினைவுக் கூட்டம் ஜனவரி 31ம் திகதி ஹட்டன் நகரத்தில் இடம் பெற்றது. தோட்டத்தின் இளைய சமுதாயத்துக்கு அன்று, கோவிந்தன் தொடர்பான நினைவுகள் நிரந்தரமாகியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கூட்டத்தில் உரையாற்றிய சுனந்த தேசப்பிரிய, பேராசிரியர் காமினி கீரவல்ல, டி. ஐயாத்துரை, ஏ.லோரன்ஸ், தோட்டப்புற வீடமைப்பு பிரதி அமைச்சர் பி.சந்திரசேகரன் ஆகியோர் பேச்சில் கோவிந்தனின் நினைவு நாளை தோட்ட மக்களின் உரிமைக்கோரிக்கைக்கான ஒரு நாளாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றனர்.

பல வேதனைகளுக்கு மத்தியில் நாம் உழைக்கும் ஒரு நாள் சம்பளத்தை கோவிந்தன் நினைவுச் சின்னத்துக்காக சமர்ப்பிக்க அன்று ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லுாரியில் ஒன்று கூடிய தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டனர்.

கோவிந்தன் நினைவுச் சின்னதிற்காகச் சிங்கள மக்களிடம் பணம் அறவிடவும் கோவிந்தன் ஞாபகார்த்த குழுவின் அனுமதியும் கிடைத்துள்ளது. கோவிந்தன் ஞாபகார்த்தம் இன்னுமொரு ஞாபகார்த்தமாக அமையாது இருக்க, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரதும் பொறுப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் முல்லோயாத் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பைச் சிதறடிப்பது என்பது முழுத் தொழிலாள மக்களையும் வஞ்சிப்பதற்கு ஒப்பானதாகும்.

# வடமேல் மாகாண சபை :
# தேர்தல் ஜனநாயகத்தின் சுயரூபம்!

வடமேல் மாகாணசபை தேர்தல் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. அடித்தார்கள், துப்பாக்கி கொண்டு மிரட்டினார்கள், இலக்கத் தகடற்ற வாகனங்களில் வந்து கட்டுக்கட்டாக வாக்குப் போட்டார்கள், வாக்குப் போட வந்த மக்களை வாக்களிப்பு நடந்து விட்டதாகத் திருப்பி அனுப்பினார்கள் என்றெல்லாம் தகவல்கள் தொடர்பு சாதனங்களில் வெளிவந்தன. சந்திரிகாவின் பொ.ஐ.மு. அரசாங்கம் எல்லா நம்பிக்கைகளையும் இழந்த ஒரு அரசாங்கமாகி விட்டதா என்று திடுக்கிட்டுப் போய் இருக்கிறார்கள் சிலர். செய்தியாளர்களின் அறிவிப்புக்கள் பொய்யாக இருக்கக் கூடாதா என்ற நப்பாசை வேறு அவர்களுக்கு.

ஆனால், இலங்கையின் தேர்தல் ஜனநாயக வரலாற்றை அவதானித்து வருபவர்கட்கு இது ஒன்றும் அதிர்ச்சி தரும் விடயம் அல்ல. எல்லாக் காலங்களிலும் இந்த தேர்தல் ஜனநாயகம் வன்முறையை தனது சகாவாகக் கொண்டே இயங்கி வந்திருக்கின்றது. கள்ளவோட்டு வாக்குப் பெட்டிகளை மாற்றுவது, போத்தல், காசு என்பவற்றுக்கு வாக்காளர்களை விலைக்கு வாங்குவது என்று எல்லா விதமான 'ஜனநாயக" வழிகளை நடைமுறைப்படுத்தும் போதும் அது வன்முறையைக் கையாண்டே வந்தது.

ஆனால், வெளிப்படையாக ஆளுங்கட்சியின் ஆதரவுடன் இந்த வன்முறைகள் நடக்கத் தொடங்கியது யாழ் (1982) மாவட்ட சபை தேர்தல்களில் என்று சொல்லலாம். அதற்குப் பிறகு தேர்தல் நடந்த எல்லாக் காலங்களிலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் திரும்பவும் ஆட்சியில் இருப்பதற்காக என்னென்ன வழிகளைக் கையாள முடியுமோ அந்தந்த வழிகளைக் கையாண்டு பதவியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு சட்ட சம்பிரதாயமாகவே தேர்தல் நடந்து வந்திருக்கிறது. 1984 ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி வேட்பாளரான கொப்பேக்கடுவவின் வாக்குச்சீட்டே வேறொருவரால் போடப்பட்டிருந்தது ஒன்றும் சாதாரண விடயமல்ல. ஜனாதிப்தி பிரேமதாச மரணமடைந்த போது அவரது சுச்சரித்த வீட்டில் வாக்குப்பெட்டிகள் குவிந்து கிடக்கக் காணப்பட்டதும், ஐ.தே.க.வினர் பொலிஸ் பாதுகாப்புடன் தொடர்ந்து வெற்றி பெற்று வந்ததும் தெரியாததல்ல.

1994 இல் நிலைமை சற்று மாறியிருந்தது. அதுவரை காலமும் கள்ளவாக்கு நடவடிக்கையில் "தொழில் திறமை"யுடன் செயற்பட்டு வந்த பல ஐ.தே.க.வினர் உயிருடன் இருக்கவில்லை. அல்லது செயற்பட முடியாமல் இருந்தார்கள். தவிர, ஐ.தே.க.வின் அதுவரைகால வெற்றி ரகசியத்தை அறிந்து கொண்ட ஒரு புதிய பரம்பரை பொ.ஐ.மு.விலும் உருவாகியிருந்தது. அப்படியிருந்தும் பல மோசடிகள் நடந்தன. முடிவுகள் மக்களது வெற்றி எதிர்பார்ப்புடன் ஒத்துப்போனதால் இந்த மோசடிகள் அவ்வளவாக எடுபடவில்லை. ஐ.தே.க.வுக்கும் பெரிதாக எதையும் செய்யும் தார்மீகப் பலம் இருக்கவில்லை. அவ்வளவுக்கு அது அரசியல் ரீதியாகப் பலவீனப்பட்டுப் போயிருந்தது.

வடக்கு கிழக்கு, குறிப்பாக வடக்கில் தேர்தல் என்ற பேரில் நடந்த் மாபெரும் மோசடியை "ஜனநாயக மீட்டெடுப்பு"க்காக அவதரித்த தேவதையாக தன்னை வெளிப்படுத்திக் கொண்ட சந்திரிகா அம்மையார் அங்கீரித்தார். அவ்வாறு வெளிப்படுத்திக் கொண்ட சந்திரிகாவை நம்பிய ஜனநாயகவாதிகள் மற்றும் மனித உரிமையாளர்கள் அங்கீகரித்தார்கள். ஜனநாயகத்தை பாதுகாக்க வென்று வந்த புதிய அரசாங்கம், அது ஆட்சியமைக்கும் போதே ஊழல் பெருச்சாளிகள், மோசடிக்காரர்கள் என்று சகல ஜனநாயக விரோதிகளுடனும் கூட்டுக் சேர்ந்து கொண்டு ஆட்சியமைத்தது.


ஜனநாயகம் என்றால் என்ன என்று அன்றிலிருந்து அது மக்களுக்குப் போதிக்க ஆரம்பித்தது. தொழிற்சங்கப் போராட்டங்களை ஆயுதமுனையில் நசுக்குவது முதல், தேர்தலில் பெட்டிகளை நிரப்புவது வரை எல்லாமே அதன் புதிய ஜனநாயக வழிமுறைகளாக நடைமுறைக்கு வந்தன. சமாதானத்துக்கு வழியுத்தம் என்றும், மனிதாபிமான முகத்துடனான யுத்தம் என்றும் புதுவிதமான சொல்லாட்சிகள் நம்நாட்டு எழுத்துக்களுக்கு அறிமுகமாகின. நோக்கம் - அது எங்கள் ஜனாதிபதியின் மனதில் உதிக்கின்ற ஒரே காரணத்தினாலேயே புரட்சிகரமான மக்கள் நலனுக்கான நோக்கமாகி விடும் - நல்ல நோக்கமாக இருந்தால் அதை எப்படியும் அடையலாம் என்ற ஒரு கோட்பாட்டை அவர் பிரபல்யமாக்கினார். வெளிப்படையான மிரட்டல் முதல் பொய் கூறுவதுவரை எல்லாமே நியாயமானவை என்றாகி விட்டது. தேர்தலில் பொ.ஐ.மு. தவிர வேறு யார் வெற்றி பெறுவதும் நியாயமல்ல என்பதற்கு நிறையக் காரணங்கள் இருந்தன அவர்களுக்கு. ஐ.தே.க.-வின் 17 வருட ஆட்சி: ஜே.வி.-பி.யின் படுகொலை அரசியல் என்பவை தம்மைத் தவிர ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேறு யாரும் இல்லை என்ற பொ.ஐ.மு. நிலைப்பாட்டை உறுதிப்படுத்த போதுமானவை. எனவே அதைச் செய்ய எதையும் செய்யலாம்.

வாக்காளர்களை திருப்பி அனுப்பலாம். துப்பாக்கியைக் காட்டி மிரட்டலாம், மீறினால் அடித்து உதைக்கலாம், பெண்கள் என்றால் துகிலுரிதலைக் கூட செய்யலாம், கொலை செய்யலாம். கொலை செய்யப்படுபவரை கொண்டே புதைகுழியை வெட்டுவிக்கலாம், வோட்டுக்களை கட்டுக் கட்டாக பலர் முன்நிலையிலும் பெட்டிகளில் போட்டு நிரப்பலாம்.

சட்டம், நீதி, பொலிஸ் இவையெல்லாம் பொ.ஐ.மு. வினர்க்குப் பொருந்தாது. ஏனென்றால் அவர்கள் ஜனநாயகத்தை மீட்க வந்தவர்கள் இவையெல்லாவற்றையும் மீறிய சக்தியும் அதிகாரமும் அவர்களுக்கு இருக்கிறது. பொலிஸின் துப்பாக்கிகள் இவர்களை நோக்கி உயராது. ஏனென்றால் அவைக்கு பொ.ஐ.-முவுக்கு எதிராக வெடிக்கும் அதிகாரம் இல்லை.

ஆக, வடமேல் மாகாணசபை தேர்தலில் நடந்த சம்பவங்களில் அதிர்ச்சி அடைய என்ன இருக்கிறது?

உண்மையில் மற்றெல்லாத் தேர்தல்களையும்விட, தேர்தல் ஜனநாயகத்தின் உண்மை முகத்தை





தெளிவாகக் காட்டியிருக்கிறது அது. இந்த ஜனநாயகம் வன்முறையின் மீது கட்டி எழுப்பப்பட்ட ஒரு ஜனநாயகமே என்பதையும், வாக்காளர்கள், வாக்குரிமை என்று அது பேசுவதெல்லாம் தாம் செய்வதை மக்களின் பேராலும் வாக்கின் பேராலும் செய்வதாகச் சொல்வதேயன்றி வேறல்ல என்பதையும் தெளிவாகக் காட்டியிருக்கிறது அது. வாக்களிப்பு எப்போதும் எமக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை வன்முறையை அது வெளிப்படையாக கைக்கொள்வதில்லை. ஆனால், அந்த நம்பிக்கை தகர்ந்ததும் அது வன்முறையை வெளிப்படையாக கையாளத் தொடங்கி விடுகிறது.

இதிலே வேடிக்கை என்னவென்றால் பாராளுமன்ற ஆசனத்திற்காக ஆயுத முனையில் தேர்தலை நடாத்துகிற இந்தக் கட்சிகள் தான், வடக்கு - கிழக்கில் ஜனநாயகத்தைப் பேணப் போவதாகவும், பயங்கரவாதத்தை ஒழிக்கப்போவதாகவும் கூச்சலிடுகின்றன. விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்றும், வடக்குக் கிழக்கிலுள்ள மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்தெடுத்து விட்டார்ககள் என்றும், அவர்களிடமிருந்து அங்குள்ள மக்களை விடுவிக்கப் போகின்றோம் என்றும் பீற்றுகின்றன. ஆக, அங்குள்ள மக்களை புலிகளிடமிருந்து மீட்டெடுத்து இவர்கள் வழங்கப் போகின்ற ஜனநாயகம், வாக்காளர்களை வாக்களிப்பு நிலையத்திலிருந்து விரட்டுகிற ஜனநாயகம் தானா? தேர்தல் என்று ஒன்றை பேருக்கு வைத்து விட்டு தாம் மட்டுமே அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பது தானா? மாற்றுக் கட்சிகளை அடித்தும் கொன்றும் துகிலுரிந்தும் எதிர் அரசியல் கருத்துக்களை முடக்குவது தானா?

அப்படியானால், புலிகளுக்கு மாற்று எதற்காக? அவர்கள் இதைவிட எவ்வளவோ சிறப்பானவர்கள் இல்லையா? குறைந்த பட்சம் ஒரு ஏமாற்றுத் தேர்தலை அவர்கள் நடாத்தாமலாவது இருக்கிறார்களே!

இதனால் தான் 'பிரபாகரனர்பு ஜயவேவா" என்று வடமேல் மாகாண சபையின் சில வாக்காளர்கள் கோசமிட்டார்கள் போலும்!

எது எப்படியோ, இப்போது அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய நெருக்கடி தோன்றியிருக்கிறது. அதாவது வடமேல் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு கோரும் பொதுசனக் கோரிக்கையை எப்படிக் கையாள்வது, அதை ரத்துச் செய்து விட்டு மீண்டும் தேர்தலை நடாத்துவதா அல்லது அதை மறுத்து அதே பாணியில் ஏனைய மாகாண சபைத் தேர்தல்களையும் நடாத்துவதா?

ஏனைய மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப் போட்டது சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டதால், இப்போது அவற்றை நடத்தப்போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. தேர்த கண்காணிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், எதிர்க்கட்சிகள் வடமேல் மாகாண சபை தேர்தலில் நடந்த வன்முறைக்கு எதிராக பலத்த கண்டனக்குரலை எழுப்பியிருக்கிறார்கள். ஜனாதிபதி அவ்வாறு நடந்த நிகழ்வுகளை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிப்பதாக அறிவித்திருக்கிறார். ஆயினும், இந்த வன்முறைகட்கும் தனக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்று காட்டும் ஜனாதிபதியின் முயற்சிகள் எவையும் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை.

எவ்வாறாயினும், எதிர்வரும் தேர்தல்கள் எப்படி நடக்கப்போகின்றன என்பதற்கு ஒரு தெட்டத் தெளிவான உதாரணமாக இந்தத் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. இன்று நியாயமான தேர்தலுக்காக குரல்கொடுக்கும், ஐ.தே.க. ஒரு கட்சியென்ற முறையில் தான் பாதிக்கப்பட்டதாக அவ்வாறு குரல் எழுப்புகிறதே ஒழிய ஜனநாயகத்தின் மீதான அக்கறையினால் அல்ல என்பது வெளிப்படை.


ஆக, இன்று ஜனநாயகமான தேர்தலுக்காக குரல் கொடுத்து நிற்கும் எல்லோரும் ஒரு விடயத்தில் கவனத்தைக் செலுத்தியாக வேண்டும். அதாவது தேர்தல் ஜனநாயகம் என்பது பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், அதற்கான மக்கள் எழுச்சியைக் கட்டி எழுப்ப விரும்பினால், அதை ஐ.தே.கவோ மற்றெந்த ஏமாற்றுக் கட்சிகளையோ பயன்படுத்தாத விதத்தில் செயற்படுத்துவதில் கவனமாக இருக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, இந்த தேர்தல் ஜனநாயகத்தின் ஜனநாயகத் தன்மை பற்றியும் கொஞ்சம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

விசேமறுப்பயன்



தேர்தல் ஜனநாயகத்தின் காவலர்கள்!



இந்தோனேசிய இரும்புப் பிடியிலிருந்து

# கிழக்கு திமோருக்கு விடுதலை?

கடந்த ஜன. 27ம் திகதி அன்று இந்தோனேசியாவில் வெளியான செய்தியொன்று பலருக்கும் வியப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. ஆம், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தோனேசியாவின் இரும்புப் பிடிக்குக் கீழ் நசுக்கப்பட்டு வந்த கிழக்குத் திமோர் மக்களுக்கு விடுதலை வழங்கப்பட முடியுமென்ற அறிவிப்பை இந்தோனேசியா அரசாங்கம் அன்று அறிவித்தது. 1975இல் போர்த்துக்கல் நாட்டின் காலனியாக இருந்த கிழக்குத் திமோரை ஆக்கிரமித்த இந்தோனிசியா, 1976 இல் அதைத் தனது 27வது மாகாணமாக இணைத்துக் கொண்டது. ஜனாதிபதி சுகார்ட்டோவின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் வாழ்ந்த ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்குத் திமோர் மக்கள் தமது சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடி வந்தார்கள். இந்தோனேசிய ஆக்கிரமிப்புக்கு எதிரான கெரில்லா யுத்தத்திலும், எதிர்ப்புப் போராட்டத்திலும் கிட்டத்தட்ட 2 லட்சம் பேரைப் பலி கொடுத்த கிழக்குத் திமோர் விடுதலைப் போராட்டம் தொடர்ந்தும் நடந்து வந்தது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்தோனேசியாவில் எழுந்த மாபெரும் மக்கள் எதிர்ப்புக்கள் மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக, சர்வாதிகாரி சுகார்ட்டோ பதவி துறக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். அவரது பதவி துறப்பின் பின் இந்தோனேசியா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பி.ஜே. ஹபிப்பீ, கிழக்குத் திமோருக்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை வழங்க முன்வந்தார். ஆயினும் கிழக்குத் திமோர் மக்களின் பிரிந்து செல்லும் பூரண விடுதலைக்கான அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதற்கான கோரிக்கையை இந்தோனேசியா அரசாங்கம் மறுத்து வந்தது.

கிழக்குத் திமோரை, பலவந்தமாக தமது நாட்டின் ஒரு மாகாணமாக இந்தோனேசியா இணைத்துக் கொண்டதை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்கவில்லை என்ற போதும், 20 ஆண்டுகளாக அது தனது ஆதிக்கத்தை கிழக்குத் திமோர் மீது கொண்டிருந்தது. ஆனால், இப்போது திடீரென கிழக்கு திமோர் மக்களுக்கு பூரண சுயாட்சி வழங்கப்பட முடியும் என்று அது அறிவித்திருப்பதற்கு காரணமாக, இந்த அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அவுஸ்திரேலியா கிழக்குத் திமோர் தொடர்பான தமது நீண்டகால நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள விருப்பதாக தெரிவித்தது என்று கூறப்படுகிறது. ஆனால் கிழக்குத் திமோர் மீதான இந்தோனேசியாவின் படுகொலை நடவடிக்கைகட்கு தொடர்ச்சியாக உறுதுணையாக இருந்து வந்தது அவுஸ்திரேலியா என்பது ஒன்றும் இரகசியமல்ல.

மேற்கத்தைய நாடுகளில் அவுஸ்திரேலியா மட்டுமே இந்த ஆக்கிரமிப்பை அங்கீகரித்த ஒரேயொரு நாடாக இருந்தது மட்டுமல்லாமல், அது இந்தோனேசிய இராணுவத்திற்கு உதவிகள், மற்றும் ஆயுதப் பயிற்சிகள் என்பவற்றை வழங்கியும் வந்தது என்ற குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை. கிழக்குத் திமோர் மக்கள் மீதான இந்தோனேசியா அரசாங்கத்தின் படுகொலை நடவடிக்கைகட்கு எதிராக வாய் திறக்காமல் இருந்தது மட்டுமல்லாமல், கிழக்குத் திமோரில் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்ட விசேட படைக்கும் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கி வந்தது. கிழக்கு திமோர் அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை வெட்டிக் குறைத்தது. அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய கிழக்குத் திமோர் மக்களை நாடு கடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. மொத்தத்தில் அது தனது மனித உரிமைகளுக்கான பொறுப்புகளை இந்தோனேசியாவுடனான இராஜதந்திர உறவுக்காக தட்டிக் கழித்து வந்தது. கிழக்குத் திமோரில் திட்டமிட்டு குடியேற்றப்பட்ட இந்தோனேசியர்களது குடியேற்றத்தை மறுத்து வந்த ஒரேயொரு நாடான போர்த்துக்கலுக்குத் தான் கிழக்குத் திமோர் அகதிகள் போக வேண்டும் என்று தொடர்ந்து கூறி வந்தது. இந்தோனேசியாவின் பிரபலமான பல மனிதப் படுகொலைகள் நடந்த பின்னும் 1995இல் அவுஸ்திரேலியா இந்தோனேசியாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது.

ஆனால், ஜனாதிபதி சுகார்ட்டோவின் பதவி விலகலின் பின் கொஞ்சம் கொஞ்சமாக பின்வாங்கிய அவுஸ்திரேலியா கடந்த ஜனவரி நடுப்பகுதியில் கிழக்குத் திமோர் மக்களின் சுயநிர்ணய உரிமையை தான் ஆதரிக்கப்போவதாக அறிவித்தது. இது உண்மையில் இந்தோனேசியா அரசாங்கத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் வியப்பில்லை. கிழக்குத் திமோர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றைக் காணும் சர்வதேச முயற்சிக்கு இதுபெரும் பாதகமாக அமையும் என்று இந்தோனேசியா அரசாங்கம் அப்போது கருத்துத் தெரிவித்திருந்தது. ஆயினும் அவுஸ்திரேலியாவின் இன்றைய அரசாங்கம் கிழக்குத் திமோர் மக்களுக்கு ஒரு சுயாட்சியை வழங்குவதும் அதன் பிறகு அவர்கள் பிரிந்து போவது தொடர்பாக முடிவெடுக்க ஒரு வாக்கெடுப்பை நடாத்துவதுமே இப்பிரதேச பிரச்சினையை தீர்த்து அந்நாட்டை வளமூட்ட உள்ள சிறந்த வழிமுறையாகும் என்று கருதுவதாக அதன் வெளிநாட்டமைச்சர் அலெக்சாண்டர் டோலர் தெரிவித்தார்.

கிழக்குத் திமோரில் படுகொலைகளிலும், பாலியல் பலாத்காரங்களிலும் ஈடுபட்டு வரும் இந்தோனேசியா படையினரின் நடவடிக்கைகள், "இனத்துவச் சுத்திகரிப்பு" என்ற இந்தோனேசியா அதிகார பீடத்தின் உத்தரவிற்கமையவே நடந்து வருகின்றன என்று கூறப்படுகின்றது. கிழக்குத் திமோர் என்ற தேசிய உணர்வை இல்லாமல் ஆக்குவதற்காக, அதாவது 'திமோரியன் இரத்தத்தை ஐதாக்குதற்கான குடியேற்றங்கள் படுகொலைகள், பாலியல் பலாத்காரங்கள் செய்யப்படுவது மட்டுமல்லாமல், கிழக்குத் திமோரிய சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டு இந்தோனேசியா கலாசாரத்துடன் இணைந்து வாழ விடப்பட்டு வருகிறார்கள். சில சிறுவர்கள் படைஅதிகாரிகளுக்கு பரிசாக வழங்கப்படுவதும் உண்டு. மக்களுக்கு சரியான சுகாதார வசதியோ, கல்வியோ வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக கிழக்கு திமோர் உலகில் மிகவும் கல்வித்தரம் குறைந்த பிரதேசங்களில் ஒன்றாக மாறி உள்ளதுடன் 75வீதமானவர்கள் வேலையற்றவர்களாகவும் உள்ளனர்.

சுகார்ட்டோவின் பதவி விலகலின் பின்பும் கூட எந்தவிதமான முன்னேற்றங்களும் கிழக்குத் திமோர் மக்களைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கவில்லை. இரும்புக் கம்பிகளையும், ஆயுதங்களையும் ஏந்திய படையினர் வாகனங்களில் வந்திறங்கி வீடு வீடாகச் சென்று இளைஞர்களைப் பதம் பார்க்கும் செயல் நடந்து கொண்டு தான் இருந்தது.

இதேவேளை இந்தோனேசியாவிற்கும் போர்த்துக்கல்லுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நியூயோர்க்கில் நடந்து வந்தது. அதன் அடுத்த கட்ட பேச்சு நடக்க இன்னும் ஒரு வாரம் இருக்கும் போதே இந்தோனேசியா அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

அமைச்சரவைக் கூட்டம் பாதுகாப்பு தொடர்பாக எடுத்த முடிவுகள் பற்றி அறிவிப்பதற்காக நடந்த செய்தியாளர் மாநாட்டின் போதே வரலாற்றில் முதல் தடவையாக இந்தோனேசியா அரசாங்கத்தின் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த மாநாட்டில் பேசிய இந்தோனேசியா தகவல் தொடர்பு துறை அமைச்சர் யூனூஸ் யோஸ்பியா கிழக்குத் திமோர் மக்களுக்கு பிரதேச சுயாட்சியும் பிறவும் வழங்கப்படுவது பற்றி பாராளுமன்றம் ஆலோசிக்கும் என்று தெரிவித்தார். எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள தேர்தலின் பின் வரவிருக்கும் புதிய பாராளுமன்றம் இந்த முடிவை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் இந்தத் தீர்வு அந்த மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாவிடின் புதிய மக்கள் சபை கிழக்குத் திமோர் மக்கள் பிரிந்து செல்வதா இல்லையா என்று தீர்மானிக்கும் என்று தெரிவித்தார்.

வியப்பூட்டும் இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வந்தால் பெரும் மகிழ்ச்சிக்குரியதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஜகார்த்தாவின் அரசியல்வாதிகள் சொல்வதில் அதிகம் நம்பிக்கை கொள்ள முடியாது என்கிறார் கிழக்குத் திமோரின் பிரசித்தி பெற்ற சமாதானவாதியான யோஸ் நாமோஸ் கிராட்டோ. அவர் பிபிசிக்கு அளித்த பேட்டியொன்றில் இந்தோனேசியா துருப்புக்கள் அங்குள்ள மக்களைக் கொல்வதும், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குவதும், சித்திரவதை செய்வதும் நடந்து கொண்டே இருக்கின்றன. ஜகார்த்தா அரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதில் எனக்கு அக்கறை இல்லை. ஆனால் இந்தோனேசியாவின் பொருளாதார நிலை இனியும் யுத்தத்தைத் தொடரக் கூடிய அதன் வளங்களை வீணடிக்க முடியாத நிலையிலேயே உள்ளது. கிழக்குத் திமோரிய மக்கள் விடுதலை அடைய அதிக காலம் எடுக்காது என்று தெரிவித்திருந்தார்.

கிழக்குத் திமோருக்கான மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சித் திட்டம் ஒன்றைப் புதிய ஜனாதிபதி பி.ஜே.ஹபிப்பீ அறிவித்திருந்தார் என்ற போதும் அந்தத் தீர்வு பயனற்றது என்று நிராகரித்த கிழக்குத் திமோர் வலைப்பின்னல் செயலமைப்பு (East Timur Action Network) ஒரு சுயநிர்ணய உரிமைக்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துமாறு கோரியது. இதை ஆதரிக்குமாறு அது அமெரிக்க ஜனாதிபதிக்கும் கோரிக்கை விட்டது. கடந்த ஜனவரி 10ம் திகதி அமெரிக்க செனட் சபை சர்வதேச கண்காணிப்பின் கீழான ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்துவதை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் ஜனாதிபதி ஹபிப்பீயின் திட்டம் மிகவும் போதாமை கொண்ட ஒரு திட்டம் என்றும் கிழக்குத் திமோரிய மக்களின் வாக்குரிமையை தாம் ஆதரிப்பதாகவும் தெரிவித்தது.

கடந்த சில வாரங்களாக கிழக்குத் திமோரின் சுயநிர்ணய உரிமைக்கான பலத்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்தன. அங்குள்ள மக்கள் தொடர்ந்தும் உறுதியாக தமது போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். ஜனாதிபதியின் புதிய திட்டத்தை நிராகரித்த அவர்களது போராட்டமும் அதற்கான மக்களின் ஆதரவும் உலக அளவிலான ஆதரவும் குறைந்த பட்சம் இப்படி ஒரு அறிவிப்பையாவது செய்ய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

எப்படியோ கிழக்குத் திமோரின் போராட்டத்தின் வெற்றிக்கனியை சுவைக்க அதன் எண்ணை வயல்கள் மீது கண்வைத்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் இப்போது ஆதரவாக திரும்பியிருப்பது தெரிகிறது. 1976 இல் அது பலவந்தமாக இந்தோனேசியாவுடன் இணைக்கப்பட்ட பின் அதன் சனத்தொகையின் மூன்றில் ஒரு பங்கினை கிட்டத்தட்ட 2 இலட்சம் மக்களை பலிகொடுத்து அம்மக்கள் நடாத்திய போராட்டத்தினைப் பற்றி இதுவரை யாரும் பெரிதாக அக்கறை காட்டவில்லை. அதுவும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களும் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைத் தீர்மானங்களும் கிழக்குத் திமோர் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த போதும் இதுவரை யாரும் அதைக் கவனிக்கவில்லை.

ஆனால் இப்போது கவனிக்கிறார்கள். ஏன்?

மரம் பழுத்தால் வரும் வெளவால்கள் போல.

கிழக்குத் திமோர் மக்கள் கவனமாக இருப்பார்கள் என்று நம்புவோம்.

சஞ்சித்.

# "முஸ்லீம் தலைமைத்துவத்தை மீளக் கட்டியெழுப்புவோம்"

**முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி பிரச்சாரச் செயலாளர்: அஸீஸ் நிஸாருத்தீன்**

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தற்போது இளைஞர்களைக் கொண்டு உத்வேகத்துடன் செயற்பட்டு வரும் ஒரு கட்சியாகும். இக்கட்சி 80கள் அளவில் பதியுத்தீன் மஹ்மூத், எம்.ஐ.எம். மொஹிதீன் போன்றவர்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது. பெரிதும் அறியப்படாத நிலையிலிருந்த இக்கட்சியை அதன் தலைவராக இருந்த மொஹிதீன் கலைத்து விட்டு முஸ்லிம் காங்கிரசில் இணைந்தார். இக்கலைப்பைத் தொடர்ந்து முஸ்லிம் முற்போக்கு முன்னணி என்ற இளைஞர் அணி எஞ்சியிருந்த அக்கட்சிப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அக்கட்சியைப் பொறுப்பேற்றது. முற்றிலும் இளைஞர்களைக் கொண்டதாக தற்போது செயற்பட்டு வரும் இக்கட்சியின் பிரச்சாரச் செயலாளரான அஸீஸ் நிஸாருத்தீன் உடனான நேர்காணல் கீழே தரப்படுகிறது.



**அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் இருந்து ஆரம்பிப்போம். (வடமேல் மாகாண சபை) தேர்தலில் போட்டியிட்ட ஒரு கட்சி என்ற வகையில் உங்கள் அவதானங்களும் அபிப்பிராயங்களும் எவ்வாறு உள்ளன?**

நடந்து முடிந்த தேர்தல் சுத்த மோசமான தேர்தல் என்று முழு உலகமுமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதில் இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால், எந்த சிறுபான்மைக் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்யப்பட்டது. தேர்தலில் போட்டியிட்ட ஒரேயொரு சிறுபான்மைக் கட்சி என்ற வகையில் எமக்கு வாக்குகள் அளிக்கவிடாத வகையில் பாரிய கெடுபிடிகள் நடந்தன. இலங்கையில் எந்த நோக்கத்திற்காய் மாகாண சபைத் தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் இந்தத் தேர்தலால் தவிடு பொடியாக்கப்பட்டுள்ளது.

**இன்னொரு சிறுபான்மைக் கட்சியான முஸ்லிம் காங்கிரசும் இத்தேர்தலில் ஆளும் கட்சியான பொ.ஐ.முவுடன் இணைந்து போட்டியிட்டது. பொ.ஐ.மு. அதிக ஆசனங்களைப் பெற்றவேளை மு.காவுக்கு எதுவும் கிடைக்காமல் போனதற்கான காரணமென நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?**

மு.கா., பொ.ஐ.முவுடன் கூட்டுச் சேர்ந்த ஆரம்பக் கட்டங்களிலேயே நாங்கள் சொல்லியிருந்தோம். அது தனது தனித்துவத்தை இழந்து விடுமென்று. அதற்கு இன்னொரு நல்ல உதாரணம் தான் நடந்து முடிந்த இந்தத் தேர்தல். ஏனென்றால், ஒரு சிறுபான்மைக் கட்சியாக இருந்தாலும் ஒழுங்கான, நீதியான முறையில் இத்தேர்தலை நடத்தியிருந்தால் அதற்கு ஒரு ஆசனமாவது கிடைத்திருக்கும்.

மு.கா. சந்திரிகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் முஸ்லிம் சமூகத்தின் நலனைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டதல்ல. அவர் தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகச் செய்த ஒப்பந்தமே அது. அதில் முஸ்லிம் நலன் பற்றி அவர் எதையும் முன்வைக்கவில்லை. அவர் கேட்டது ஒரு முழு மந்திரிப் பதவியும், இரண்டு மூன்று அரை மந்திரிப் பதவியும் பாராளுமன்றத்தில் ஒரு முக்கிய பதவியும் தான். முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்கான எந்த ஒரு கொள்கையையும் அவர் முன்வைத்திருக்கவில்லை. நாங்கள் தனித்துப்போட்டியிட முடிவெடுத்த பிறகு தான் மு.காவும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப்போட்டியிட முடிவெடுத்தது. ஆனால், எதிராக நின்ற சந்திரிகா அஷ்ரஃப்புக்கு சொன்னது என்னவென்றால், நீங்கள் தனித்துப் போட்டியிடுவதானால், பொ.ஐ.முவில் கிடைத்த பதவிகள், சலுகைகளை விட்டு விட்டுச்சென்று போட்டியிடுங்கள் என்று. அஷ்ரஃப் அந்த எச்சரிக்கைக்கு அடிபணிந்து நடந்தார். இதிலிருந்து விளங்குவது என்னவென்றால், முஸ்லிம் கட்சியொன்று பெரும்பான்மை கட்சியோடு இருந்தால் அதன் தனித்துவத்தைக் கட்டிக்காத்துவிட முடியாது போய்விடும் என்பதாகும். பொ.ஐ.மு. முஸ்லிம்களின் விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதிலிருந்து அதை நாம் யதார்த்தபூர்வமாய் இன்று காண்கிறோம். ஹஜ், சிவராத்திரி விடுமுறை ரத்துச் செய்யப்பட்ட போதிருந்த நிலைப்பாட்டை இதற்கு உதாரணமாய்ச் சொல்லலாம். எதிர்ப்புக் காட்ட முடியாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கிறார். இப்போது அவர் நினைப்பதெல்லாம் எவ்வாறு தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வது என்பது பற்றித் தான். சமூக ரீதியான சிந்தனையை அவரால் முன்வைக்க முடியாது. ஓர் அடங்கிபபோன நிலைக்கு மாறிப்போயிருப்பது தான் பொ.ஐ.முவுடன் இணைந்ததால் அவருக்கு கிடைத்த பரிசு. அவர் இன்று செல்லாக்காசாய் மாறியுள்ளார். அமைச்சரவையில் அவர்களுடன் இருந்தும் ஓர் ஊமையாய்த் தான் இருக்க வேண்டிய நிலை அவருக்கேற்பட்டிருக்கிறது. இதெல்லாம் அக்கட்சியின் தோல்விக்கான காரணங்களாய் இருக்க முடியும்.

**மேற்சொன்ன மு.காவின் நிலைப்பாட்டிலிருந்து இன்னொரு முஸ்லிம் கட்சியான உங்கள் கட்சி எந்த இடங்களில் வேறுபடுகிறது...? எந்தக் குறிக்கோள்களுடன் நீங்கள் இயங்குகிறீர்கள்?**

மு.காவின் ஆரம்பம் பாரிய எதிர்பார்ப்பாய் இருந்தது. அதிலும் கூடிய எதிர்பார்ப்பை, நம்பிக்கையைத் தந்தது. அவர்கள் பேசிய கொள்கை இன்று அவர்களிடம் இல்லை. அஷ்ரஃப்பின் வருகை நிகழ்ந்த வேளை இஸ்லாமியத் தலைமைத்துவம் ஒன்றை வழங்க வேண்டும். பெரும்பான்மைக் கட்சிகளால் ஏமாற்றப்பட்ட முஸ்லிம்கள் தனித்துவத்துடன் இயங்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் முழங்கினார்கள். இதனால் மக்கள் ஆதரவு கிடைத்து. ஆனால், பதவி கிடைத்த பிறகு எல்லாம் மாறிவிட்டது.

இது பொதுப் பிரச்சினையானாலும், அவரின் சொந்தப் பிரச்சினையானாலும் அவர் எடுக்கும் நிலைப்பாட்டிலிருந்து இதை நாம் விளங்கிக்கொள்ளலாம். ஒலுவில் பங்களா பிரச்சினை வந்தபோது பாராளுமன்றத்திலிருந்து எழும்பிப்போனார். மற்றது வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தோல்வியுற்று பதவி, பிரதிநித்துவம் கிடைக்காததால் தனித்துப் போட்டியிடுவோம் என்று சூளுரைக்கிறார்.


**நீங்கள் சொல்லவருவது என்னவென்றால், மு.கா. தான் கொடுத்த வாக்குறுதியை மீறி அது வேறு பாதையில் போகத்தொடங்கியதே முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் உருவாக்கத்திற்கு, அதன் அரசியல் முன்னெடுப்புக்கு வித்திட்டது என்றா?**

ஆம், நிச்சயமாக. முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டார்கள். இதை நிவர்த்திக்கும் வகையில் தான் மு.ஐ.வி.மு இலங்கை முஸ்லிம் இளைஞர்களின் அரசியற் சக்தியாக தோன்றி வளர்ச்சியுறத் தொடங்கியது. எல்லா சமூகத்திற்கும் பெரும்பாலும் இளைஞர் அரசியல் அணி இருக்கிறது. (உ-ம்: ஜே.வி.பி, தமிழ் இயக்கங்கள்) ஆனால், முஸ்லிம்களிடம் இருக்கவில்லை. இது இளைஞர்கள் பல திசைக்கும் அடித்துச் செல்லக்கூடிய நிலையைத் தோற்றுவித்திருந்தது. நாங்கள் அவர்களை ஒன்று திரட்டி மு.கா.விட்டுவிட்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலையை, மு.கா. கொச்சைப்படுத்திய ஒரு முஸ்லிம் தலைமைத்துவத்தை மீளக்கட்டியெழுப்பக்கூடிய நிலைக்குக் கொண்டு செல்லத்தக்கதாய் இருக்கிறது.

**மு.ஐ.வி. முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான எம்.ஐ.எம். மொஹிதீன் தற்போது முஸ்லிம் காங்கிரஸில் இருக்கிறார். மு.ஐ.வி.மு. முற்றிலும் இளைஞர் அணியாக இருக்கிறது... இது பற்றி...**

மு.ஐ.வி.முவின் ஸ்தாபக உறுப்பினர்களாக பலர் இருந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற பதியுத்தீன் மஹ்மூத், நீங்கள் குறிப்பிட்ட மொஹிதீன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தக் கட்சி 80களில் ஆரம்பித்திருந்தாலும் இதன் செயற்பாடு மு.காவைப் போல் இருக்கவில்லை. கட்சியின் முக்கிய செயற்பாடாய் அமைந்த ஒரு விடயம், வட கிழக்கு வாழ் முஸ்லிம்கள் தொடர்பான ஒரு பேச்சுவார்த்தை உடன்பாடொன்றை சென்னை சென்று புலிகளுடன் மேற்கொண்டமையே. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தான் மொஹிதீன் கட்சி மாறிச் சென்றார். மு.ஐ.வி.மு. என தற்போது இளைஞர்களைக் கொண்டு இருக்கிற தற்போதைய கட்சி முன்னர் பல அரசியற் செயற்பாடுகளை மேற்கொண்ட முஸ்லிம் முற்போக்கு முன்னணி என்றே அறியப்பட்டிருந்தது. எரியும் பிரச்சினைகளுடே, உதாரணமாக பிரேமதாசவின் ஆட்சியிலேயே அவரின் இளைஞர் படுகொலையை மேடைபோட்டு எதிர்த்த அமைப்பு எமதாகும். அன்றைய அரச பயங்கரவாதம் எப்படி இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது மு.ஐ.வி.முவில் இருக்கிற மு.முற்போக் முன்னணியினரான நாங்கள் அமைத்த மேடைகளில் லலித், காமினி, அலவி, வாசுதேவ, மற்றும் இன்றைய அமைச்சர்கள் பலர் என கலந்து கொண்டார்கள். தனியாக மேடை போட்டுக்கூட்டம் கூட முடியாத நிலையிலிருந்த அன்று, எம்மேடைகள் தான் மக்களுடன் உறவாடுவதற்கான களமாக அவர்களுக்கு இருந்தது.

மொஹிதீன் கட்சி மாறியபின் மு.ஐ.வி.முவில் இருந்த ஏனைய உயர்பீடத்தவர்களுடன் உடன்பாட்டுக்கு வந்து நாங்கள் பொறுப்பேற்றோம். அவர் கட்சியை கலைத்து விட்டுச் சென்றார். வழக்கு மூலம் நாங்கள் அதை மீளவும் தக்கவைத்துக் கொண்டோம்.



**தற்போது முஸ்லிம் காங்கிரசுக்கு முஸ்லிம்களிடையே ஏதோ ஒரு வகையில் இருக்கும் பரந்தளவிலான ஆதரவுக்கு மத்தியில் உங்கள் கட்சியால் எந்தளவு தூரம் தாக்குப் பிடிக்க முடியுமாயிருக்கிறது?**

முக்கியமான கேள்வி. ஆனாலும் நீங்கள் குறிப்பிட்டது போன்ற பரந்த ஆரதவு இன்று அக்கட்சிக்கு இல்லையென்று தான் கூறவேண்டும். அண்மைய தேர்தல் கூட இதற்குச் சான்று. கள்ளவாக்கு போட்டும் கூட அவர்களால் வெற்றிபெறமுடியவில்லை.

மு.காவின் இந்தச் செல்வாக்கு இழப்புக்கு காரணம் என்னவென்று கேள்வியெழுப்பினால் அதற்கான விடையையும் இலகுவாய் நாம் சொல்லி விடலாம். ஆரம்பத்தில் அஷ்ரஃப் அரசியல் யாப்பாக குர்ஆன், ஹதீஸை முன்வைத்தார். அதனால் ஆதரவு பெற்றார். பிறகு அமைச்சர் பதவி கிடைத்ததும் எல்லாம் மறந்தார். அவர் சொன்ன யாப்பு எங்கே? அவர் இப்போது அரசியல் வங்குரோத்துத் தனம் அடைந்து விட்டார். முன்பு குர்ஆன், ஹதீஸ்களோடும், உலமாக்களோடும் மேடையேறியவர் அஷ்ரஃப். இன்று குர்ஆனும் இல்லை. ஹதீஸும் இல்லை. உலமாக்களும் இல்லை. முக்கியமான உலமாக்களெல்லாம் விலகி விட்டார்கள். விலகிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர் ஒரு பௌத்த பிக்குவை ஏற்றுக்கொண்டு போகிறார். அந்த பிக்கு சொல்கிறார். 'அஷ்ரஃப் நல்லவர். அவருக்கு வாக்களியுங்கள்' என்று. இது அவரின் செல்வாக்கு வீழ்ச்சியைக் காட்டுகிறது. பிக்கு ஒருவர் அவரை சிபாரிசு பண்ண வேண்டிய நிலைக்கு இறங்கிப்போயுள்ளார். 'அவர் உண்மையாக முஸ்லிம்களுக்கு சேவை செய்திருந்தால், நியாயமான தலைவராய் நடந்திருந்தால் நிச்சயமாக அவருக்கு முன்பெல்லாம் இருந்ததை விட அதிக வாக்குகள் கிடைத்திருக்கும். சக்தி வாய்ந்த அரசியற் கட்சியாகத் தொடர்ந்தும் நிற்க முடியுமாயிருக்கும். குறித்த காலத்துள் வளர்ச்சியையும், பாரிய வீழ்ச்சியையும் அடைந்த ஒரு கட்சியாக அது போய்விட்டது. எனவே மு.கா எங்களுக்கு ஒரு போட்டியல்ல. அதற்கான தேவையும் எங்களுக்கில்லை. அது மக்களால் ஒதுக்கப்படுகிறதாய் போயுள்ளது. இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைக் கொள்கைகளை தகர்க்கிறதாய் அவரது வெளிப்பாடுகள், வெளியீடுகள் அமைந்து வருகிறது. குர்ஆன், ஹதீஸை யாப்பாகக் கொண்ட ஒரு கட்சியின் தலைவர் சர்ச்சைக்குரிய மனிதராய் போய்க்கொண்டிருக்கிறார். இவரின் இந்த இஸ்லாமிய நம்பிக்கைக்கு முரணான ஒரு செயலுக்கு இதை ஒரு உதாரணமாக சொல்லலாம். அவர் தந்தை செல்வா பற்றி ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அதில் அவர் வானவர்களுக்கும் இவர் தான் தலைவரா என்கிறார். 'சுவர்க்கப் பெண்கள் அவரை வட்டமிட்டுக் கொண்டிருப்பதாய்ச் சொல்கிறார். இது முற்றிலும் இஸ்லாத்திற்கு முரணானது. இறந்தவரை வானலோகத்திற்கு சென்று சந்திப்பதாய் கவிதை புனைகிறார். இதுவும் முரணானது. இவர் செல்வநாயகத்தை இறைதூதரின் அந்தஸ்தில் வைக்கிறார். இந்தப் போக்கில் தொங்குவதற்கு கயிறு இல்லாத கைவிடப்பட்டு கைசேதப்பட்ட ஒரு நிலையிலேயே தான் அவர் இருக்கிறார். கட்சியின் பெயரைக்கூட மாற்றப்-

→ 16

# "நான் இதை எழுதியதற்காக என்னை மிரட்டுகிறார்கள்"

**-நிலங்கா ஜயசூரிய**





*'நீ உன் கணவனோடேயன்றி வேறு ஆடவனோடு படுத்து தீட்டுப்பட்டிருந்தாயாயின் இந்தச் சாபமெல்லாம் உன் மேல்வரும். சபையிலுள்ள அனைவரும் கண்டு அஞ்சும்படி ஆண்டவர் உன்னை எல்லோருடைய சாபங்களுக்கும் உள்ளாகச் செய்வாராக. அவர் உன் கால்கள் அழுகிப்போகவும், உன் வயிறு வீங்கி வெடித்துப் போகவும் செய்வாராக. சபிக்கப்பட்ட தண்ணீர் உன் வயிற்றில் விழவே உன் கருப்பை வீங்கவும் உன் தொடை-கள் அழுகவும் கடவன'* என்கிறது பைபிள் வாசகம் பக்.145 (20-21). உலகத்தில் பாலியல் தொழில் செய்யும் பெண்களுக்கு இறைவன் கொடுத்த சாபமிது.

இருப்பினும் இலங்கையில் 10 லட்சத்துக்கும் அதிகமான பெண்கள் இத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்காக தண்டனை வழங்குவதைப் பற்றிப் பேசுகின்றோமேயொழிய, இவ்வாறான நிலைமைக்கான காரணங்கள் பற்றி ஆரா-யவோ, அக்காரணிகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் முனைப்புக் கொள்ளவோ எவரும் தயாராயில்லை. குறிப்பாக, பெண்களது விடுதலை, பெண்கள் முன்னேற்றம் போன்றன தொடர்பாகச் செயற்படும் பெண்கள் அமைப்புகள் கூட பெண் பாலியல் தொழிலாளர்கள், அவர்களுடைய புனர்வாழ்வு குறித்து அதிக அக்கறை காட்டுவதில்லை. ஏனெனில், இந்தப் பிரச்சினையை ஆராய்வதால் ஏற்படும் பின் விளைவுகள் , பிரச்சினைகள் என்பன ஏராளம் உள்ளன என்பதே.

அந்தவகையில், 'விபச்சாரத்தின் உண்மைத் தோற்றங்கள் - சமூக விஞ்ஞான ரீதியில் ' என்ற நூலை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது. பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் தொடர்பான இந்த ஆய்வுநூலை சமூக விஞ்ஞான ரீதியில் சிங்கள மொழியில் எழுதியுள்ள நிலங்கா ஜயசூரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றவர். திவயின பத்திரிகையில் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர்.

இந்நூலை வெளியிட்டதிலிருந்து அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள், பயமுறுத்தல்கள், மிரட்டல்கள் எனபவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவிக்கிறார்.

பாலியல் தொழிலின் வளர்ச்சி, தேவதாசிகள்,பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களின் வகைகள், தரகர்கள், மற்றும் நான்கு கள ஆய்வுகள், புனர் வாழ்வு , புனர் வாழ்வு முகாமில் உள்ள பெண்களின் லெஸ்பியன் கவிதைகள் என்ற தலைப்புக்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

எவ்வாறெனினும், பெண்களை அதிகளவில் சுரண்டலுக்குட்படுத்தும் இந்த பாலியல் தொழில் வளர்ச்சி, இன்றைய யுத்தமயச் சூழலில் முக்கியத்துவம் பெறுகின்றது. அத்துடன் இவ்வாறான துறைகளை ஆய்வு செய்யும் - குறைந்த பட்சம் அது பற்றிப் பேசும் பெண்கள் பற்றிய இந்த சமூக அமைப்பின் அபிப்பிராயங்கள், எதிர்வினைகள் என்பவற்றை தோலுரித்துக் காட்ட இந்த சமகால நிகழ்வு ஒரு வாய்ப்பைத் தந்துள்ளதெனலாம்.

இந்த வகையில் நிலங்கா ஜயசூரியவின் பேட்டி இடம் பெறுகின்றது.

**பொதுவாக பாலியல் தொழில் பற்றி எழுதும் பொழுது கிளு கிளுப் பூட்டும் வகையாக அல்லது வெறும் புள்ளிவிபர ரீதியானதாக ஆக்கங்கள் அமைந்து விடுகின்றன. ஆனால், இவ்விடயம் பற்றிய ஒரு ச்மூக விஞ்ஞான ஆய்வை மேற்கொண்டு நூலொன்றை எழுதும் ஆர்வம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன?**

நான் பல்கலைக்கழகத்தில் கற்கும் பொழுதே இந்தத் தலைப்பைத் தேர்தெடுத்து விட்டேன். உண்மையில், இவ்விடயம் பற்றி எனக்கு அதிக ஆர்வமிருந்தது. பேராசிரியர் ரத்னபால அவர்கள் 'Begger in Sri Lanka' என்ற நூலை எழுதியிருந்தார். அது பகுதி பகுதியாக திவயின பத்திரிகையில் வெளியானது. இந்தக் கட்டுரையும் என் ஆர்வத்தைத் துண்டியது. இடைக்காலத்தில் நான் பத்திரிகையாளராக, வீதியோர சிறுவர்கள், பாலியல் தொழிலாளர்கள் என்-போரைப் பற்றிய ஆக்கங்களையும் எழுதியிருந்தேன். அதன்பின் தான் நாம் ஏன் இப்பிரச்சினையை சமூக விஞ்ஞான ரீதியில் அணுகக் கூடாதென்ற எண்ணம் தோன்றியது.

**இவ்வாறானதொரு நூலை எழுதும் போது. பாலியல் தொழில் பற்றி ஏற்கெனவே எழுதப்பட்ட ஆய்வு பூர்வமான நூல்களின் உதவியைப் பெற முடிந்ததா?**

இல்லையென்றே கூறவேண்டியுள்ளது. சர்வதேச தரத்தில் பாலியல் ஊழியம் செய்வோர்கள் பற்றி ஆழமான, சமூக விஞ்ஞான ரீதியான நூல்கள் எழுதப்பட்-டுள்ளன. அத்துடன் போராசிரியர் நந்தசேன ரத்னபாலவின் சிறு சிறு ஆய்வுகளும் குறிப்பிட்டுச் சொலலக்கூடியன. என் உசாத் துணை நூற்பட்டி-யலை பார்த்தால் உங்களுக்-கு என் சிரமம் விளங்கும்.

**நூலில் குறிப்பிட முடியாத அனுபவங்கள் ஏதேனும் உங்கள் ஆய்வின் போது உங்களுக்கு ஏற்பட்டதா? ஏதாவது காரணங்களினால் அவற்றை நூலில் உள்ளடக்க முடியாதிருந்ததா?**

ஆம். குறிப்பாகச் சொல்வதானால் நான் இந்த விடயத்தைப் பற்றி இன்னும் ஆழமாக எழுதியிருக்கலாம். இந்த நூலை எழுத ஆய்வுகளை மேற்கொண்ட வேளை நான் திருமணம் முடித்திருக்கவில்லை. அத்தோடு தனியாகவே இத்தொழில் நடைபெறும் Brothel வீடுகளுக்கும், இடங்களுக்கும் செல்ல வேண்டி-யேற்பட்டது. அங்கு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

இருப்பினும், இந்த நூலில் உள்ளடக்கப்படாத பல விடயங்களும் உண்டு. குறிப்பாக, பாலியல் வர்த்தகம் வாகனங்களின் மூலம் நடமாடும் சேவையாக இடம் பெறுவதை நான் குறிப்பிடவில்லை. அத்துடன் எனது சுய பாதுகாப்பை கருத்திற் கொண்டும் ஒரு சில விடயங்களைத் தவிர்த்து விட்டேன். இந்தளவு செய்தும் கூட எனக்கு மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. நான் எழுதிய விடயங்கள் எவரையும் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கின்றதோ தெரியவில்லை. ஆனால், என்னால் முடிந்தவரை ஆழமாகச் சென்று இந்த நூலை எழுதியிருக்கிறேன் என்று தான் கூற வேண்டும்.

**இந்த ஆய்வினை மேற்கொள்ள பலரும் தயக்கம் காட்டுவதுண்டு. சுமாராக கதைப்பதுடன் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றது சமூகம். அந்த வகையில் ஆய்வினை மேற்கொள்ளும் போது நீங்கள் ஏதேனும் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததா?**

பெரும்பாலும் நான் தனியாக இந்த ஆய்வில் ஈடுபட்டதால், Brothel House க்கு செல்லும் போது என்னை அவதானித்தவர்-களின் பார்வைகளையும், கேலிப்-பேச்சுக்களையும் பொறுத்துக் கொள்ள நேர்ந்தது. அத்துடன், நான் கள ஆய்வுக்கு உட்படுத்திய பெண்கள், பொது இடங்களில் என்னுடன் நட்புடன் பழகத் தொடங்கினர். மேலும், எனது நண்பர்கள், பெற்றோர்கள் என்போர் எவ்வாறு நீ இவ்வாறான ஒரு காரியத்தைச் செய்யலாம் எனக் கேள்வி எழுப்பினர். துறை தொடர்பான அனுபவம் இல்லாது எப்படி இந்த விடயத்தை அணுக-லாம் என்ற இடக்கான கேள்வி வேறு. ஏனெனில், பேராசிரியர் ரத்னபால அவர்கள் Begger in Sri Lanka புத்தகத்தை எழுத மேற்கொண்ட ஆய்வுகளின் போது, அவர் பிச்சைக்காரராக மாற வேண்டியேற்பட்டது. சிலர் இந்த முறையை சமூக விஞ்ஞானத்தின் அனைத்து ஆய்வுப் பரப்புகளுக்கும் பயன்-படுத்த வேண்டும் என எண்ணுகின்றனர். நானும் பாலியல் தொழிலாளியாக மாறாமல் எப்படி ஆய்வினை மேற் கொண்டிருக்க முடியும் என வக்கிரமான அபிப்பிராயம் நிலவுகின்றது. இருப்பினும் இவற்றையெல்லாம் நான் தடையாகக் கருதவில்லை. இன்னும் என் எதிர்காலத் திட்டங்களுக்கும் தடையாக இவற்றை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. அனை-வரும் எல்லாவற்றையும் ஒரு எல்-லைக்குள்ளிருந்தே அவதானிக்கக் கற்றுள்ளார்கள் என்பதையும் வருத்தத்துடன் கூற வேண்டியுள்ளது.

**உங்களது ஆய்வுக்குள் யுத்தமயச் சூழலில் மற்றும் எல்லைக் கிராமங்களில் தோன்றியுள்ள உப கலா சாரமான பாலியல் தொழில் நிலைமைகளை உள்ள டக்கவில்லை அல்லவா?**

உண்மை தான். நான் என் ஆய்வுக்கு சில எல்லைகளை மேற்கொண்டேன் என்று தான் சொல்ல வேண்டும். தனிப்பட்ட பிரச்சினைகள் தான் இதற்குக் காரணம். அதனால், எனது ஆய்வை பெரும்பாலும் கொழும்பு நகரப் பகுதிக்குள் மேற்கொண்-டேன். எதிர்காலத்தில் முழு இலங்கையை அடிப்படையாகக் கொண்டு இவ்விடயம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன்.

**நூலில் ஆய்வுக்குட்பட்ட அனைத்துப் பெண்களும், ஏதோ ஒரு வகையில் ஏமாற்றப்பட்ட நிலைமைக்குள்ளாகி, அனாதரவான நிலையில் பாலியல் தொழிலைத் தேர்ந் தெடுத்துக் கொள்கி றார்கள். ஓர் ஆய்வை மேற் கொண்டவர் என்ற அடிப்படையில் இது விடயத்தில் உங்கள் அபிப் பிராயம் என்ன?**

நூலில் நான் சிற்சில இடங்களில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, தரகர்கள் தான் இதில் முக்கிய பங்காற்றுகின்றார்கள். இவர்களை இத்துறையில் 'பிம்பியன்' என அழைப்பர். பெண்களை வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஆசை காட்டி பாலியல் தொழிலில் தள்ளி விடுகின்றனர். இதன் மூலம் அவர்களுக்குப் பெருத்த வருவாய் கிட்டும். சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் பெற்றுத் தருவதாகப் பெண்களை அழைத்து வந்து லொட்ஜ்களில் அவர்களை பாலியல் வல்லுறவு புரிகின்றனர். அத்துடன் வீட்டுவேலைகள் செய்வதற்கு அழைத்து வரப்படும் பெண்களுக்கும் இவ்வாறான நிலைமையே ஏற்படுகின்றது. இதனால் சமூகத்துக்கு முகம் கொடுக்க முடியாது வேறு வழியின்றி இத்தொழிலில் இறங்கி விடுகின்றனர். அவர்களிடம் ஏன், உங்களுக்கு மாற்றுவழி இல்லையா என்று கேட்டால், மாதக் கணக்கில் உழைப்பவற்றை நாங்கள் இரு நாட்களில் உழைத்து விடுவோம் என என்னுடன் விவாதிக்கத் தொடங்கினர். உதாரணமாக, நான் பாலியல் தொழிலை மேற் கொள்ளும் ஒரு பெண்ணை பேட்டி எடுக்கும் போது, அப்பெண் என் கழுத்தில் உள்ள தங்கச் சங்கிலி எவ்வளவு பெறுமதியென்று கேட்க, நான் ரூ.2000/- ; 3000/- இருக்கும் என்றேன். உடனே அப்பெண் நீங்கள் மாதக் கணக்கில் உழைத்து வாங்கும் தங்கச் சங்கிலியை நான் இரண்டு, மூன்று நாட்களில் வாங்கி விடுவேன் என அப்பெண் பெருந் தன்மையுடன் குறிப்பிட்டார். அதேவே-ளை ஒரு சோற்றுப் பார்சலுக்காக துறைமுக ஊழியர்களுடன் பாலியல் சேவகம் செய்யும் பெண்களையும் நான் துறைமுக வாயிலில் சந்தித்தேன். இவற்றையெல்லாம் மாற்றுமளவுக்கு எமது சமூகம் இன்னும் மாறுபாட-டையவில்லை.

**இப்பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

தற்போது மேற்கொள்ளப்படும் புனர் வாழ்வு நடவடிக்கைகளைத் தனிப்பட்ட ரீதியில் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏனெனில், இத்தொழில் ஈடுபட்டு பிடிபட்டவர்களும், சந்தேகத்-திற்கிடமான வகையில் பிடிப்பட்ட-வர்களுழ் ஒரே இடத்தில் தடுத்து வைக்கப்படுகின்றார்கள். அவ்விடத்தில் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் தொடர்பாகவும் நமக்குப் பொறுப்புள்ளது. அத்தோடு, அங்கு லெஸ்பியன் கலாசாரமும் பரவலாக நிலவுகின்றது. மேலும் இப்பெண்களின் தரகர்கள், வாடிக்கையாளர்கள் என்போர் இவள் என் மனைவி, உறவினள் எனக் கூறி அழைத்துச் சென்று மீண்டும் அதே தொழில் ஈடுபடுத்துகின்றனர். அதனால், இந்தப் புனர் வாழ்வு நிலையங்கள் இவர்களுக்கு வெறும் தரிப்பிடங்களாக மட்டுமே தொழிற்படுகின்றன. மாறாக, அவர்களைப் பொருளாதார ரீதியில் பலப்படுத்த வேண்டும். இதை தான் ஒவ்வொரு புனர் வாழ்வு முகாம்களிலும் மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் சுவரேறிக் குதித்துச் சென்று பாலியல் தொழிலில் மீண்டும் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியாது. □



**நேர்காணல் : ரத்னா**





# வன்னி:
# வரியிறுப்புப் போட்டியில் புளொட்டும் ரெலோவும்!

- திரு

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போவதாகக் கூறி, ஆயுதப் போராட்டத்தில் இறங்கி, இந்திய அரசாங்கத்தின் தலையீட்டின் மூலம், பிரேமதாசா அரசாங்கக் காலத்தில் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து அரசியல் நடத்த முற்பட்ட தமிழ்க் குழுக்கள் இப்போது விடுதலைப் போராட்டத்தை விட்டு விட்டு வியாபாரப் போட்டிச் சண்டையில் குதித்துள்ளன.
வவுனியா மாவட்டத்திற்கு வெளியில் உள்ள மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படுகின்ற பொருட்கள் யாவும், அவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் அவர்கள் தலையிட்டு நிர்ணயிக்கின்ற மொத்த விலையின் அடிப்படையிலேயே மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனை பொது மக்களும், பார்வையாளர்களும் இயக்கங்கள் மக்களிடமிருந்து வரி வசூலிக்கின்றன என்று கூறுகின்றார்கள்.

ஆனால் இந்த நடவடிக்கைகளில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள டெலோ மற்றும் புளொட் இயக்கங்கள் இரண்டும், இதனைத் தமது வியாபார நடவடிக்கைகளாகச் சித்தரிக்கின்றன. தாங்கள் வியாபாரம் செய்கின்றார்களாம். வவுனியாவில் வியாபாரம் செய்வதற்கு வியாபாரிகள் இல்லை. வியாபாரத்தை இவர்கள் கரைத்துக் குடித்துவிட்டு வந்திருக்கின்றார்கள். புதிய புதிய உத்திகளை கற்று வந்துள்ளார்கள். அல்லது வியாபாரத்தில் பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டு, வியாபாரத்தின் நுணுக்கங்களை கற்றுத் தெளிந்திருக்கின்றார்கள். இதனால், வியாபாரத்தின் அடிப்படையான, வாடிக்கையாளர்களை மதித்துப் போற்றி, அவர்களுக்குத் தேவையான சகல பொருட்களையும், நியாயமான விலைகளுக்கு, சீராகவும், தரமானதாகவும் கிடைக்கச் செய்கின்ற நோக்கத்தை இங்கே அமுல் செய்கின்றார்கள்.
அது மட்டுமல்லாமல், இங்குள்ள அடாவடித்தனம் கொண்ட, பகல் கொள்ளையடிக்கின்ற மொத்த வியாபாரிகளின் சுயநலப் பிடியிலிருந்து பொதுமக்களை இரட்சிக்க வந்துள்ள இரட்சகர்களாக இவர்கள் செயற்படுகின்றதைப் போல பாவனை காட்டுகின்றார்கள்.

வவுனியாவிற்கு வெளியில் இருந்து கொண்டுவரப்படுகின்ற அனைத்துப் பொருட்களுக்குமே இந்த இயக்கங்களின் சுயநலப்போக்கு கொண்ட வியாபார நடவடிக்கை காரணமாக மக்கள் மேலதிகமான பணத்தை வரியாகக் கட்ட வேண்டி இருக்கின்றது. வவுனியா நகரத்திற்கு வெளியே தேங்காய் ஒன்று 6 ரூபா தொடக்கம் 8 ரூபாய்க்குள் வாங்க முடியும், ஆனால் வவுனியாவில், தேங்காய் ஒன்றை 11 அல்லது 12 ரூபாய்க்குக் குறைய வாங்கவே முடியாது. அநேகமாக 12.ரூபா 50 சதம் அல்லது 13, 14 ரூபாவாகத்தான் சாதாரணமாகவே தேங்காய் இங்கு விற்பனை செய்யப்படுகின்றது.
சிலவேளைகளில் 17, 18 ரூபாய்க்கும் தேங்காய் இங்கே விற்பனையாகின்றது.

இதுபற்றிக் கதைக்க நேர்ந்தால், "வன்னியில் தேங்காய் ஒன்றின் விலை என்ன தெரியுமா? அதையும் விட இங்கே உங்களுக்கு தேங்காய் மலிவாகத்தானே கிடைக்கின்றது?" என்ற நியாயம் தான் பதிலாகக் கிடைக்கின்றது.

தேங்காய் மட்டுமல்ல. வெற்றிலை பாக்கு முதல், ஆண்கள் அணிகின்ற உள்ளாடை வரையில் இயக்கங்களின் வியாபாரப் பொருட்களின் பெயர்ப் பட்டியல் நீளமானதாக இருக்கின்றது.

வவுனியா நகரம் வடபகுதியின் நுழைவாயிலாக இருப்பதனாலும், இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியையும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நாட்டின் ஏனைய தென்பகுதிகளையும் இணைக்கின்ற முக்கியத்துவம் மிக்க கேந்திர நிலையமாக இது அமைந்துள்ளதனால், பாதுகாப்புப் படையினரின் சோதனை நடவடிக்கைகள், பாதுகாப்பு நடைமுறைகள் என்பன இங்கு மிகவும் அதிகமாக உள்ளன. வவுனியாவில் இருந்து கொழும்புக்குப் பொருட்களை ஏற்றிச்செல்கின்ற லொறிகளும், அதேபோல, கொழும்பில் இருந்து பொருட்களை ஏற்றி வருகின்ற லொறிகளும், மதவாச்சியில் உள்ள இராணுவ பொலிஸ் கூட்டுச் சோதனை முகாமில் அக்குவேறு ஆணிவேறாகச் சோதனையிடப்படுகின்றன.

பொருட்கள் யாவும் லொறிகளில் இருந்து இறக்கப்பட்டு முழுமையாகச் சோதனையிடப்பட்ட பின்பே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றன. இவ்வாறான சோதனைக்காகப் பொருட்களை இறக்கி ஏற்றுகின்ற தொழிலாளர்களுக்கான கூலியை லொறி உரிமையாளர்களே வழங்க வேண்டும். கூலியைப் பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தி, பொலிசார் ஒரு ரசீதை வழங்குகின்ற ஒரு நடைமுறையும் உள்ளது.

ஆகவே, வவுனியாவில் உற்பத்தி செய்யப்பட்டு, கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுகின்ற அரிசி, வெங்காயம், உழுந்து போன்ற விளைபொருட்களின் உற்பத்திச் செலவில் இந்த லொறிக்கட்டணத்துடன், பொருட்களைச் சோதனையிடுவதற்காக இறக்கி ஏற்றுகின்ற கூலியும் அடங்குகின்றது. இதேபோல, கொழும்பில் இருந்து விற்பனைக்காக வவுனியாவுக்குக் கொண்டு வரப்படுகின்ற சகல பொருட்களும் இறக்கி சோதனையிடப்படுகின்ற போது ஏற்படுகின்ற செலவும் அவற்றின் கொள்விலையுடன் சேர்க்கப்படுவதனால், அந்தப் பொருட்களின் விற்பனை விலை அதிகமாகி விடுகின்றது. இந்தச் சோதனை நடவடிக்கைகள் நிரந்தரமான செயற்பாடாக இருப்பதனால், நாட்டின் பொதுவான நடைமுறைகளில் இருந்து மாறுபட்டு, வவுனியாவின் பிரயாண தூரம் வழமையாகப் பொருட்களை ஏற்றிச் சென்று இறக்குகின்ற கூலி ஆகியவற்றுக்கு மேலாக இங்கு கொண்டு வரப்படுகின்ற பொருட்களின் கொள்விலை அதிகமாகவே அமைந்துவிடுகின்றது.

இந்த நிலையில், பொதுவாகவே, வவுனியா பகுதியில் நாட்டின் விகிதாசார நிலைமையில் பொருட்களின் விலை சற்று அதிகமாகவே உள்ளது. இதற்கும் மேலாகத்தான் இயக்கங்களின் வியாபார நடவடிக்கைகளினால்(?), பொருட்களின் விற்பனை விலைகள் இன்னும் கூடியதாக இருக்கின்றன. ஆனால் அந்த அளவிற்கு இங்கு வழங்கப்படுகின்ற தொழிலாளர்களின் கூலி, மற்றும் சம்பளக் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு ஏதும் கிடையாது. இந்த நிலையில்தான், அரசியல் நடத்துகின்றோம் எனக் கூறி, வர்த்தக நடவடிக்கைகளைத் தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டு, இயக்கங்கள் பொருட்கள் மீது வரிகளைச் சுமத்தி, மக்களை அணுஅணுவாக அவர்கள் அறியாமலே சுரண்டிக் கொண்டிருக்கின்றன.

இந்த வரிவிதிப்புகள் குறித்து இங்குள்ள வர்த்தகர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருந்த போதிலும், இயக்கங்களிடம் நியாயம் கேட்பது தற்கொலை நடவடிக்கைக்குச் சமனானது என்ற காரணத்தினால், பேசாமடந்தைகளாக வாய் மூடி மௌனிகளாக, தமது தலைவிதியை நொந்தவாறு வாழ் நாளைப் போக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், அதேவேளையில், பொருட்களின மொத்த வியாபாரியாக, இந்த இயக்கங்களின் ஏஜென்டுகளாக இங்கே செயற்படுகின்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் புதிய பணக்காரர்களாக, மேனி பளபளத்து சிறந்த முன்னோடியான வியாபாரிகளாகப் பரிணாமம் பெற்றுள்ளார்கள்.
அவர்களின் வங்கிக் கணக்குகளில் நல்ல முன்னேற்றமும் வாழ்க்கையில் சொகுசும் ஏற்பட்டுள்ளதையும் எல்லோரும் அறிவார்கள்.

ஆனால், வவுனியா பகுதிகளில் உள்ள நாளாந்தம் உழைத்து உண்கின்ற ஏழை தொழிலாளிகளும், விவசாயத் தொழிலாளிகளும், சிறு வியாபாரிகளும், விவசாயிகளும், அரச ஊழியர்களும் உட்பட அனைவருமே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் வாடுகின்றார்கள். தொழிலாளிகள், வறிய விவசாயிகள், சிறிய வியாபாரிகளின் நிலைமை மிக மோசமாக உள்ளது. அவர்கள் தமக்குக் கிடைக்கின்ற குறைந்த வருமானத்தைக் கொண்டு, செலவு மிகுந்த வவுனியா வாழ்க்கையை நடத்துவதில் திணற வேண்டி இருக்கின்றது.

தேயிலை, கிழங்கு, வெங்காயம் போன்ற அன்றாட அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் கிலோ ஒன்றிற்கு சாதாரணமாக உள்ள விலையிலும் பார்க்க 10 ரூபா வரையிலும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

நெல் அறுவடைக் காலத்தில் நெல் மூடை ஒன்றுக்கு 10 ரூபா வீதம் விவசாயிகளிடம் இருந்த நெல்லைக் கொள்வனவு செய்த மொத்த வியாபாரிகளின் மூலமாக அறவிடப்பட்டது. அதேபோல, சீமெந்து வியாபாரமும் ஒரு சில வியாபாரிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டு, மூடை ஒன்றிற்கு 10 தொடக்கம் 20 ரூபாய் வரையில் அறிவிடப்பட்டுள்ளது.

எத்தனை பொருட்களுக்கு யார் யார் வரி வசூலித்தார்கள் என்ற துல்லியமான விபரங்களைத் திரட்ட முடியாவிட்டாலும், கடந்த வாரம் புளொட் இயக்கத்திற்கும், டெலோ இயக்கத்திற்கும் இடையே இந்த வரிவிதிப்பு தொடர்பாக எழுந்த சர்ச்சை அடிதடி, துப்பாக்கிச் சண்டை என்று தீவிரமடைந்ததையடுத்து, வரி வசூலிப்பு பற்றிய விபரங்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன.

இந்த இரண்டு இயக்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டை காரணமாக இரு தரப்பிலும் ஒவ்வோர் உறுப்பினர் காயமடைந்தார்கள். வேறு சிலர் தாக்குதல்களுக்கு உள்ளாகினார்கள். மூன்று ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சண்டைகளை அடுத்து, ஏற்பட்ட இரு தரப்பினருக்கும் இடையேஏற்பட்ட மிக மோசமான பகைமை உணர்வு வீதிச் சண்டையாக உருவெடுத்து, கடந்த 4 ஆம் திகதி சுதந்திர தினம் வவுனியா மக்களுக்குப் பதட்டம் நிறைந்த ஒரு தினமாக மாறியிருந்தது.

இந்த மோதல் நிலைமைகள் குறித்து அறிந்த இராணுவத்தினர் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து இரு தரப்பினரும் மோதல்களில் ஈடுபடுவார்களேயானால், கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தாங்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டார்கள்.

இரண்டு தரப்பையும் சேர்ந்த பிரதிநிதிகள் இராணுவ முகாமிற்கு அழைக்கப்பட்டு நேரடியாக சமரசம் செய்து வைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைகள் அரசியல் சுதந்திரம் என்பவற்றுக்கான, மக்களின் நியாயமான போராட்டங்கள் யாவும் பேரினவாத அரசாங்கங்களின் இராணுவத்தினாலும் பொலிசாரினாலும் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கப்பட்டன. அந்த காயங்கள் இன்னும் ஆறவில்லை. பாதுகாப்பு என்ற பெயரில் எத்தனையோ அடாவடித்தனங்கள் இன்றும் இவர்களின் மூலமாக நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் தான், வவுனியாவில் உள்ள புளொட், டெலோ ஆகிய இரண்டு இயக்கங்களும் தமது தனிப்பட்ட சுயநலம் மிகுந்த செயல்களில் ஏற்பட்ட பிணக்குகளையும், பகைமையையும் தீர்த்துக் கொள்வதற்கு அரசாங்க படை அதிகாரிகளின் சமரசச் செயற்பாடுகளுக்கு உள்ளாகி அடக்கப்பட வேண்டிய கேவலமான நிலைமைக்கு ஆளாகியுள்ளன.


இந்த சமரச நடவடிக்கையின் பின்னர், புளொட் இயக்கத்தின் மாணவ அமைப்பைச் சேர்ந்த கிறிஸ்தோபர் கிருஷாந்தன் என்ற 16 வயது மாணவன் இரவு நேரத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்டான். அந்த மாணவனுடைய இரத்தம் உறைவதற்கும், அவனுடைய இறுதிக் கிரியைகள் முடிவதற்கும் இடையில், கடந்த திங்கட்கிழமை இரவு வவுனியா குருமண்காடு சந்திப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கித் தாக்குதலில் டெலோ இயக்க மாணவர் அமைப்பின் தலைவனாகிய ராஜேஷ்கண்ணாவும், இயக்கத்தின் நிதி பொறுப்பாளராகிய கேதீஸ்வரனும், இன்னுமொரு முக்கிய உறுப்பினராகிய சுசை ரவி என்பவரும் கொல்லப்பட்டார்கள். இன்னுமொரு உறுப்பினர் காயமடைந்தார் இந்தச் சம்பவத்தில், எஸ்.ராஜ்குமார் என்ற சிவிலியனும் காயமடைந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடச்சென்ற தமிழ் இயக்கங்கள், அரசியல் நீரோட்டத்தில் இணைந்ததன் பின்னர், உயிர் வாழ்வதற்காக, இலங்கை அரசாங்கத்தின் எடுபிடிகளாக, ஏவலாளிகளாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.
இவர்கள் என்ன அரசியல் நடத்துகின்றார்கள், அதனால் யாருக்குப் பிரயோசனம் என்பதெல்லாம் கதைக்குதவாத விஷயங்களாகி இருக்கின்றன.
இந்த நிலைமையில், வவுனியாவில் முகாம்களை அமைத்துக்கொண்டு அரசியல் நடத்துகின்றோம் என தம்பட்டம் அடித்துக் கொண்டு, பாடசாலை மாணவர்களையும் தங்களுடைய அணிகளுக்குள் அங்கமாக்கி, அவர்களையும் தமது வெற்றுச் சுயநல நடவடிக்கைகளில் பலியாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். வவுனியாவின் வரலாற்றில் மாணவர்கள் இயக்க மோதல்களுக்கு உள்ளாகி கொலையுண்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

கொல்லப்பட்டுள்ள இரண்டு மாணவர்களின் கொலைகளுக்கும் இந்த இயக்கங்களே பொறுப்பேற்க வேண்டும். அதுமட்டுமல்ல. சட்டரீதியாக இந்தக் கொலைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாடசாலை மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்துகின்ற இயக்கங்களின் நடவடிக்கைகளும் "நிறுத்தப்பட வேண்டும். விட்டேற்றிகளாக அரசியல் நடத்துகின்றோம் என்று தங்களைத் தாங்களே காட்டு மிராண்டிகளைப் போல சுட்டுக் கொலை செய்கின்ற நடவடிக்கைகளை இந்த இயக்கங்கள் தங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்ளட்டும். இவர்களின் போக்கிரித்தனமான அரசியல் வழிமுறைகள், எமது எதிர்காலச் சந்ததியாகிய மாணவர்களுக்குப் புகட்டப்பட வேண்டிய தேவை எதுவும் இப்போது கிடையாது.

தொடர்ச்சியான பாதிப்புகளுக்கும் சீரழிவுகளுக்கும் உள்ளாகி அழிந்து கொண்டிருக்கின்ற எம்முடைய சமூகத்தில் அவர்கள் முறையான கல்வியைப் பெற்று எதிர்கால சவால்களுக்கு உறுதியாகவும், தீரத்துடனும் முகம் கொடுக்கக் கூடியவர்களாக உருவாக வேண்டியதே இப்போதைய தேவையாகும். ஏனவே இந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து, பெற்றார்கள் தங்களுடைய பிள்ளைகளை இந்த மோசமான அரசியல் சாக்கடைக்குள் வீழ்ந்துவிடாமல் பாதுகாக்க வேண்டியதாகும்.

# போரை விலை கொடுத்து வாங்கும் இலங்கை மக்கள்!




இலங்கையில் அரச பயங்கரவாதத்தின் உச்ச வடிவமாக தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு யுத்தம் தொடர்ந்து வருகிறது. தமிழ்ப் பிரதேசங்கள் மீதான இந்த ஆக்கிரமிப்புப் போருக்கு தலைமை வகிப்பது இந்த சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பைக் கொண்ட அரசு. இந்த அரசுக்கும் அதன் பணிகளுக்கும் தலைமை் கொடுக்கவென 5 வருடங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதியும், அரசாங்கமும் தெரிவு செய்யப்படுகின்றனர். இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே அரசியலமைப்பின் பிரகாரம் இலங்கையின் முப்படைகளின் தலைவரும் கூட. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சு பதவியையும் ஜனாதிபதியிடமே வைத்திருக்கின்ற முறையை அறிமுகப்படுத்தினார். அதன் படி இன்றைய ஜனாதிபதி, முப்படைகளின் [illegible]தி, பாதுகாப்பு அமைச்சர் எல்லாமே "சமாதான தேவதை" என பலர் கனவு கண்டிருந்த சந்திரிகா அம்மையாரே தான்.

1995 இறுதியில் பேச்சுவார்த்தை என்ற கண்ணாமூச்சு விளையாட்டு காட்டிவிட்டு பின்னர் ஆக்கிரமிப்புப் போரை மீளத் தொடக்கியதும் அம்மையாரின் ஆட்சி தான். இந்த அரசாங்கத்தின் ஆட்சிகாலம் முடிவடைகின்ற இந்தத் தறுவாயில் யுத்தம் இலங்கை மக்களுக்கு விசேடமாக தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற கொடுமைகளையும் அவலங்களையும் மீள சாராம்சப்படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்தக் குறுகிய காலத்தில் அம்மையாரின் ஆட்சியில் நடத்தப்பட்ட யுத்தத்தினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளானார்கள். பல ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாக்கப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர். பல அப்பாவி இளைஞர்கள் காணாமல் போனார்கள். கைது செய்யப்பட்டனர். பல தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு சம்பவங்கள் வரலாற்றில் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு அதிகரித்தது. இந்த அட்டூழியங்களில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததுடன் அவர்களுக்கு பதவியுயர்வு இடமாற்றம் என்பவை வழங்கப்பட்டன. (கிருஷாந்தி வழக்கு ஒரு கண்கட்டி வித்தை என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.) தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. தமிழ் மக்கள் கண்காணிக்கப்பட, திறந்தவெளி சிறைக்கைதிகளாக்கவென பொலிஸ் பதிவு, போட்டோ, வீடியோ பதிவுகள், பாஸ் முறை என பல்வேறு முறைமைகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. இது வரை பல லட்ச மக்கள் சொந்த இடங்களை இழந்து வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் அனைவரும் மீள ஆரம்பத்தில் இருந்து வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியவர்களாகியுள்ளனர்.

இந்த அரசாங்கத்திலும் தமிழ் மக்கள் மீதான இனக்கலவரங்களைத் தடுக்க இயலவில்லை. அவற்றில் அரசாங்கத்தினரும் சேர்ந்து ஈடுபட்டிருந்தது. உலகமறிந்த விடயம். சென்ற அரசாங்கத்தில் காணாமல் போனோர் குறித்த சந்திரிகாவின் விசாரணை ஆணைக்குழுவால் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல சொந்த சிங்கள மக்களுக்கு கூட நியாயம் வழங்கப்படவில்லை. மாறாக வாவிகளில் சடலம் மிதப்பு, சிறைச் சாலைகளில் தமிழ் இளைஞர்கள் படுகொலை, காணாமல் போதல் என இந்த அரசாங்கத்திலும் தொடரவே செய்தன. அதற்கு எந்தவித ஆணைக்குழுவும் அமைக்கப்படவில்லை. முன்னர் இளைஞர்கள் காணாமல் போகக் காரண்மாக இருந்து, அட்டூழியங்களைப் புரிந்த அனைத்துப் படையினருக்கும் பதவியுயர்வு வழங்கப்பட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வரம்பற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்ட நிலையில், ஆயதப்படையின் செல்வாக்கு மேலோங்கியுள்ள நிலையில் அரசாங்கம் படையினரின் ஆதரவில், தயவில் இருக்க நேரிட்டுள்ளதையே இவை காட்டுகின்றன.

இப்படைகளை தூய சிங்கள படையாக வைத்துக்கொள்வதில் அரசு தொடர்ந்தும் அக்கறை காட்டி வருகிறது.

இன்றைய யுத்தத்தினால் ஏனைய சமூகத்தினரும் குறிப்பிட்டளவு நெருக்கடிகளை முகம் கொடுத்து தான் வருகின்றனர். ஆனாலும் அவர்களுக்கு பிரச்சினைகளில் ஒன்றாக யுத்தம் இருக்கின்றதேயொழிய தமிழ் மக்கள் எதிர்கொள்வதைப் போல் யுத்தமே பிர்ச்சினையாக ஏனைய சமூகங்களுக்கு இல்லை.

புலியழிப்புயுத்தம், சமாதான யுத்தம், தமிழ் மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கும் யுத்தம் என்கின்ற போலிப் பிரச்சாரங்களை உலக அளவில் செய்து கொண்டு மறு புறம் திட்டமிட்டு தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள வளங்களை அழிப்பது, திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்வது, வரலாற்றுத் தடயங்களை அழிப்பது, தமிழ் மக்களின் சுமுகமான வாழ்நிலையை சீர்குலைத்து சின்னாபின்னப்படுத்துவது என்பவற்றை வெற்றிகரமாகச் செய்து வருகிறது.

தமிழ் மக்களை கொடூரமான யுத்த சூழலுக்குள் தொடர்ச்சியாக அழுத்தி வைத்தும், பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியும் அவர்களை உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் கடுமையான நோயாளிகளாக்கி வருகிறது.

தமிழ் மக்களை களைப்படையச் செய்து, மன வலிமையை இழக்கச் செய்து, சோர்வுறச் செய்து,' விரக்தியுறச் செய்து போராட்டம் மீதான வெறுப்பை ஏற்படுத்தச் செய்து அவர்களை அடிபணிய வைப்பதன் மூலம் சரணடையச் செய்து அரசு விரும்பிய தீர்வை ஏற்கச் செய்வதே சகல அரசாங்கங்களினதும் கபட நோக்கம்.

இத் தேர்தல் வருடத்தில் சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதற்காக அதிகரிக்கப்பட்டிருக்கும் யுத்தச் செலவு சிங்கள அரசின் போக்கை தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்த அரசாங்கம் பதவியிலமர்வதற்கு முன்னர் சிங்கள மக்களிடமிருந்த படையெதிர்ப்பு உணர்வு (சிங்கள இளைஞர்கள் கொன்றொழிக்கப்பட்டதைத் தொடந்து ஏற்பட்ட எதிர்ப்புணர்வு) இன்று இல்லையென்றே கூறலாம். இது வரை எந்த அரசாங்கமும் செய்யாத வகையில் யுத்தத்தை மக்கள்மயப்படுத்திய அரசாங்கம் இந்த பொ.ஐ.மு. அரசாங்கம் தான். அரசாங்கத்தின் அத்தனை மக்கள் விரோத செயல்களும் யுத்தத்தினால் தான் நியாயப்.படுத்தப்புடுகின்றன. அத்தியாவசிய பொருள் விலையேற்றம், தனியார் மயம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் நிபந்தனைகள், தனியார்மய விரிவாக்கம், தொடங்கி தேர்தல் ஒத்திவைப்பு வரை யுத்தத்தைக் காரணம் காட்டித் தான் அரசு தப்ப வேண்டியுள்ளது.

யுத்தத்துக்கு ஆதரவாக முழு அரச இயந்திரமும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. யுத்தத்துக்கு ஆட்பற்றாக்குறை ஏற்படுகின்ற போது சம்பள உயர்வுகள், விசேட கொடுப்பனவுகள், சலுகைகள் என அறிவித்தும் ஆட்சேர்ப்பு குறைந்த நிலையில் இனவாத பிரச்சாரத்தைத் தான் பலமுறை அரசு கையாள நேரிட்டுள்ளது. இந்தப் பிரச்சாரங்களுக்கு இனவாதத்தை அப்பட்டமாகப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. "..சிங்கள நாட்டை பாதுகாக்க வாருங்கள், துட்டகைமுனுவின் பரம்பரை என நிரூபியுங்கள், சிங்கக் கொடியை நிலைநாட்டுவோம். சிங்கள நாட்டை பாதுகாப்போம் என்பன போன்ற பிரச்சாரங்கள் படைக்கு ஆட்சேர்க்கும் சுவரொட்டிகளில் அவ்வப்போது காணக்கிடைக்கும் கோஷங்கள். பொ.ஐ.மு அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட கல்வி சீர்திருத்தத்தில் வரலாறு, சமூகக் கல்வி போன்ற பாடங்களில் கூட திரிபுபடுத்தப்பட்ட வரலாறுகள் புகுத்தப்பட்டுள்ளன.


தேர்தல் அரசியலானது அரசை பேரினவாதத்திடம் மண்டியிட வைத்துள்ளது. பேரினவாதத்துடன் சமரசம் செய்து கொள்ளாமல் அரசாங்கங்கள் ஆட்சிபுரிவது ஸ்ரீ லங்காவில் சாத்தியமானதல்ல.

அரசின் நடத்தையை தீர்மானிப்பது சிங்கள பௌத்த பேரினவாத அடித்தளமே. பெரும்பான்மை மக்களின் ஆதரவு வேண்டுமெனில் யுத்தம் அவசியம்.

அரசு தரப்பில் யுத்தத்தை தீர்மானிக்கின்ற விடயங்களும் தமிழ் மக்கள் தரப்பில் யுத்தத்தை தீர்மானிக்கின்ற விடயங்களும் ஒன்றல்ல. இவை ஒன்றுக்கொன்று நேரெதிரானவை. **ஒன்று** ஆக்கிரமிப்பு, மற்றது தற்காப்பு என்றே அர்த்தம் கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்றைய யுத்தம் சர்வதேச பயங்கரவாத நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளிடம் போர்த் தளபாடங்களை பெற்றுக்கொண்டே அவற்றின் போர் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டே மறு புறம் அவற்றின் நிபந்தனைகளுக்கும் அடிபணிந்து கொண்டிருக்கின்றன. அந் நாடுகளுக்கு இலங்கையின் உள் நாட்டு நெருக்கடி தீர்க்கப்படாதிருக்கும் வரை தமது வியாபரத்துக்கு சிறந்த சந்தையாக ஸ்ரீ லங்காவை பயன் படுத்தும். அதைத் தான் இப்போது செய்தும் வருகின்றன.


தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு போர்க் கருவிகளினால் பதில் கூறும் இந்த அரசுக்கு யுத்தம் என்பது மாபெரும் பிழைப்பு அரசியலாக இலங்கையில் ஆகிவிட்டிருக்கிறது. இந்தத் தேர்தல் வருடத்தில் மீண்டும் சமாதானம், அரசியல் தீர்வு, பேச்சுவார்த்தை என பல்வேறு சிங்களக் கட்சிகள் வாக்குறுதிகளை வாரிக் கொட்டத்தான் போகின்றன. தமிழ் மக்களும் இந்தத் தேர்தல்கள் தீர்வைத் தருமென நம்பி மாறி மாறி வாக்களிக்கத்தான் போகின்றனர்.




1998ஆம் ஆண்டு 45 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் செப்டம்பர் மாதம் கொண்டுவரப்பட்டிருந்த குறைநிரப்பிப் பிரேரணையொன்றின் மூலம் மிகுதி மூன்று மாதங்களுக்காக 12.2 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டன. அதன்படி 1998ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு நிதி 57.2. பில்லியன்கள் ஆனது. 1997இல் 44 பில்லியன்கள் என இதில் குறிப்பிடப்பட்டிருக்கிற போதும் அதுவும் இப்படி குறைநிரப்பி பிரேரனையொன்றின் மூலம் அதிகரிக்கப்பட்டது. அவ்விபிபரம் இதில் சேர்க்கப்படவில்லை. மேலும் இதில் யுத்தத்துக்கான பொருள். சேவைகள் மற்றும் படையினருக்கான சம்பளங்கள் என்பவை மட்டுமே உள்ளடக்கப்படுகின்றன. ஏனைய யுத்தச் செலவுகள் இதில் அடங்காது என்பதையும் கவனத்திற் கொள்க.

→

# போரின் விலை என்ன?



இந்த இன அழிப்பு யுத்தத்தை ஸ்ரீ லங்கா அரசு தனது சொந்த மக்களுக்கு எத்தனை சுமையை ஏற்படுத்தியேனும் நடத்தியே தீருவது என்று கங்கணம் கட்டி செயற்படுவதை அதன் நடவடிக்கைகளிருந்து அறிய முடியும்.

இவ்வருடத்துக்கான பாதுகாப்புச் செலவு வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஒரேயடியாக ஒரு வீதத்தால் அதிகரிக்கப்பட்டமை இவ்வருடம் அதன் அழிப்பு நடவடிக்கை குறித்து தமிழ் மக்கள் மத்தியில் அதிக பீதியை கிளப்பியிருக்கின்றன. இந்தத் தேர்தல் வருடத்தில் அப்படியொரு நடவடிக்கை நிச்சயம் தமிழ் மக்களை திருப்தி செய்யப்போவதில்லை. அப்படியென்றால் அப்பேர்ப்பட்ட போர் நடவடிக்கைகள் யாரைத் திருப்திப்படுத்தும் நிச்சயம் பேரினவாதமயப்பட்டுவரும் சிங்கள மக்களைத்தான் என்பது கண்கூடு. சமீப கால போர்த் தளபாட கொள்வனவுகள் வடகிழக்கில் பொது மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடர்வதை உறுதி செய்பவையாகவே உள்ளன.

பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முக்கியமான காரணம் அதன் சமாதான கோஷம். சந்திரிகா ஒரு சமாதான தேவதையாகவே சித்திரிக்கப்பட்டார். 1994 ஓகஸ்ட் பொதுத் தேர்தலின் போது வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் 9 பக்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

"...இனப்பிரச்சினையின் விளைவாக அழிந்து போன உயிர்களையும் சொத்துக்களையும் கவனத்திற்கொள்கையில் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் தடையாக அதனை நாங்கள் உணர்வதால் சகல இனங்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய சமாதான நிலையை தோற்றுவிப்போம்...."

இது வரையான அரசின் பாதுகாப்பு செலவீனங்களுக்கு வரையைக் கவனிக்க.

பாதுகாப்பு அமைச்சுக்காக 1999க்கான வரவுசெலவுத்திட்ட விவாதம் சென்ற வருடம் டிசம்பர் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோது அதில் பேசிய பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் உரையில் யுத்தத்தில் 96 வீதம் முடிந்து விட்டதாக குறிப்பிட்டிருந்தார். அப்படி 96 வீதம் முடிந்து போன யுத்தத்திற்கு ஏன் 57 பில்லியன்கள் ஒதுக்கப்பட வேண்டுமென ஐ.தே.க.வினர் பலர் கேள்வி எழுப்பியிருந்தனர். சென்ற வருடம் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி 45 பில்லியனானாக இருந்தாலும் அரசாங்கம் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் குறைநிரப்பு பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து மிகுதி மூன்று மாதங்களுக்காக மேலதிகமாக 12.2 பில்லியன்களை ஒதுக்கியது. அத் தொகை ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 30வீதம் என்பது குறிப்பிடத்தக்கது. இத் தொகை 1998இல் அரச செலவீனத்தில் எட்டில் ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இந்த வருடத்துக்கான 57 பில்லியன்கள் குறைநிரப்புப் பிரேரணை ஒன்றினால் அதிகரிக்கப்பட மாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனென்றால் அப்பிரேரணையை ஆதரிக்க தமிழ் கட்சிகள் இருக்கும் வரை அரசுக்கு இது சிரமமான காரியமில்லை.

1983 தொடக்கம் 1993 வரையான 10 வருடங்களுக்கான பாதுகாப்பு செலவீனத்தைக் கூட்டினால் 58.5 பில்லியன்கள் மட்டுமே. இந்த ஒரு வருடத்துக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒதுக்கீட்டுக்கு அது சமன்.

அரசாங்கம் பெறுகின்ற வருவாயில் மூன்றில் ஒரு பங்கு இன்று யுத்தத்துக்காக செலவிடப்படுகிறது. அரசின் மொத்தச் செலவில் 13.9 வீதம் யுத்தத்துக்கே செலவிடப்படுகிறது. அரசாங்கம் பெறுகின்ற மொத்த வரியில் 40 வீதம் யுத்தத்துக்கே செலவிடப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரத்னவின் உரையில் "...இந்த நாட்டின் மக்கள் 250 பில்லியன்களை அதாவது 24884 கோடிகளை வரிகளாக அரசுக்கு செலுத்துகின்றனர். இதில் 10079 கோடிகளை பாதுகாப்பு வரியாக செலுத்தியுள்ளனர். கடந்த நான்கு வருடங்களில் 150 பில்லியன்கள் அதாவது 14805 கோடிகளை பாதுகாப்புக்கென்று அரசாங்கம் செலவு செய்துள்ளது...

..'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கைக்காக அரசாங்கம் நாளொன்றுக்கு 15 மில்லியன்களை செலவழித்துள்ளது. இதன்படி ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைக்காக கிலோ மீற்றர் ஒன்றுக்கென 200 மில்லியன்கள் செலவழிக்கப்பட்டுள்ளன. நான் நினைக்கிறேன், இலங்கையின் வரலாற்றில் பாதையொன்றை போடுவதற்காக அதிக செலவழிக்கப்பட்டது வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கான பாதை போடுவதற்காகவே..." என்றார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து இது வரையான ஐந்து வருடத்துக்குள் 202.5 பில்லியன்கள் யுத்தத்துக்கு ஒதுக்கியுள்ளது.

பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டில் முழு ஆசியாவில் முதன்மை நாடுகளில் இரண்டாவது இடத்தை இலங்கை வகிக்கிறது. தென்னாசியாவில் முதலாமிடம் என்கின்ற சாதனையும் இலங்கைக்கே உரியது.

98க்கு 57 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருக்கிற அதே வேளை கல்விக்கென 15 பில்லியன்களும் சுகாதாரத்துக்கென 9 பில்லியன்களுமே ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு தொகையும் மக்களின் வரியிலேயே அறவிடப்படுகின்றன. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மக்களிடமிருந்து பலாத்காரமாக வரி பிடுங்கப்படுகின்றன. ஆனால் மக்கள் இந்த யுத்தம் குறித்து அறிவது தடை செய்யப்பட்டுள்ளது. யுத்தச் செய்தித் தணிக்கை --- நாளாக தொடர்கின்றது. வரி கொடுக்கும் ஒவ்வொரு பிரஜையும் போரின் பங்காளிகள். ஆனால் யுத்தம் குறித்த உண்மை நிலையறியும் உரிமை இலங்கைப் பிரஜைகளுக்கு, போரின் பங்காளிகளுக்கு இல்லை.

அரச பயங்கரவாதத்தையும் அதன் அவலங்களையும் விலை கொடுத்து வாங்கும் மக்கள் நாங்கள்.

—ஜென்னி

## போர் இல்லையேல் இவர்கள் இல்லை!

இந்த யுத்தத்தின் கொடூரம் ஒரு புறம், மக்களை பலிகொடுத்துகொண்டிருக்கும் அதே வேளை யுத்தத்தினால் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரிவினர்களும் யுத்தத்தின் பக்க விளைவுகளாக உருவெடுத்துள்ளனர். இவர்களுக்கு யுத்தம் நின்று போனால் பிழைப்பில்லை. யுத்தம் தான் இன்று இவர்களைக் காப்பாற்றுகிறது.

ஆயுத வியாபாரத் தரகர்கள், யுத்தத்தை அரசியல் லாபத்துக்காக பந்தாடும் கட்சிகள் இவற்றில் முக்கியமானவர்கள்.

இதைவிட தென்னிலங்கையில் பல சிங்களக் குடும்பங்கள் போருக்குச் சென்றுள்ள தங்களின் பிள்ளைகள், அல்லது தகப்பனை அல்லது கணவனை நம்பியுள்ளது. அதே வேளை படையில் இந்த யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கும், தமிழ்ப் பெண்களிடமிருந்து பாலியல் வேட்கைகளைத் தீர்த்துக்கொள்ளும் பிரிவினரும் உருவாகியுள்ளனர். பாதுகாப்பு துறையினர், பொலிஸார் மத்தியில் ஆழமாக தோன்றியுள்ள லஞ்சம் பற்றிப் பேசவே தேவையில்லை. இவர்களைச் சார்ந்து தமிழ் லும்பன்கள் பலர் லஞ்ச ஏஜெண்டுகளாக உருவாகியுள்ளனர். சிறையிலிருந்து விடுவிக்க, சிறைக்கு கூட்டிச் செல்ல, வழக்கறிஞர் பிடித்துக் கொடுக்க, பொலிஸ் அதிகாரிகளை தொடர்பு படுத்த, பொலிஸ் பதிவு எடுக்க, அடையாள அட்டை பெற, சிங்கள மொழியில் கருமமாற்ற என அரச நிர்வாகத்துடன் தமிழ் மொழியில் கருமமாற்ற பல இடைத்தரகர்கள் உருவாகியுள்ளனர். தங்களின் மிஞ்சிய சொத்துக்களை காசாக்கி இவற்றை செய்து கொள்ளும் அப்பாவி மக்கள் பலர் இந்த தரகர்களால் மோசமாக சுரண்டப்படுகின்றனர்.

அடுத்தது அரச படையினருடன் இன அழிப்பு யுத்தத்தின் பங்காளர்களாக துணைப்படையினராக செயற்படும் தமிழ் இயக்கங்கள். ஸ்ரீ லங்கா படையின் கைக்கூலிகளாக செயற்பட்டுவரும் இவ்வியக்கங்கள் இன்று அரசின் தயவில்லாமல் வாழ முடியாதவர்களாகியுள்ளனர். மக்களை காட்டி அரசாங்கத்துடன் பேரம் பேசல், அரசாங்கத்தின் பலத்தை காட்டி மக்கள் மீது சண்டித்தனம் புரிதல், வரி வசூலித்தல், காடைத்தனங்களில் ஈடுபடுதல், அப்பாவி இளைஞர்களை வேட்டையாடுதல் என இவர்களும் இந்த யுத்தத்தினால் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

இவர்களைத் தவிர இந்த அரச பயங்கரவாதத்தின் கொடுமையிலிருந்து தப்ப முயற்சித்து வெளிநாடுளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் மக்களிடமிருந்து பெருமளவு பணத்தை சுரண்டும், கொள்ளையடித்து டிமிக்கி விடும் ஏஜெண்டுகள்.

காளான்களாக பெருகியுள்ள லொட்ஜ்கள், தொலைபேசி நிலையங்கள், மற்றும் அதிகளவு வாடகைக்கு வீடுகளை வழங்கும் பிரிவினரும், தரகர்களும். இது இன்று பெரும் சுரண்டலாக வளர்ந்து வருகின்ற துறை.

யுத்தத்தை காரணமாக வைத்து காளான்களாகத் தோன்றி வெளிநாட்டு நதிகளைப் பெற்று இயங்கி வரும் அரசு சார்பற்ற நிறுவனங்கள். யுத்தம் இருக்கும் வரை இந் நிறுவனங்களுக்கு இருப்பு—பிழைப்பு இருக்கும்.

ஒரு முறை மேர்ஜ் இயக்கத்தின் தலைவர் சார்ள்ஸ் அபேசேகர ஒரு கூட்டத்தில் உரையாற்றுகையில்... எல்லைப்புற கிராமங்களில் வசிக்கும் மக்களின் வருமானத்தில் 30 வீதம் யுத்தம் காரணமாகவே கிடைக்கின்றதாக தெரிவித்திருந்தார். ஊர்காவற் படையினராக, படையினருக்கு தேவையான பொருட்களை விநியோகம் செய்பவர்களாக இன்னும் பல்வேறு விதங்களில் இந்த வருமானங்களை அடைகின்றனர். இதைவிட சில எல்லைப்புறங்களில் படையினரை நம்பியே பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் பிரிவினர் தோன்றியுள்ளனர்.

இதை விட இன்னும் பல துறைகளில் யுத்தத்தைப் பாவித்து சுரண்டலை மேற்கொள்ளும் எத்தனையோ பேர் தோன்றியுள்ளனர். இவர்களுக்கு எல்லாம் யுத்தம் தான் கடவுள்.

பாதுகாப்புப் படைகளுக்கென 1976 தொடக்கம் 1996 வரை ஒதுக்கப்பட்டுவரும் தொகை இங்கு தரப்படுகிறது

| ஆண்டு | பாதுகாப்பு அமைச்சு | இராணுவம் (1) | கடற்படை (2) | விமானப்படை (3) | பொலிஸ் திணைக்களம் (4) | மொத்தம் (1)+(2)+(3)+(4) | பில்லியனில் |
|---|---|---|---|---|---|---|---|
| 1976 | 6,000,272 | 97,338,659 | 39,545,556 | 41,413,338 | 157,410,438 | 335,707,991 | .334 |
| 1977 | 6,185,995 | 118,387,193 | 59,015,905 | 46,168,421 | 178,662,133 | 402,233,652 | .402 |
| 1978 | 6,916,993 | 141,530,610 | 60,629,460 | 105,477,159 | 232,774,214 | 540,411,443 | .540 |
| 1979 | 95,325,331 | 202,815,299 | 107,326,582 | 82,283,820 | 259,111,400 | 651,537,101 | .652 |
| 1980 | 93,493,197 | 264,398,948 | 107,626,501 | 104,608,369 | 349,888,179 | 826,521,997 | .827 |
| 1981 | 121,319,569 | 279,344,486 | 115,394,109 | 125,665,624 | 388,080,996 | 908,485,215 | .908 |
| 1982 | 157,672,440 | 292,963,957 | 118,508,201 | 131,379,980 | 412,037,232 | 954,889,370 | .955 |
| 1983 | 236,799,827 | 454,364,713 | 132,137,997 | 412,260,701 | 513,307,090 | 1,512,070,501 | 1.512 |
| 1984 | 588,819,166 | 474,292,760 | 440,129,171 | 274,186,112 | 681,175,339 | 1,869,783,382 | 1.870 |
| 1985 | 2,768,986,096 | 1,091,709,340 | 333,374,227 | 528,798,310 | 816,029,200 | 2,769,911,077 | 2.770 |
| 1986 | 4,459,405,378 | 1,986,481,401 | 691,907,810 | 1,503,085,169 | 1,113,875,529 | 5,295,349,909 | 5.300 |
| 1987 | 3,393,149,950 | 3,655,426,997 | 959,802,062 | 1,677,506,004 | 1,657,618,339 | 7,950,353,402 | 8.000 |
| 1988 | 4,179,717,184 | 2,562,783,216 | 970,707,548 | 1,357,082,647 | 1,604,727,108 | 6,495,300,519 | 6.500 |
| 1989 | 2,666,107,787 | 2,463,797,515 | 749,469,995 | 905,230,059 | 1,690,313,384 | 5,808,810,953 | 5.800 |
| 1990 | 4,847,667,381 | 4,308,378,856 | 1,094,815,509 | 1,536,241,790 | 2,405,717,352 | 9,344,153,507 | 9.340 |
| 1991 | 1,524,173,419 | 7,140,385,958 | 1,602,483,445 | 1,948,967,130 | 3,442,211,538 | 14,134,048,071 | 14.130 |
| 1992 | 1,188,169,596 | 8,905,162,107 | 1,718,526,008 | 2,565,413,446 | 4,194,532,016 | 17,382,633,576 | 17.400 |
| 1993 | 1,290,828,176 | 9,107,893,012 | 2,316,334,000 | 2,363,607,104 | 4,481,471,154 | 18,269,305,270 | 18.270 |
| 1994 | 1,229,430,871 | 11,701,793,295 | 2,001,340,969 | 3,175,842,028 | 5,525,645,475 | 22,404,621,767 | 22.400 |
| 1995 | 1,492,864,840 | 17,661,423,649 | 4,261,532,732 | 5,343,973,702 | 5,935,924,516 | 33,202,854,599 | 33.200 |
| 1996 | 1,651,398,671 | 18,859,562,942 | 6,352,528,027 | 7,685,759,727 | 6,305,960,289 | 39,203,810,985 | 39.200 |

*Source: Accounts of the GoSL*

மனித உணர்வுகள் ஆகர்ஷியமானவை. மனிதர்கள் வேறுபடுவதைப் போன்று மனிதர்களின் உணர்வுகளுக்கும் பலதரப்பட்ட வேறுபாடுகள். அதுமட்டுமல்ல ஆண்களும், பெண்களும் தமது உணர்வு-களை வெளிப்படுத்துவதில் கணிசமானளவு வேறுபாட்டை கொண்டுள்ளனர் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த நுணுக்கமான உணர்வுகளையும், உணர்வுப் போராட்டங்களையும் திரைப்படவியலாளர்கள் திரைப்-படங்களின் மூலம் மிகச் சிறப்பாக எடுத்தாளுகின்றனர். இவ்வாறான திரைப்படங்கள் மனதில் வன்மையாக பதிந்து விடுபவை. அதேபோல் பலவிதமான தர்க்கங்களுக்கும் இட்டுச் சென்று விடுபவை.

டிசம்பர் 26ம் 'திகதி விபவியில் காண்பிக்கப்பட்ட கிறிஸ்டொப் கிஸலொவியிஸ்கியின் காதல் பற்றிய குறுந் திரைப்படம் ( A short Film about love) , லொலிட்டா (Lollita) ஆகிய திரைப்படங்கள் விமரிசனங்களை ஏற்படுத்தக்கூடிய திரைப்படங்களாகும்.

சம்பிரதாய காதல் என்ற வரையறையை மீறிய வண்ணம், ஏற்படும் காதல், அதற்கான போராட்டம், போராட்டத்தின் தோல்விகள் மனிதரை பாதிக்கும் வகை இத்திரைப்படங்களில் சித்திரிக்கப்படுகின்றன. இவ்வாறான வேறுபாட்டுத் தன்மையதான காதலினால், பெண்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் இவ்விருபடங்களிலும் சித்திரிக்கப்படுகின்றமையையும் கூறிக் கொள்ளலாம்.

குறிப்பாக காதல், பாலியல் இச்சைகள் என்பன பெண்களால் முன்வைக்கப்படும்பொழுதோ, பேசப்படும் பொழுதோ சமூகத்தினால் அவ்விடயங்களும், சம்பந்தப்பட்ட பெண்ணும் புறமொதுக்கப்படுகின்றனர். ஒரு திரைப்படங்களைத் தவிர பெரும்பாலான திரைப்படங்-களில் இந்த மாறுதலான தன்மையைக் காணக்கிடைப்-பதில்லை. இவ்வாறானதொரு மாறுதலான தன்மையே இவ்விரு படங்களிலும் காணப்படுகின்றது. இப்படங்களில் முக்கியப் பாத்திரம் ஏற்றுள்ள ஆண் பாத்திரங்களினாலேயே இவை வெளிப்படுத்தப்படுகின்றன. அதேவேளை இவ்விரு திரைப்படங்களின் பெண் பாத்திரங்களின் அல்லற் தன்மையையும் கருத்திற் கொள்வது அவசியம்.

19 வயது அனாதை இளைஞனான டொமெக், தபாலகமொன்றில் வேலை செய்து கொண்டு, தமது நண்பனின் வீட்டில், நண்பனின் வயது முதிர்ந்த தாயுடன் வசித்து வருகிறான். பெட்டிகளை அடுக்கி வைத்தது போன்று உயர்ந்து செல்லும் மாடிமனைக் குடியிருப்பில் வசிக்கும் அவன், தனது மனைக்கு நேரெதிரே வசிக்கும் நடுத்தர வயதுப் பெண்ணை தொலைக்காட்டி மூலம் மிக ஆர்வத்-துடன் அவதானித்து வருகிறான்.

அப் பெண் மெக்டா. அவளது சுறுசுறுப்பும், துணிச்-சலும் டொமெக்கைக் கவருகின்றது. அவள் பல ஆண்களுடன் நட்புக் கொண்டவள். மெக்டா காலையில் எழுந்து உடை மாற்-றுவது தொடக்கம் தமது ஆண் நண்பர்களுடன் கலவியில் ஈடுபடுவது வரை, அவளது அன்றாட நடவடிக்கைகளை மிகவும் ஆர்வத்துடன் டொமெக் அவதானிக்கின்றான். மெக்டா அறியாத வண்ணம் அவளைப் பின் தொடர்-கின்றான். அவளது வீட்டிற்கு பால் விநியோகிப்பவனாக பகுதி நேர வேலையில் ஈடுபடுகின்றான். இவ்வாறு டொமெக், தனது சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகளின் மூலம் மெக்டா மீதான காதலை உறுதிப்படுத்திக் கொள்-கின்றான்.

இவை எதனையும் அறியாத் மெக்டாவுக்கு, வழமையாக அவளுக்கு வரும் காசோலைகளை தபால-கத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அழைப்பு வருகின்றது. போலி காசோலைகளை அனுப்பி டொமெக், மெக்டாவை வரவழைக்கவே அவ்வாறு செய்கின்றான். தபாலகத்தில் அதனால் ஏற்படும் சச்சரவினால் வருத்தமடையும் மெக்டாவை, டொமெக் தேற்றி தன் காதலை தெரியப்படுத்துகிறான். பின்னர் தனது அறைக்கு டொமெக்கை அழைத்துச் செல்லும் மெக்டா, தான் ஒரு ஒழுக்கம் கெட்டப்பெண் எனவும், காதல் என்று ஒன்றுமில்லை என்றும் கூறி தனது பாலியல் நடவடிக்கை மூலம் அவமானத்தையும், கூச்சத்தையும் ஏற்படுத்துகிறாள். இந்த அவமானத்தால் மனம் குமுறும் டொமெக் மணிக்கட்டை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயற்சிக்கின்றான். மெக்டா அவனது அறையில் தனித்திருக்கிறான்.

டொமெக்கின் நடவடிக்கைகள் தனியே பாலியல் கவர்ச்சியையோ, இச்சையையோ அடிப்படையாகக் கொண்டதா என்ற வினாவுக்கு இல்லையென்றே பதில் கூற வேண்டியுள்ளது. மெக்டா தனது அறையில் நண்பனுடன் சண்டையிட்டுவிட்டு அழுது புரளும் போது டொமெக்கும் மனம் வருந்துகிறான். அவளது பாலியல் நடவடிக்கைகளை வக்கிரத்துடன் நோக்கவில்லை. ஆனால் அவளின் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக மெக்டா ஆண்களுடன் கலவிக் கொள்ளும்போது ஆத்திரமடையும் டொமெக், அவர்களுக்கு இடையூறு செய்யவென தீயணைப்பு படைக்கு போலித் தகவல் கொடுக்கிறான்.

மெக்டாவை துரத்தி துரத்தி காதலிக்கும் டொமெக்கின் பாத்திர வார்ப்பு ஆண் மனப்பான்மை கொண்டதாகும். ஒரு பெண்ணின் அன்பை, காதலை பெற எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனப்பான்மையினால் மெக்டா மிகுந்த சங்கடங்களுக்குள்ளாகின்றாள். அவளது இயற்கை வாழ்க்கை பாதிப்படைகின்றது. தொலைக்காட்டியில் தன்னை அவதானிப்பதை அறிந்தவுடன் அடிக்கடி ஜன்னலை பார்க்கின்றாள். கட்டிலை இழுத்து ஒழுங்குபடுத்துகின்றாள்.

Lolita திரைப்படத்தில் நடுத்தர வயதான ஆசிரியன் தமது தொழில் நிமித்தம் வீடொன்றில் தங்குகிறான். படுசுட்டியான இளம் சிறுமி லொலிட்டா அவரின் கருத்தை கவருகிறாள். ஆசிரியரின் இளமைக் காதல் நினைவுகளை உசுப்பி விடுகிறாள். அவள் லொலிட்டா. இளமையில் இறந்து போன தனது காதலியின் ஸ்பரிசம், அழகு அனைத்தையும் லொலிட்டாவிடம் அவர் காண்கிறார். அவளுடன் பிணைப்பு கொள்கிறார். லொலிட்டாவின் தாயை மணந்துக் கொள்வதன் மூலம் லொலிட்டாவின் பாதுகாவலனாகிறார். தாயின் பாலியல் தொந்தரவை விரும்பாத ஆசிரியனின் நடத்தைகள் தாயை தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றது. தாயின் தற்கொலையின் பின் இவர்கள் காதல் தங்கு தடையின்றி முன்னேறுகின்றது. காலத்தின் போக்கிற்கேற்ப லொலிட்டா பிற ஆணுடன் பழகும்போது, துன்பமும், அவள் மீதான உரிமையை காப்பாற்றும் முயற்சியைக் கொள்ளும் இவ் ஆசிரியன், இறுதியில் தன் காதலி தன்னிலிருந்து பிரிவதற்கு காரணமாக விளங்கும் நபரை கொலைசெய்துவிட்டு, பொலிசாரின் துரத்தல்களுக்கிடையே தொலைந்துபோகின்றான். லொலிட்டா 17 வயதில் கர்ப்பிணியாகி விடுகிறாள்.



ஒரு சிறுமியின் மீதான ஈர்ப்பு அதன் விளைவுகள் இப்படத்தின் சித்திரிப்பாக உள்ளது. அதேவேளை ஒரு சிறுமியின் வாழ்வை ஆண்நிலைச் சிந்தனை எவ்வாறு குலைக்கின்றது என்பது இப்படத்தில் சித்திரிக்கப்படுகின்றது.

சர்வதேச தரத்திலும் இலங்கையிலும் பரவலாக இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு சில வேளைகளில் இவ்வாறு நியாயம் கற்பித்துக்கொள்ளலாம் என்றார் இப்படத்தை பார்த்த என் நண்பி.


## 0 காதல் பற்றிய ஒரு குறும்படம், 0 லொலிற்றா :

# இரு திரைப்படங்களும், பெண் பாத்திரங்களும்.

மனதை வருடும் இனிய இசை கவித்துவமான காட்சிகள் உதாரணமாக, லொலிட்டாவின் Hairpin ஐ வைத்-துக்கொண்டு மிகக் கவலையுடன் காரையோட்டும் ஆசிரியன், டொமெக்கினால் விநியோகிக்கப்பட்ட பால் போத்தல் மேசையில் கைதவறி ஊற்றும்போது அவசரமாக பாலை அள்ளும் மெக்டா, பகுதிநேர வேலைகிடைத்தவுடன் சந்தோஷமாக பால்போத்தல் வண்டியை படிகளில் உருட்டிச்செல்லும் டொமெக் போன்ற காட்சிகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியன. கிஸலொவியிஸ்கியின் படத்தில் இடம்பெறும் மெல்லிய பியானோ இசை உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் உள்ளது.

இவ்விரு படங்களிலும் ஆண் மேலாதிக்க மனப்பான்மையின் காரணமாக காதல் என்ற பெயருடன் லொலிட்டாவும், மெக்டாவும் சிதைக்கப்படுகின்றனர். சிதைந்தவர்களும், சிதைக்கப்பட்டவர்களும் பெண்களாக இருப்பது மனதை நெருடுகின்றது எனலாம். □

— ரத்னா





# பவுரு வளளு (சுவர்களுக்குள்ளே)

# எதிர்பார்ப்பைத் தந்த படம்!

நீட்டா பெர்ணான்டோ தயாரித்து, நடித்ததும், பிரசன்ன விதானகே இயக்கியதுமான 'பவுரு வளளு' (சுவர்களுக்குள்ளே - Walls within திரைப்படம் தற்போது இலங்கைத் திரையரங்குகளில் காண்பிக்கப்படுகின்றது.

இங்கு திரையிடப்படுவதற்கு முன்பே, கடந்த ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச திரைப்படவிழாவில் காண்பிக்கப்பட்டு சிறந்த நடிகைக்கான விருதையும் நீட்டா பெர்ணான்டோவுக்கு பெற்றுக் கொடுத்தது. இந்தக் கலந்துகொள்ளலும், கிடைத்த விருதும் இப்படம் பற்றிய பாரிய எதிர்பார்ப்பை சினிமா ரசிகர்களிடம் தோற்றுவித்திருந்தது. எனினும், இப்படத்தைப் பார்த்தபோது சர்வதேச தரம், விருது பற்றிய கேள்விகளையே என்னுள் தோற்றுவித்தது. உண்மையில் இப்படத்தின் கதையும், பாத்திரங்களின் நடிப்பும் சர்வதேச விருதுக்கான தகைமையைப் பெற்றிருக்கின்றதா? ஏனைய விருது பெறாத 'நல்ல' சிங்களப் படங்களிலிருந்து வேறுபாடான எந்த சிறப்பம்சத்தை இப்படம் கொண்டிருக்கிறது? என்பதை மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

படத்தின் கதை இதுதான்:

காலி கோட்டையிலுள்ள வீடொன்றில் வசிக்கும் ஒரு குடும்பமே இதன் பிரதான பாத்திரம். கதை 1950-60 காலப் பின்னணியைக் கொண்டது. கிறிஸ்தவக் குடும்பமான இதில் தாயாக நீட்டா பெர்ணான்டோ நடிக்கிறார். இவருக்கு இரண்டு மகள்மார். ஒருத்தி திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயானவள். இரண்டாமவள் திருமணப் பருவத்தில் இருப்பவள். காதலில் வீழ்ந்திருப்பவள். இவர்களின் தந்தை 20 வருடங்களுக்கு முன்னே தாயைப் பிரிந்தவர். பிள்ளைகளைப் பார்க்கவும், அவர்களின் விசேட தினங்களில் கலந்துகொள்ளவுமென உரிமை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வருபவர். தனக்குத் தெரிந்த தையல் தொழிலால் குடும்பத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார் தாய். வாழ்வு சுமுகமாய், இயல்பாய் ஒரு தனித்துப் போன பெண்ணாக மகளுடன் வாழ்க்கை போகிறது. இந்த இயல்பின் வாழ்க்கையில் இன்னொருவர் குறுக்கிடுகிறார் (டொனி ரனசிங்ஹ). 25 வருடங்களுக்கும் மேல் கடற்படைக் கப்பலில் உலகை வலம் வந்தவர். நாட்டு வைத்தியத்திற்காய் இப்பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கிறார். ஒரு முறை இவர் தான் யாரென்று குறிப்பிடாமல், குறித்த ஹோட்டலுக்கு வருமாறு ஒருவனிடம் கடிதமனுப்பி இந்தத் தாயை அழைக்கிறார். இந்த அழைப்பால் சங்கடப்படும் இவள், வீட்டிலிருக்கும் மகளிடம் தைத்த உடைகளை கொடுத்துவிட்டு வருவதாகப் பொய்சொல்லிவிட்டு ஹோட்டலுக்குச் செல்கிறாள். ஹோட்டலில் அழைத்தவன் இவளின் முன்னாள் உறவு என்பது Flash back இல்லாமலும், எந்தவித வர்த்தகத் தனங்களுமில்லாத வகையிலும் கதை மூலமே அறியமுடியுமாயிருக்கிறது. அவள் திருமணம் முடித்த ஒரு பெண்ணாக நடந்துகொள்கிறாள். இந்தப்போக்கில் பின்னர் திருப்பம் ஏற்படுகிறது. தனித்தவனாய்க் கஷ்டப்படும் அவனை வீட்டுக்கழைத்து வந்து பராமரிக்கும் இரக்க நிலைக்கு உட்பட்டு அவ்வாறே செய்கிறாள். இவளுக்கான உதவிகளைச் செய்வதில் வீட்டு சமையல்காரியும் பங்கேற்கிறாள். ஓர் 'அங்கிளா'க மகளாலும் அழைக்கப்பட்டு, எல்லோராலும் ஆரம்பத்தில் ஏற்கப்பட்ட இவர் பின்னர் வெறுப்புக்களுக்குள்ளாகிறார். தூரத்து உறவினரென அறிமுகப்படுத்தி வீட்டுக்குள் அழைத்து வரப்பட்ட இவருடனான தாயின் உறவின் நெருக்கமே எல்லோரிலும் வெறுப்பை ஏற்படுத்துகிறது. விட்டுப்போன கணவனும் 'அங்கிளை' ஏசிவிட்டு காறித்துப்பிச் செல்கிறான். மகள் வெறுக்கிறாள். மகளுக்கு நிச்சயிக்கப்பட்டவனின் தாயாரும் இவளை ஏசிவிட்டு செல்கிறாள். திருமணம் நடக்காது என்றும் கூறுகிறார். இந்தளவு வெறுப்புக்கான காரணம் தாய் அவனுடனான நெருக்கத்தால் கர்ப்பமுண்டாவதே. இது அவளையும் குற்றவுணர்வுக்குள்ளாக்கி, கர்ப்பத்தைக் கரைக்கச் செய்கிறது. கிறிஸ்தவப் பின்னணியில் தன்னைப் பெரும்பாவியாகவே உணரும் அவள் இந்த மனநிலையிலேயே போய் ஒரு மனநோயாளியாக ஆகிவிடுகிறாள். இறுதியில் அவள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதை எல்லோரும் அமைதியாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விருந்தினரான 'அங்கிளே' அவள் கையைப் பிடித்து வந்து காரில் ஏற்றுகிறார். அவள் அதை ஒரு திருமண நாளாக நினைத்து நடந்து கொள்கிறாள்.

இதுதான் என்னால் சொல்ல முடிந்த சுருக்கமான திரைப்படக் கதை.

இப்படம் ஒரு பெண்ணின் கணவன் பிரிந்தபின்னான துணிச்சலைக் காட்டக்கூடியதாய் இருந்தாலும் முடிவில் அவள் சித்த சுவாதீனமற்றுப்போவது பலவீனமான முடிவையே காட்டியுள்ளது. ஆண்கள் வைப்பாட்டிகளை வைத்துக்கொள்வதற்குச் சமதையாக இவளின் இந் நடவடிக்கையும் கொள்ளப்பட்டு சமூகத்தின் வெறுப்பும், அதன் ஆணாதிக்க சிந்தனைப் போக்கும் அவளில் அதிக தாக்கத்தை, அழுத்தத்தை ஏற்படுத்தி இறுதியில் பைத்தியக்காரியாக மாற்றிவிட்டதாகத்தான் இந்தக் கதைப்போக்குச் செல்கிறது. இப்படத்தில் சில அழுத்தத்தோடு எதிர்பார்க்கப்படும் சில வெளிக்காட்டல்கள் மிகச் சாதாரணமாகவே காண்பிக்கப்படுகிறது. பிரிந்ததன் பின்னாலும் - சட்டப்படியற்று - பெண் மீதான ஆதிக்கம் கணவனுக்கே உண்டென்பதை காட்டக் கூடிய சந்தர்ப்பத்திலேயே இந்த வெளிப்படுத்துகை நடிப்பென்றவகையில் ஓரளவு நன்றாக அமைகிறது.

இப்படத்தில் நடித்துள்ளவர்கள் அனைவரும் நல்ல நடிக, நடிகைகள். மிகச் சாதாரணமாகத் தான் நடித்துள்ளார்கள். ஆனால், சிறந்த நடிகை விருதுபெறும் நடிப்பை நீட்டா வெளிப்படுத்தியிருக்கிறாரா என்றால் என்னால் இல்லையென்றே கூறமுடிகிறது. இலங்கைத் திரைப்படம் என்ற வகையிலும், இலங்கை நடிகை என்ற வகையிலும்தான் விருது பற்றிய சிலாகிப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதுபோல் இப்போது தோன்றுகிறது.

சினிமா விமர்சகர்கள் இது பற்றி ஆழ அகலமான தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவேண்டும்.

# தமிழ் வரலாற்றாசிரியர்கள்:
# சோரம் போனவர்களின் நீளும் பட்டியல்?

— விஜயன்

**இன்று** தமிழர் வாழுகின்ற எல்லா நாடுகளிலும் பெரிதாகப் பேசப்படுகின்ற ஒரு விடயம் "இலங்கையிலுள்ள தமிழர்கள் இலங்கைக்குப் பூர்வீகமானவர்களல்ல டச்சுக்காரர் இலங்கையை நிர்வகித்த காலத்தில் (1658-1796) புகையிலைப் பயிர்ச் செய்கைக்காக இறக்குமதி செய்யப்பட்ட மக்களே இன்று யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள்" என இலங்கையின் மேன்மை தங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க தென்னாபிரிக்கா நாட்டில் தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் கூறியிருந்தது பற்றியதாகும்.

இவ்விடயம் பற்றி உலகெங்கும் பேசப் படுவதற்கு அப்பால் இலங்கையிலுள்ள தமிழ் வரலாற்றாசிரியர்கள் இது பற்றி வாய் திறந்தார்களா? என்பது தான் இன்றுள்ள பிரதான கேள்வி. ஜனாதிபதியின் கூற்றுக்கு எதிர்ப்புக் குரல் காட்டியவர்கள் அரசியல்வாதிகளே. ஏன் எம்மத்தியிலுள்ள "சிந்தனையாளர்கள்", புத்திஜீவிகள்", "முற்போக்குவாதிகள்" போன்ற சிலுவைகளைச் சுமப்போர் மௌனித்தார்கள்?

"ஜனாதிபதி சந்திரிகா ஒரு வரலாற்றாசிரியரல்ல. எனினும், பொறுப்பு வாய்ந்தவர். ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு அநியாயம் நடந்து விட்டது. அதன் பிரதிபலிப்பே இன்று நடைபெறும் போராட்டம். எனவே அவற்றை உரியமுறையில் அணுகி, தமிழ் மக்களை கௌரவமிக்க பிரஜைகளாக நடத்தவேண்டும் எனவும், கணவனை இழந்த எனக்கு இழப்புக்களின் வேதனை என்னவென்று புரியும் எனவும் உணர்ச்சிபீறிடப் பொதுமேடைகளிற்பேசி, 1994 பொதுத்தேர்தலின்போது தமிழ் மக்களின் வாக்குகளையும் சுருட்டிப் பதவிக்கு வந்தவர்.

பெரிய எதிர்பார்ப்புடன் காத்திருந்த தமிழ் மக்கள் இலங்கை "சுதந்திரமடைந்த" காலத்திலிருந்து என்றுமே சந்தித்திராத துன்பங்களை தற்போது அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்களுக்குச் சமாதானத்தையும், சுபீட்சத்தையும் பெற்றுக் கொடுக்கவே வடக்குக் கிழக்கில் முப்படைகளையும் இறக்கி "சமாதானப் போர்" ஒன்றையும் நடாத்தி வருகிறார்.

இப்போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. பயங்கரவாதப் புலிகளுக்கு எதிரானது என்று, அதற்கொரு வியாக்கியானமும் கொடுத்திருக்கிறார். இதன்மூலம் தமிழ் மக்கள் எப்போதும் எமது சகோதரர்கள் என்ற வேடத்துடன் செயற்பட்ட ஜனாதிபதி தென்னாபிரிக்கத் தொலைக்காட்சிப் பேட்டியில் தமிழ் மக்களா? அவர்கள் இலங்கையின் பிரஜைகளா? அவர்களுக்கு உரிமையா? அப்படி ஒரு விடயத்தைக் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை என்ற பாணியில் சொல்லித் தொலைத்து விட்டார்.

ஜனாதிபதியின் அமைச்சரவையில் உள்ளவர்கள் தமிழ் மக்களின் மனம் புண்படும் விதத்தில் எதையாவது கதைத்து விட்டால் அது அவர்கள் தனிப்பட்டமுறையில் விட்ட தவறு எனச் சுட்டிக் காட்டுகின்ற ஜனாதிபதி, இப்பேட்டியின் மூலம் மீளமுடியாத ஒரு கொடூரத்தைத் தமிழ் மக்களுக்கு இழைத்ததன் மூலம் சிங்களப் பாரம்பரியத்தில் வந்த ஒரு நவீன தலைவியாக சிங்கள மக்கள் மத்தியில் இடம் பிடித்து விட்டார். இந்தச் செய்தியானது சந்திரிகா அரசில் தொங்கிக் கொண்டிருந்த ஒட்டுண்ணித் தமிழருக்கு முகத்தில் ஓங்கி அறைந்த ஒரு சம்பவமுமாகும்.

யாழ்ப்பாணத் தீபகற்பம் 1995 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இடம்பெற்ற "ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் பின் இலங்கை அரசின் "சிவில் நிர்வாகத்தில்" இருந்து வருகிறது. யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வரப்பட்ட காலப் பகுதியிலிருந்து இற்றை வரை 600க்கும் மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் காணாமற் போயுள்ளனர். கிருஷாந்தி கொலை தொடர்பான வழக்கு விசாரணையின் போது சந்தேக நபர்களில் ஒருவரான ஒரு இராணுவ வீரரின் வாக்குமூலத்தில் இதற்கான தடயமொன்று கிடைத்தது. 400 பேருக்குமேல் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட இடம் செம்மணி மயானத்தில் உள்ளதெனவும், அதைத்தான் அடையாளம் காட்டமுடியும் எனவும் கூறியிருந்தார்.



இத்தகைய ஒரு செய்தியைக் கூறியதற்காக அந்த இராணுவ சிப்பாயை சிறைக்குள் வைத்துக் கொல்லும் முயற்சியொன்றும் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய சீர்கெட்ட நீதி நடைமுறையில் நாடு இருக்கும் போது அரச வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகையாளர்கள் என்பன "பயங்கரவாதம் நிலவிய காலப்பகுதி" என முன்பு ஒரு காலப்பகுதி இருந்ததாக் குறிப்பிட்டு வருவது வெகுஜனத்தொடர்பு சாதன விகடத்திற்குள் அடங்கும். அப்படியென்றால், ரிவிரெச நடவடிக்கையின் பின்பான காலப்பகுதியை அதிபயங்கரவாதம் நிலவுகின்ற காலப்பகுதி எனக் குறிப்பிடுவது சாலச் சிறந்தது.

இத்தகைய செய்திகளின் உழைச்சல்களின் பின்னணியில் தான் தமிழ் வரலாற்றாசிரியர்களின் தளம்பலற்ற நிலையை தமிழ் மக்கள் மதிப்பீடு செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் புராதன வரலாற்றை எழுத முயற்சித்த இரு பேராசிரியர்களான பேராசிரியர் க. இந்திரபாலா, பேராசிரியர் சி. பத்மநாதன் ஆகிய இருவரும் ஒரு மக்கள் கூட்டத்தின் பூர்வீக வரலாற்றை எழுதுவதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் மிக மிக அவசியம் எனவும், யாழ்ப்பாணத்தில் கல்வெட்டுக்கள் இல்லாததால் யாழ்ப்பாணத்தின் பூர்வீக வரலாற்றை எழுதும் முயற்சியிலிருந்து பின்வாங்கி விட்டனர்.

இன்னோர் தமிழ் வரலாற்றாசிரியர் கலாநிதி. பொ. ரகுபதி. யாழ்ப்பாணக் குடியேற்றம் பற்றிய ஒரு தீர்க்கமான ஆய்வொன்றைத் தொடக்கி வைத்தவரும் இவரே. இளம் வயதினரான இவர் தென்னிந்திய மொழிகளிலும், கல்வெட்டு வடிவங்களிலும், அகழ்வாராய்ச்சித் துறையிலும் நன்கு தேர்ச்சியுள்ளவர். இவரது கருத்துப்படி:

"யாழ்ப்பாணம் சுண்ணாம்புக் கற்களைக் கொண்ட ஒரு பிரதேசமாக இருப்பதால், கல்வெட்டுக்கள் ஏதாவது இருந்திருந்தாற் கூட புவிச்சரிதவியல் மாற்றங்களால் காலகதியில் அவை சிதைவடைந்து போயிருக்கும். எனவே பழங்குடிமக்கள் பயன்படுத்திய ஏனைய எச்சங்களைத் தேடி அறிவதன் மூலம் அந்த மக்களுக்குரிய பூர்வீகத்தைக் கண்டறிய முடியும்" என்ற யதார்த்தமானதும், விஞ்ஞானபூர்வமானதுமான கருத்தை முன்வைத்தார்.

கலாநிதி ரகுபதியின் முயற்சியின் பயனாகவே ஆனைக்கோட்டை தொல்லியல் எச்சங்கள் கிடைத்தன. கோம்பயல் மணல் சுடலையை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட மண்மேடுகள் பூர்வீக மக்கள் வாழ்ந்த பகுதிகளாக இருக்க வேண்டுமென அவர் கூறிவந்த போதிலும், மண் வெட்டி ஏற்றும் பணியில் ஈடுபட்ட தொழிலாளரின் கண்ணிற்பட்ட எச்சங்கள் அப்பிரதேசத்தை ஒரு முக்கிய தொல்லியற் தளமாக மாற்றியது.

ரகுபதி குழுவினர் களத்தில் இறங்கி வேலை செய்த போது, 2,500 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இரு எலும்புக் கூடுகள், மத ஆசாரங்களுடன் சவ அடக்கம் செய்யப்பட்ட நிலையிற் கண்டுபிடிக்கப்பட்டது. இது தமிழரின் பூர்வீக வரலாறு பற்றிய தேடலின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இவ்வெலும்புக் கூடுகள் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நூதனசாலையில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. 1987இல் இந்திய இராணுவ நடவடிக்கையின் போது பல்கலைக் கழகம் இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்குள்ளான போது அவை அழிக்கப்பட்டு விட்டன.

ஆனைக்கோட்டை அகழ்வாய்வு தொடர்பான ஒரு வேடிக்கையான விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். 1962இல் தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலேயே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மக்கள் முதன்முதலில் குடியேறினர் எனத் தீர்க்கமான முடிவுடன் லண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்திருந்தார் போராசிரியர் க. இந்திரபாலா. ஆனால், ரகுபதியின் புதிய கண்டுபிடிப்பு அவரது ஆய்வினை தலைகீழாக நிராகரித்துவிட்டதென்பதை உணர்ந்து ஆனைக்கோட்டை ஆய்வில் தன்னை ஒரு முக்கிய பாத்திரமாக ஆக்கிக் கொண்டார்.

எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் சிறு தூரிகை (Brush) ஒன்றுடன் அங்குசென்று, மிகப் பக்குவமாகச் சுரண்டி அவற்றை வெளியில் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதன் மூலம் இரண்டு விடயங்களைக் கையாள நினைத்தார். ஒன்று: கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தமிழர் வரலாற்றில் மிகப்பெறுமதியானது என்பதை யாழ்ப்பாணத்து மக்களுக்குக் காட்டுவது. இரண்டு: ஏற்கெனவே தனது பேனையினால் செய்த தவறைத் தூரிகையினால் மறைக்க முயன்றது.

இத்தகைய வினோதங்களை நேரிற் கண்ட பலர் இன்னும் உயிர் வாழ்கின்றனர். இவ்வாறு பலருக்குத் தெரியாதிருக்கும் செய்திகளை அவர்கள் வெளிக்கொணர முயற்சித்தால் என்ன? பத்திரிகைகளில் எழுதுவதனூடாக தமிழ் வாசகர்களுக்கு எட்டச் செய்யலாமல்லவா?

1978இல் பேராசிரியர் ச. பத்மநாதனால் வெளியிடப்பட்ட Kingdom of Jaffna (யாழ்ப்பாண இராச்சியம்) என்ற ஆங்கிலப் பதிப்பு இன்னோர் முக்கியமான நூலாகும். எனினும், இவரது ஆய்வும் பேராசிரியர் க. இந்திரபாலாவின் ஆய்வினை ஒத்த வகையிலேயே அமைந்தது.

1987இல் கலாநிதி பொ. ரகுபதியினால் எழுதப்பட்ட ஆய்வு நூல் Early Settlements in Jaffna - An Archacological Survey என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. இந்நூலின் காத்திரம் ஏனைய ஆய்வுகள் எல்லாவற்றையும் விட உயர்ந்து நிற்கிறது.

1970-77 காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தவேளை பல தமிழ்ப் "புத்திஜீவிகள்" தம்மை மாக்ஸிச வாதிகளாகவும், முற்போக்குச் சிந்தனையாளர்களாகவும் காட்டிக் கொண்டு, சிங்களத் தலைமைகளுடன் கைகுலுக்கிக் கொண்டு தமது நலன்களை அடைந்து கொண்டனர். இப்பட்டியலில் பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி ஆகியோர் முக்கியமானவர்கள். (இன்றுள்ள சூழலில் அப்பட்டியல் மேலும் நீண்டு வருகிறது.)

இவர்களுள்ளும் பேராசிரியர் கா. இந்திரபாலா தமிழரின் வரலாறு இலங்கையில் 13ம் நூற்றாண்டுடன் ஆரம்பமாகிறது (ஜனாதிபதி சந்திரிகாவை விட முன்னதாக மூன்று நூற்றாண்டுகளை இழுத்துச் சென்றிருக்கிறார்.) எனக் குறிப்பிட்டதன் மூலம் மேலும் ஒரு படி முன்னேற்றம் கண்டார். இதன் அடையாளமாக பல சிங்களத் தலைவர்கள் மத்தியில் அவர் "சிங்கள பாலா" எனச் செல்லமாக அழைக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.



ஆனைக்கோட்டை அகழ்வாய்வின்போது கிடைத்த இன்னோர் முக்கிய தடயம், எலும்புக் கூடொன்றின் கைவிரல் எலும்பில் காணப்பட்ட மோதிரமாகும். அதிற் பொறிக்கப்பட்டிருந்த இலச்சினை யாழ்ப்பாணத்திற்குரிய சிறப்பைக் கொண்டிருந்தது. அம்மோதிரம் யாழ் - பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த போதிலும் பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் போது அதை எடுத்துச் சென்று தென்னிந்தியாவிலுள்ள ஒரு நூதனசாலையில் அதிக விலைக்கு விற்று விட்டு அவுஸ்திரேலியாவில் குடிபுகுந்ததாகவும் ஒரு செய்தியுண்டு. எது எப்படி இருப்பினும் விலைமதிப்பற்ற அந்த அடையாளத்தை அழித்தவர்கள் தமிழர் வரலாற்றுக் கொலைக்குப் பொறுப்பானவர்களே.

தமிழர் வரலாற்றில் மோசடி செய்த இன்னோர் நபர் ஈவ்லின் ரட்ணம். இவரது நினைவாக யாழ் - பல்கலைக்கழகத்திற்கு அருகே ஒரு நூல் நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. ரட்ணம் தமிழரால் நினைகூரப் படவேண்டிய அயோக்கியத்தனமான பக்கம் வேறுண்டு.

ஆங்கிலம் கற்ற வகுப்பைச் சேர்ந்த, செல்வந்தரான ரட்ணம் கல்விசார் அந்தஸ்தொன்றைப் பெற முடியாமற் கஷ்டப்பட்டார். வரலாறு, தொல்லியல் போன்ற துறைகளில் ஆர்வமுள்ளவராக இருந்த அவர், சிந்துவெளி அகழ்வாராய்ச்சிப் பகுதிகளான மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

இத்தகைய பல தேடல்களின் மூலமாக சேகரித்திருந்த தமிழர் வரலாறு சம்பந்தமான ஆவணங்கள் பலவற்றை பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியரான கே. எம். டி. சில்வாவிடம் தாரை வார்த்துக் கொடுத்து, அவர் மூலமாக தனக்கொரு பல்கலைக்கழக பட்டத்தைப் பெற முயன்றார் ரட்ணம் அவர்கள்.

இந்த ஆவணங்கள் கைமாறியதால் சிங்கள வரலாற்றாசிரியர்கள் பல மோசடிகளைச் செய்ய உதவியாக இருந்ததே தவிர, ரட்ணம் அவர்களுக்குப் பட்டமோ, தமிழருக்கு வரலாற்று வாய்ப்புகளோ கிட்டவில்லை.

1974இல் யாழ் - பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டபின் அதனை பட்டம் பெற்றுக் கொள்ளத்தக்க இன்னோர் வாய்ப்பாகக் கருதினார் ரட்ணம் அவர்கள். இந்நோக்கத்திற்காக பேராசிரியர்களான இந்திரபாலா, கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரைப் போஷிக்கும் முயற்சியில் அதிதீவிரம் காட்டினார். இப்பேராசிரியர்களதும், யாழ்.-பல்கலைக் கழகம் தொடர்பான செய்திகளையும், கொழும்புப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு தன்னாலான முயற்சிகளைச் செய்து கொடுத்தார். ரட்ணத்திற்கும் கொழும்புப் பத்திரிகையாளர் சிலருக்குமிடையில் காணப்பட்ட மதுபான உறவுகள் இதற்குப் பெரிதும் உதவியதாகவும் சொல்லப்படுகிறது. இதன்மூலம் யார் யாருடைய தேவைகளுக்காக ஏதோவெல்லாம் அரங்கேறியுள்ளது என்பது தெளிவு.

பேராசிரியர் இந்திரபாலாவின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுத் தொகுப்பு, பிரசுரிக்கப்படாமல் இருந்தமையால் அது பற்றிய செய்திகளை வெளியில் எடுப்பது சிரமமாக இருந்தது. அவ்வாய்வினை பேராசிரியர் இந்திரபாலாவிடம் நேரடியாகக் கேட்டுப் பெற விரும்பாத ரட்ணம் அவர்கள் கலாநிதி (தற்போது பேராசிரியர்) சி.க. சிற்றம்பலத்தினூடாக அவ்வாய்வுத் தொகுப்பை ஒரு கிழமையில் திரும்பத் தருவதாக ரகசியமாகப் பெற்று ஈவிரின் ரட்ணம் நூல் நிலையத்தில் வைத்து 3 பிரதிகளைத் தட்டச்சுச் செய்து கொண்டார். இப்பணிக்கு மூன்று பெண் தட்டெழுத்தாளர்கள் உதவியிருந்தனர்.

பேராசிரியர் இந்திரபாலாவின் ஆய்வினை வாசித்துவிட்டு ரட்ணம் இவ்வாறு கூறினாராம். "He has Finished us." ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி தனக்கொரு பட்டம் பெறவேண்டி இருந்தமையால் பேராசிரியர் இந்திரபாலாவுடனான உறவுகளை முறித்துக் கொள்ள விரும்பவில்லை. இவ்வாறான திரைமறைவு வாழ்த்துதலுக்கும், தூற்றதலுக்கும் தமிழர்கள் பெயர்போனவர்கள் என்பது உண்மையே. கொள்கை ரீதியான ஒரு ஸ்திரமான நிலைப்பாடு இல்லாமையே இதற்கான காரணமாகும். இந்திரபாலாவுடனான சினேகத்தின் அடையாளமாக ஒரு காரை அன்பளிப்புச் செய்தாராம் ரட்ணம் அவர்கள்.

குடாநாட்டுத் தொல்லியற் சான்றுகள் பலவற்றை சேகரித்து வைத்துள்ள பலரில் கலைஞானி முதலிடம் பெறுகிறார். மட்பாண்டங்கள், நாணயங்கள், செங்கற்கள், ஓடுகள், இதர பொருட்கள் என அவரிடம் இருந்தவற்றை எல்லாம் வைத்து 1991 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு கண்காட்சியையும் நடாத்தினார். இவரது சேகரிப்புக்களை அறிவியற் பார்வையற்றது என தமிழ்ப் "புத்திஜீவிகள்" நிராகரித்து விட்டனர். அல்லது கண்டுகொள்ளாது விட்டுவிட்டனர் எனலாம்.

இலங்கைத் தமிழர் பற்றிய ஆவணங்களை அதிகளவில் சேகரித்து வைத்துள்ள குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் இன்னோர் முக்கியத்துவமான மனிதர். இவரது முயற்சியும் அளப்பரியது.

தொல்லியல், வரலாறு போன்ற விடயங்களில் "புத்திஜீவிகள்" என்ற வரையறைக்குட்படாது. ஆனால், அதற்கு மேலாக பல வருடங்களைச் செலவிட்டு இற்றைவரை பல்வேறுபட்ட ஆய்வுகளில் ஈடுபட்டு வருபவர்களான ம.க.அ. அந்தனிசில், நா. நவநாயகமூர்த்தி, தேவமணி ரஃபேல் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

→

# வாணியின் வீடு

அ.இரவி



நான் முயலைப்பற்றி அடிக்கடி கனவு கண்டேன். அழகான, வெண்பஞ்சுப் பாதங்கள் கொண்ட மென் முயல்கள் அவை. எங்கள் வீட்டைச் சுற்றிலும் பற்றைக் காடுகளே நிறைந்திருந்தன. இதனால், நாங்கள் பல விதத்திலும் ஆபத்தை எதிர்நோக்கினோம். எங்கள் வீட்டின் விறகுக் குவியல்களுக்குள் தொண்ணூறு புள்ளிப் புடையன்களும், செட்டி நாகங்களும் கிடந்தன. முருங்கை மரத்தில் முருங்கைக் காய் போல கோடாலிப் பாம்புகள் தொங்கின. இலகுவாகவே சாரைப் பாம்புகள் வந்து எங்கள் கோழிகளின் முட்டைகளை குடித்தன. கீரிகள் கோழிக் குஞ்சுகளைப் பிடித்துக் கொண்டோடின. எலிகளின் தொல்லை தாங்கேலாது இருந்தது. மழைக் காலத்தில் விதம் விதமான அட்டைகள் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தன. கண் தெரியாத அம்மம்மா பொயிலைக் காம்பு என்று நினைத்து அட்டையை நுள்ளியிருக்கிறார்....

ஆனால், பற்றைக் காடுகள் தந்த சந்தோசங்கள் புறம்பானவை. பற்றை வழியே திரிந்து பொறுக்கி பிடுங்கித் தின்ற பழங்கள் ஏராளம். அணிஞ்சில் பழம், காரைப்பழம், சூரைப்பழம், இலந்தைப்பழம், பாக்கு வெட்டிப் பழம், புல்லாந்திப் பழம்...

இவற்றிலும் மேலான சந்தோசம் முயல்களே!

எங்கள் வீட்டின் மேற்குப் பகுதியில் தோட்டவெளி சரிந்திருந்தது. எங்கள் வளவின் தென்கிழக்கு மூலையில் முயல்களைக் காணலாம். விடிய எழுந்து எலுமிச்சம் பாத்தியில் மூத்திரம் பெய்ய வரும்போது அவற்றைக் காணலாம். பிறகு அப்பா ஆட்டில் பால் கறக்கும்போது ஆடு உதைந்து விடாமலிருக்க நான் அதன் காலைப் பிடித்தபடி குந்தியிருப்பேன். அப்போது முயலிற்கு அசூசை தெரியாமல் நிறைய நேரம் பார்க்கலாம்.

ஆனால், அம்மா விடமாட்டா. கூப்பிடுவா. முகம் கழுவ வேண்டும். தேத்தண்ணி குடிக்கவேண்டும். வெளிக்கிட வேண்டும். பொரிச்ச புட்டைக் கட்ட வேண்டும். பள்ளிக் கூடம் போகவேண்டும்....

பள்ளி என்றாலோ பெரிய பள்ளி. தவமிருந்து கிடைத்த பள்ளி!

இப்போது முயலைப் பற்றி அடிக்கடி கனவு வருகிறது. கூடவே ஆடும், எலுமிச்சம் பாத்தியும், பொரித்த புட்டும், அதன் கூடவே அந்தப் பெரிய பள்ளியும்....

அன்றைய கனவு இப்படி இருந்தது. என்னா ஓட்டம் அது! எங்கள் வளவு மூலையில் இருக்கிற முயல்தான் லாவகமாக எதிராளிகளுக்குள் புகுந்து புகுந்து ஓடியது. வளைந்து, வளைந்து நெளிந்தது. செல்வன் துரத்துகிறான். அவன் நாய் துரத்துகிறது. எதிராளியின் கையில் அல்லது வாயில் அது சிக்கவில்லை. முட்டவில்லை. எட்டிப் பிடிக்க முடியவில்லை. அதற்குத் தன் இலக்கு மாத்திரம் தெரிந்தது. வளை! அண்மித்துவிட்டது. மெதுவாக, மிக மென்மையாக வெண் பஞ்சுப் பாதங்கள் பதிய தன் வளைக்குள் புகுந்து கொண்டது.

அப்போது எனக்கு இலக்கு இருக்கவில்லை. என் வளை எனக்குத் தெரியவில்லை. எல்லோரும் போகிறார்களேயென்று நான் பள்ளிக்கு போனேன். எனக்குப் பம்பல் அடிக்கிற இடம். ஒரு ரீச்சரும் வீட்டுப் பாடம் சொல்லாத வரை, சொல்லிச் செய்யாவிட்டால் அடிக்காத வரை பள்ளி எனக்குப் பகிடி விடுகிற இடம்!

ஆனால், பெனடிக்ற் சேர் லேசுப்பட்டவரில்லை. ஒவ்வொரு நாளும் வீட்டுப் பாடம் தருவார். செய்யாவிட்டால் முகம் சிவந்து, பிரம்பு தூள் பறக்கும். அவரின் பாடமோவென்றால் ஆங்கிலம். "ஏபிசீடி கிழவன்ரை தாடி" என்பது வரையே எனக்கு ஆங்கிலம் தெரியும். எனவே வேளைக்கு பள்ளிக்கூடம் வந்து வீட்டுப் பாடம் செய்தவர்களின் கொப்பியை வாங்கி கொப்பி பண்ணி விடுவேன்.

அன்றைக்கென்றால், வேளைக்குப் பள்ளிக்கூடம் வரமுடியாமல் போய்விட்டது. ஆங்கிலத்தில் வீட்டு வேலையோ அம்பாரம். எனவே நான் மழையை நம்பினேன். மழை பெய்யும் சிலமனைக் காணவில்லை. ஆற அமர நடந்து பார்த்தேன். இல்லை. ஆனால், அம்பாள் கோயிலடியில் வர தூறத் தொடங்கியது. சங்கக் கடையடியில் நின்றுவிட்டது. சமாதி வைரவர் கோயில் வரை நடந்து பார்த்தேன். பெய்யும் யோசனை சற்றேனும் இல்லாமல் முகில்கள் தம்பாட்டுக்குக் கலைந்து கொண்டிருந்தன. பெனடிக்ற் சேர் பற்றியும் அவரது அடிபற்றியும் முகில்களுக்கோ, மழைக்கோ தெரியாது. ஆனால், எனக்குத் தெரியும். நான் பல முறை துடித்துப் போய் இருக்கிறேன்.

எனக்கு யோசனை பளிச்சிட்டது. றோட்டில் நேற்று இரவு பெய்த மழைக்கு இருந்த வெள்ளத்தை இரண்டு கைகளாலும் அள்ளிக் கொண்டேன். இரண்டு மூன்று முறை அள்ளினேன். அவ்வாறு அள்ளியது தலையை, சேர்ட்டை நனைக்கப் போதும்.

நான் வீடு திரும்பி அம்மாவிடம் சொன்னேன். "உங்களுக்குத் தெரியாது அம்மா, கூத்தஞ்சீமாப் பக்கம் சரியான மழை..."

"சரி சரி, உடுப்பை மாத்திப்போட்டுத் தலையைத் துடை...."

நான் விட்டேற்றியாகத் திரிந்தேன். எங்கள் வளவின் மூலையில் முயல்களும் விட்டேற்றியாகத் திரிந்தன. அதனால், எனக்கும் அவைக்கும் நெருங்கிய உறவு என்று நான் நினைத்தேன். அதனால் கனவு கண்டேன்.

கனவுகளே வாழ்க்கையாகி நிலைக்க முடியாது.

கொஞ்சக் காலம் எதுவும் செய்வதற்கிய-லாதிருந்தது. ஓரிரு நண்பர்கள் பிறகு புகையை ஒரு இழுப்பு. நெஞ்சுள் நிரம்பியவுடன் திருப்தி. மயங்கிய உலகில் சரிகிறதான பிரமை. சிறிது நேரம் தான். அப்புறம் வெறுமை. வெறுமையோ, வெட்ட வெளி வெறுமை!

நான் கவனித்திருக்கலாம். கவனமாகப் படித்திருக்கலாம். படிப்பிக்கக் கூடிய ஆசிரியர்களும், படிக்கக் கூடிய சூழலும் உடையதுதான் என் கல்லூரி.

நான் ஓட மாத்திரம் செய்தேன். பாயவும் எனக்குத் தெரியும். முதலாமிடங்களைப் பெற்றேன். என் ஓட்டமோ முயலோட்டம்.

வாடைக் காலங்களில் பந்தாட்டம் என்றால், சோளகக் காலங்களில் விளையாட்டுப் போட்டி. தென் மேற்கு மூலையிலிருந்து பெயர்ந்த காற்று சோளகம். நூறு மீற்றர் தடங்களும் சரியாக வடகிழக்கு மூலையில் தொடங்கி தென்மேற்கு மூலையில் முடிகிறது.

நான் விரைவேன். விரைகிறபோது "கமோன் அருண். கமோன் அருண்" என்று கத்தி அழகான லோகா அக்காவும் ஓடி வருவார். அதற்காக நான் இரண்டு கைகளையும் சிறகுகளாக வலிப்பேன். நான் காற்றைக் கிழிப்பேன். வலிய சோளகத்தை அதனிலும் வலிவுடன் எதிர்ப்பேன். என் காலடியில் மண் நொருங்கும். நிலம் அதிரும். நம்பர் துண்டு படபடக்கும். இலக்கை வெகுசுலபமாக எட்டி விடுவேன். "இதோ நான்..." சின்னப்பா என்கிற கவிஞரின் இல்லத்திற்கு நான் புள்ளிகளை அள்ளிக் குவித்தேன்.

ஆனாலோ, என் புள்ளிகள் எனக்குத் தெரிய-வில்லை. அவை சிக்கிச் சுழன்று தடுமாறின.

குலநாதன் சேர் கணக்குப் புள்ளிகளை வாசிக்கிறார்.... "குலேந்திரன் எட்டு.. விநாயகலிங்கம் பன்னிரண்டு... டேவிட் நந்தகுமார் பதினாறு... அருண் ஆறு... எல்லாத்தையும் கூட்டினால் தொண்ணூறு வரும். தொண்ணூறு வந்தால் உங்களுக்குத் திருப்தி தானே...?" நக்கலடிக்கிறார். எங்களுக-குச் சுடவில்லை: உறைக்க-வில்லை. நக்கல் விளங்கிச் சிரிக்கிறோம். ஆரவாரமாகச் சிரிக்கிறோம். அதன் பிறகு எங்களுக்கென்றொரு வாழ்வு இருக்கிறது.

அம்பனைச் சந்தி.. மோகன் கூல்பார்... பிளேன்ரீ... வடை...எங்கள் கல்லூரியின் அழகான பெண்கள் உள்ள ஊர்ப்பக்கம் சைக்கிளில் உலாவல்...

போயிற்று.. பருவத்தே பயிர் செய்ய நான் மறந்து போனேன். மறுத்தே விட்டேன்!

பைப்படியில் தேவனுடன் நான் உருண்டு புரண்டேன். உடுப்பில் செம்மண்புழுதி அப்பி அழுக்காயிற்று. அடுத்த பாடம் அம்பலப்பிள்ளை சேர். ஒரு கட்டை வைத்திருக்கிறார். மொளி வீங்க அடிப்பார். அது பரவாயில்லை.

கௌரி பார்த்து விட்டாள். என் குழப்படியை அவள் பார்த்து விட்டாள். அதுதான் என் பிரச்சினை. தங்கைக்குச் சொல்வாள். வீட்டுக்குக் கதை போகும். தங்கை காத்திருக்கிறாள். பழிதீர்க்கத் தருணம் பார்த்திருக்கிறாள்.

அன்றைக்கும் அப்படித்தான். துரையப்பா மண்டபத்தின் கதவுக் கண்ணாடியை உடைத்து விட்டேன். உடைக்க வேண்டுமென்றல்ல. அது என்னவோ என் கை பட்டவுடன் சடாரென கண்ணாடிகள் நொருங்குகின்றன. அதையும் கௌரி கண்டாள்.

பெருமாள் சேருக்கு யாரோ கூறிவிட்டார்கள். லஞ்சுக்கு ஒரு பிரம்பு கொண்டு பாடசாலையைச் சுற்றி வருவார். மூத்திரம் பெய்கிற இடத்தில் ஒளித்து விட்டேன்.

வகுப்பு: 8 பி

பெயர்: அருண்

துண்டில் குறித்தார்.

துண்டைத் தொலைத்தாரோ, அல்லது நாஷனலை மாற்றி உடுத்தாரோ, எதுவாயிருந்தாலும் எனக்கென்ன? நான் தப்பினேன்.

அடுத்த நாள் பெருமாள் சேர் பிரம்பையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு 8 டி வகுப்புக்குச் சென்று அருளை விளாசினார். அருளிற்கு வாய் கொன்னை!

தப்பினேன் என்றுதான் நினைத்தேன். ஆனால், அப்பாவிடம் உதை!

தங்கைக்கு நண்பியாக முன்னம் கௌரியிடம் எனக்கொரு பிடிப்பு இருந்தது. கௌரி வந்த புதிதில் நிறையவே முழுசினாள். அப்போது அவள் அழகிதான். வீடும் அயல். கௌரியைப் பார்ப்பதற்காக நான் தவித்தேன் என்றுதான் சொல்லவேண்டும். என் தங்கை அவள் சிநேகிதியானாள். இருவரும் அப்படி என்னதான் கதைக்கிறார்களோ? படலையின் வெளியே, ஒழுங்கையின் முகப்பில் நின்று கதைத்தனர். பிறகு கௌரியைப் பார்ப்பதை நான் தவிர்த்தேன். அவள் கடைக் கண்ணால் என்னைக் கவனிக்கிறாள் போல...

என்ன விருப்பங்கள் கௌரியில் நிலைத்திருந்-தாலும், அவ்வப்போது மாறியது. அதில் ஒருத்தி கயல் விழி. என் லயிப்பு அவளில் ஏற்பட்டது. கயல்விழிக்குத் திமிர் இருந்ததா? இருந்தது போலத்தான்.

கயல்விழிக்குக் கண்ணனில் ஒரு பிடிப்பு. கண்ணன் வகுப்பில் முதலாம் பிள்ளைக்குக் கிட்டமுட்ட வருவான். நான் கடைசிப் பிள்ளைக்குக் கிட்டமுட்ட இருப்பேன். ஒரு நாள் காலையில் கயல்விழி கரும்பலகையில் "கண்ணன் என்னும் மன்னன் பேரைச்சொல்லச் சொல்ல..." என்று எழுதி விட்டாள்.

காலை முதலாம் பாடம் துரைச்சாமி ரீச்சரின் கணிதம். வந்தார். "ஆர் எழுதினது?" உறுக்கினார்.

கயல்விழி முகம் கறுத்து இருண்டு போனாள். காட்டிக் கொடுப்பார் ஒருவரும் இல்லை.

"படிக்கிற பிள்ளைகளுக்கு இதுவா அழகு?" என்று சினந்தார். அழித்துவிட்டு முக்கோணமும், செவ்வகமும், வட்டமும் வரைந்தார்.

பூகம்பத்தை எதிர்பார்த்தோம். எங்களுக்கோ சப்பென்றாகி விட்டது.

அன்றேதான், கயல்விழி என் கனவிலிருந்து மறைந்து போனாள்.

ஆனால், என் வேறு கனவுகள் மறையவில்லை. ஒரு போதில் கனவுகளே என் காலமாய்க் கழிந்தது. கனவும், விளையாட்டும், குழப்படியுமாகி தட்டுத் தடுமாறி ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருபடி ஏறினேன்.

விளையாட்டுப் போட்டிகளும், உதைபந்தாட்-டங்களும் வருகிற காலங்கள் என் வசந்தங்கள். அம்மாள் கோயில் திருவிழாவும், நவராத்திரி பூசைகளும் இன்னும் சொர்க்கங்கள். வருடத்தில் இந்த நாட்களுக்காக நான் தவமிருந்தேன். ஒரு முறை விளையாட்டுப் போட்டியும், அம்பாள் கோயில் பூங்காவனமும் ஒரே நாளில் வந்தன. திக்குமுக்காடிப் போனேன். அப்படி இன்னொரு நாளும் வந்தது.

முதலாம்பிரிவு உதைபந்தாட்ட இறுதியாட்டமும், நவராத்திரிப் பூசையும் ஒரே நாளில் வந்தது. அன்றும், அதே சிக்கல்தான். ஆனால், அன்று நவராத்திரிப் பூசையை மறந்தே ஆக வேண்டிய கட்டாயம்.

இறுதியாட்டம். எதிர்த்தாடப் போவது பட்டணத்தில் ஒரு கல்லூரி. நாங்களோ வென்றால், சூழ வயல்களும், தோட்டங்களும், பனங்கூடலும், எண்ணெய் வழிகிற முகங்களும் உடைய பட்டிக்காட்டிலிருக்கிற ஒரு பெரிய பள்ளி! அது வேறு. ஆனால், பட்டணத்தார், 'பட்டிக்காடா பட்டணமா?' என்று நோட்டீஸ் அடித்து விட்டனர். அது எங்கள் ரோஷ நரம்புகளைச் சுண்டிவிட்டது.

மனோரஞ்சனுக்கு கோபம் இருந்தது: ஆவேசம் இருந்தது. ஓர்மம் இருந்தது: சாதிக்கும் வலிமை இருந்தது. புறப்படுகிறபோதே நடராஜர் கோயில் சபதம் எடுத்தான். "நான் ரண்டு கோல் போடுவன்..."

மைதானத்தின் மருங்கில் காந்தனண்ணை மைக் வைத்து ஆடி ஆடிக் கத்துகிறார்...

"ஜனா...ஜனா..."

குழுவாக, "மகா ஜனா.."

"அப்பே ஜனா..."

"மகா ஜனா..."

"வட் இஸ் த கலர்...?"

"பிறவுண் அன் வைற்..."

"ஏலுமா..?"

"ஏலாது..."

"ஏலுமென்றால்....?"

"பண்ணிப்பார்..."

"முடியுமா...?"

"முடியாது.."

"முடியுமென்றால்...?"

"பண்ணிப்பார்..."

"சூட் த கோல்..."

"இன் ரு த போஸ்ற்.."

"ஜனா.. ஜனா..."

"மகா ஜனா..."

"பட்டிக்காடா.."

"பட்டணமா..."

கூட்டம் ஆரவா-ரித்தது.

முன்னர் இருந்தனர். மோகன் ராம். அதன்பிறகு முயல். இப்போது மனோ-ரஞ்சன்.

மனோரஞ்சன் வலது பக்கத்திலிருந்து பந்தைக் கொண்டு வந்தான். வேகம். வேகம். ஒருவராலும் அவன் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாதிருந்தது. அவுட்லைனின் அருகுடன் டபிள்போட்டு, சுழித்து, வளைத்து, நெளித்து, பந்தைக் கொண்டு போகிறான். அவன் வேகத்திற்கு ஈடுகொடுக்கிற பந்தின் வேகம். ஜெயராஜ் பின்னால் ஓடுகிறான். எதிராளிகள் துரத்துகிறார்கள்.

"மனோ.. மனோ.." ஜெயராஜ் கத்துகிறான். ஒன்றையும் கேட்கிற மனநிலையில் மனோ ரஞ்சன் இல்லை.

"இங்காலை தட்டிவிடு.." திரும்பிப் பார்க்கிறானில்லை.

ருத்ரதாண்டவம் ஆடுகிற நடராஜர் தான் அவன் முன்னே!

எதிராளிகள் துரத்துகிறார்கள். இருவர் மூவராகத் துரத்துகிறார்கள். அவன் ஒன்றையும் கவனியாதவன் போல....

வெளியிலிருந்து ரீ.பி. கத்துகிறார். "பாலு பிரீயா வாறான். அவனிட்டைக் குடு. குடுத்திட்டு லெப்பருக்கு ஓடு..."

மனோரஞ்சன் கேட்கிறானில்லை. நாளைக்கு ரீ.பி. உதைக்கப் போகிறார் தெரியும்.

மனோரஞ்சனின் வேகத்துக்குக் கம்பங்கள் காத்திருந்தன. எதிர்க் குழுவின் கோல்கீப்பர் சற்றுக் கூனிக் குறுகி நின்று, புயலை எதிர்பார்த்து நடுங்குகிறான். கலங்குகிறான்.. முகத்தில் வியர்வை அரும்புகள்.....

தெரிகிறது. வருவது புயல்! மனோரஞ்சன் என்கிற அதிரடிப் புயல்!

பந்து அதிர, கால் அதிர, பார்வையார் அதிர, கம்பங்கள் அதிர, கம்பங்களில் கட்டப்பட்ட வலை அதிர, காற்று அதிர...

...ஒரு உதை!

பந்துக்கு ஒரு உதை. பட்டிக்காடா பட்டணமாவிற்கு ஒரு உதை!

உதை என்று சொல்ல முயடிாது அதனை.

கம்பங்களின் வலை பொருமிப் பொருமி அடங்குகிறது.

புயல் திரும்புகிறது. ஓர்மம், வலிமை, ஆவேசம் யாவும் திரும்புகின்றன.

உதைபந்தாட்ட இறுதியாட்டத்தின் சரித்திரத்திலேயே இல்லாதவாறு அடுத்தடுத்து ஆறுகோல்கள்....

காந்தனண்ணை மைக்கில்...

"வட் இஸ் த ஸ்கோர்...?"

"சிக்ஸ் நில்..."

"ஜனா... ஜனா..."

"மகா ஜனா.."

கூட்டம் ஆரவாரிக்கிறது.

பிறகு ஆர்ப்பரிக்கிற காலங்கள் அடங்கிப் போயிற்று எனக்கு. மௌனமாக, ரசனையுடன் வாழ்க்கையை அனுபவிக்கிற காலம் எனக்கு வந்தது.

வந்ததற்குக் காரணமும் இருந்தது.

கீதா ரீச்சர் எங்கள் வகுப்புக்கு கிளாஸ் ரீச்சராக வந்தார். மூக்குத்தி ஜொலிக்கிற கீதா ரீச்சரில் எம்மூர் அம்மனைக் கண்டேன். கீதா ரீச்சர் அண்ணி மாதிரி. எனக்கொரு அண்ணா இருந்து, அண்ணாவுக்கொரு மனைவி வாய்த்து, அம் மனைவி கீதா ரீச்சராக இருந்தால்... அக்கால என் கனவில் அரைவாசி குறைந்து விடும். மகிழ்ச்சியில் நான் திளைத்துப் போவேன்.

ஆனால், எதிர்பாராதவிதமாக ஒரு அனர்த்தம் நிகழ்ந்தது. கீதா ரீச்சருக்கு ஓகஸ்டில் கலியாணம். எங்களுக்கோ அது பிடிக்கவில்லை. அது எப்படி ஆகும்? வந்து ஒரு வருடம் ஆகவில்லை. எங்களில் எவ்வளவு அன்பை வைத்திருந்தார். அவர் வந்த பிறகு தானே எனது பாடசாலை வரவு ஒழுங்காக இருந்தது. நாங்கள் அப்படி அவருக்கு என்ன கொடுமை செய்துவிட்டோம்?

கீதா ரீச்சர் சொன்ன வேலைக்கு எப்போதாவது நாங்கள் முகம் சுளித்தோமா? லைபிறரியைப் புத்தாக்கம் செய்தபோது, மக்கள் பிரசுராலயத்திலிருந்து நாங்கள் புத்தகங்களை அள்ளிக் கொண்டு வரவில்லையா? ஒரு ரீ கூடக் குடிக்கவில்லை. ரீ குடிக்கிற காசுக்கு இன்னொரு புத்தகம் வாங்கலாமே? 768இற்குக் காத்து நின்று, புத்தகக் கட்டைச் சுமந்து வந்தோமே! சிவம் எவ்வளவு வேர்த்து விட்டான்?

கீதா ரீச்சர் சொன்னாரென்று ஒரு சனியும் ஞாயிறும் லைபிறரி தூசி துடைத்து, புத்தகங்களை அடுக்கி நம்பர் குறித்து வைத்தோம். கீதா ரீச்சர் பிளாஸ்க்கில் கோப்பி கொண்டு வந்து எங்களுக்குத் தந்தார். தூசி துடைக்க, புத்தகம் அடுக்கி வைக்க ஹம்சானந்தியும், உமாவும் கூட வந்தனர். எவ்வளவு சந்தோசமாக கீதா ரீச்சருடன் சிரித்துக் கதைத்து புத்தகங்களை அடுக்கினோம்.

கீதா ரீச்சருக்குக் கலியாணமா? சிவம் கொதித்தான். பாலா கடிந்தான். "முதலே ஒரு சொல்லுச் சொல்லியிருக்கலாம்." என்று அகிலன் சமாளித்தான். மண்டையில் ஒன்றுமே ஏற-வில்லை. வகுப்பு வரண்ட பாலையாயிற்று. வாழ்வு வெறுத்தது.

கீதா ரீச்சரின் முகத்தில் வெட்கம் கலந்த சிரிப்பு இருந்தது. அது இன்னும் பிடிக்காமற் போயிற்று.

"நீங்கள் தான் வந்து வெடிங்கை நடத்திமுடிக்க வேணும்..." பாடத்தின் இடையில் கீதா ரீச்சர் சொல்கிறார். ஞானா, உமா, செல்வியின் கண்களில் மின்னுகிற சிரிப்பு. இப்போதே காய்கறி வெட்ட, தேங்காய் துருவ, வெங்காயம் உரிக்க ஆயத்தப்படுத்துகிறார்கள். ஹம்சா இன்னும் வலு மோசம். "நாங்கள் எப்ப வரவேணும் ரீச்சர்?'

ம் கூம்.. ஒன்றும் சரிவராது.

கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலில் பத்து மணிக்குத் தாலி கட்டு. அந்தக் கொடுமையை எப்படிப் பார்ப்பது? மூக்குத்தி மின்னுகிற கீதா ரீச்சரின் அழகிய முகத்தை எப்படிச் சகிப்பது?

யாழ் தியேட்டரில் 10.30இற்குக் காத்திருந்து Alfie Darling பார்த்தோம்.

அடுத்த நாள் வந்தது வினை! லஞ்சுக்கு முதல் பாடம் வகுப்புக்கு பிரின்சிப்பல் கனக்ஸ் வந்தார்.

"நேற்றைக்குப் படத்துக்குப்போன ஆக்கள் எழும்பு..." பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது. எழும்புவதில் தயக்கம் காட்டேலாது. கனக்ஸின் கை காதைச் செவிடாக்கும்.

அகிலன் எழுந்தான். இழுத்து வைத்து விளாசல்! அட்வான்ஸ் லெவல் என்றும் பார்க்கிறாரில்லையே மனிசன்!

"வேறை ஆர் உன்னோடை வந்தது?" உயர்ந்த! அந்தப் பெரிய ஆகிருதியின் உறுக்குகிற குரல்!

சிவத்தைக் காட்டினான். சிவத்தின் கன்னம் பதப்பட்டது.

"வேறை..? எனக்குத் தெரியும் இந்த வகுப்பி-லையிருந்து அஞ்சாறு பேர் போயிருக்கிறியள்.. மரியாதையா எழும்பினால் தண்டனை குறையும்"

பாலா எழுந்தான். கன்னம் வெளுத்தது.

திடுமுட்டாக அடி விழுந்தால் நான் பொறுப்பேன். தாங்குவேன். அடி விழும் என்று முன்னரே தெரிந்தால் நான் மூத்திரம் பெய்கிற சாதி.

கதிரையில் இருந்தபடி பாலாவிற்குக் கண் சாடை காட்டினேன். 'அம்மாளே' என்று ஒரு சரை கற்பூரத்திற்கு நேர்ந்தேன்/ "வேறை ஆர்..."/

என் கண் இருளைக் கண்ட பாலா "ஒருத்தரும் இல்லை" என்று அபயம் அளித்தான்.

லஞ்சுக்கு வீட்டை போனதுதான் காய்ச்சல் என்று மூன்று நாள் சாட்டினேன். பிறகு வந்தது சனி, ஞாயிறு.

அதற்கும் பல நாட்களின் பிற்பாடு தான் இந்திரனுக்குச் செல்வியின் பால் விருப்பம் வந்தது. எப்போது முளை கொண்டது என்பதுதான் ஒருவரிற்கும் புரியவில்லை. இந்திரனுக்குக் கூட தெரிந்திருக்கவில்லை. ஆனால், மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் எங்கள் பாடசாலையின் திருவிழா. அன்று கோயில் மண்டபத்தின் தூணின் மறைவில் செல்வி நின்றிருந்தாள். "தூண் மறைக்கும் துயரம் பெரிது" என்று இந்திரன் என்னிடம் சொன்னான். நான் சடக்கென அதனைப் புரிந்து கொண்டேன்.

செல்வி அழகானவள்தான். வெள்ளையாகச் சிரிப்பவள். ஓட்டத்தில் வலு விண்ணி. என்னுடன் சின்னப்பா இல்லத்திற்கு அவளும் புள்ளிகளை அள்ளிக் குவித்தவள் தான். ஆனால், எனக்கு அவளில் வராத விருப்பம் இந்திரனுக்கு வந்தது.

அவள் வயலினும் அழகாக வாசிப்பாள். எங்கள் பள்ளியின் பல்லியம் குழுவில் ஞானா, உமாவுடன் வயலின் வாசிப்பதில் அவளும் ஒருத்தி. ஹம்சா வீணை. ஆனந்தன் மிருதங்கம். எங்கள் வகுப்பிலிருந்து இவர்கள்தான்.

துர்க்கையம்மன் கோயில் திருவிழாவில் பல்லியம் நடைபெறுகிறதென்றால், செல்வியைப் பார்க்க இந்திரன் போவான். சங்கீதம் தெரியாத நான் இந்திரனுடன் போவேன்.

இப்போதெல்லாம் சனி, ஞாயிறை இந்திரன் வெறுத்தான். திங்களுக்காகக் காத்திருந்தான்.

ஆனால், குலமோ வெள்ளிக்காகக் காத்திருந்தான். அவன் ஊரில் அம்பாள் கோயிலில் வெள்ளிக்கிழமைகளில் நளினியை விரும்பினான்.

"தேனூறும் செவ்விதழில்
தேனுண்ண நான் செல்ல
நானென்றறிந்ததும் அவள்
நாணத்தால் தலை குனிய
மான் போல் பாய்ந்து அவள்
மார்பதனில் முகம் புதைக்க
ஏனென்று கேட்ட வண்ணம்
இடையென தலையணையை
இறுக அணைத்தேன்..."

என்று குலம் கவிதை படித்தான்."அவ்வளவாக வாய்க்கவில்லையே" என்றேன். ஆனால், இந்திரன் சுலபமாகக் கவிதை பாடி விட்டான்.

"சித்திரை முழு நிலா
சிரிக்கும் உன் வதனம்
எத்தனை அழகு,
எத்தனை அழகு!
இத்தனை அழகைக்
கொண்டிருப்பதால்
என் வாழ்வில்
நித்திரை இல்லை.
நீண்ட கனவுகள்
சாவதும்
பிறப்பதுமாய்..."



எனக்கோ காதலும் வரவில்லை: கவிதையும் வரவில்லை:

ஆனால், இந்திரனுக்குத் துணையாகச் செல்வியின் வீடு தேடினேன். எம் வகுப்பு சிவனேசன் அவள் ஊரில் இருந்தான். அவன் வீடு சென்று பலாப்பழம் சாப்பிட்டு ரீ குடிப்போம். "செல்வியின் வீடு எங்கால் பக்கம்?" கேட்கக் கூச்சம்.

ஒழுங்கைகள் வழியே சைக்கிள் ஓடினோம். அவள் வீடோ தென்படவில்லை. பனை ஓலைகள் மணக்கிற வேலிகள் வழியேயும், புழுதி பறக்கிற வாசல் மேலேயும் சென்றோம். அவள் முகமோ தென்படவில்லை.

"என்ன அருண், நேற்று முழுக்க எங்கன்ரை ஊருக்கை திரிஞ்சியள் போலை..." என்று மாமரத்தடியில் வைத்து மடக்கிக் கேட்டாள் செல்வி. மா அப்போ பூத்திருந்தது.

கண்டிருக்கிறாள். கூப்பிடவில்லை. நான் வழிகிறேன் என்று நினைக்கிறாள்.

இந்திரனுக்குச் சொன்னேன். "ஓகோ அம்பிட்டிட்டம்..."

இற்றை வரை எமக்குச் செல்வியின் வீடு தெரியாமல் போயிற்று. மேலும் அவளது, அம்மா, அப்பா குடும்பத்தைக் கண்டிருந்தோம்.

சீர்காழி கோவிந்தராஜன் வந்து "சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி.." என்று அயலூரில் பாடியபோது செல்வி, தன் குடும்பத்துடன் மணல் கும்பியில் அமர்ந்து கச்சான் கொறித்துக் கொண்டிருந்தாள்.

"இவர் தான் அருண்.." என்று தன் அப்பனிடம் கை காட்டினாள். இந்திரன் நின்றான். அவள் கண்டு கொள்ளவில்லை.

செல்வியின் வீட்டைப் பிறகேன் தேடுவான்?

உடைவான் இந்திரன் என்றுதான் நினைத்தேன். இல்லை. லைனில் போகாததற்காக ஏசிய சீனியர் பிறிவெக்ற் சேரனுடன் சண்டித்தனம் விட்டான். சிகரட் ஊதப் பழகினான். அவ்வளவே.

ஆனந்த பவானில் பிளேன் ரீ குடித்து, சிகரெட் பிடித்தோம். பராவிற்குப் பிரக்கடித்தது. சபேசன் வளையம் வளையமாக விட்டான். இந்திரன் உறிஞ்சிக் கண்மூடி மயங்கினான். ஆழ உறிஞ்சினேன் நான்.

பேராதனை கம்பசிற்குச் செல்கிற ஆதவனண்ணர் தருகிற பயணக் காசு சிகரெட்டிற்குப் போதுமானதாக இருந்தது.

ஆனந்த பவானில் தேவன் வந்து பிளேன் ரீ குடித்தான். பாடசாலைக்கு அவன் வருவதில்லை. நடராசா சேர் ஒரு நாள் கலைத்து விட்டார். தேவனுடன் இன்னொருவர் இருந்தார்.

"கண்டு கனகாலம்..." என்று சபேசன் சொன்னான்.

தேவனுடன் வந்தவர், "இவையளோடை ஒண்டும் நீ கதைக்கேல்லையோ...?"

இல்லையென்றான் தேவன். "பொழுது படேக்கை அம்மாள் கோயிலடி மடத்துக்கு வாறன். நில்லுங்கோ கொஞ்சம் கதைக்க வேணும்...."

சைக்கிள் மிதித்துச் சந்தி தாண்டி தேவன் வந்தான். "அப்போதை என்னோடை வந்தவரைத் தெரியுமோ?" மடத்தடியில் வைத்துக் கேட்டான் தேவன். அவர்தான் வசந்தனண்ணைக் கேள்விப் படேல்லையோ...?' தேவன் வியந்தான். வீரர்களாக எங்களைப் பார்த்தான்.

அப்படி ஒருவர் இருக்கிறாரா? எங்கிருக்கிறார்? சிறுதாடி. மெலிவு கொண்ட உடல் கண்ணாடியின் பின்னே களைத்த கண்கள். யார் அவர்? உலகைப் புரட்ட வந்தவரா?

தேவன் அடிக்கடி வந்தான். வசந்தனண்ணை இடையிடை வந்தார்.

"இண்டைக்குப் பெரியவரைச் சந்திப்பம்..." பெரியவர் ஒரு காலத்தில் நிலம் நகர, நான் ஓடிய மைதானத்தில், நிலம் அதிர, தான் பந்து உதைத்தவர். அதே முருகையா சோரிடம என்னைப்போல அடி வாங்கியவர். சுவாரில படமாகி பத்து இலட்சம் ரூபா சன்மானத்திற்காக வேண்டப்படுபவர்.

பெரியவர் நிறையக் கதைத்தார். சாகசம் செய்ய எங்களுக்கும் ஆர்வம் இருந்தது. Operation Day Break பார்த்து லயித்திருந்த காலம் அது.

தேவன் சொல்லிக் கொண்டிருக்கிறான்..." சுத்தி வளைச்சிட்டம். சென்றிக்கு நிண்ட பொலிஸ்காரன் நித்திரை.."

"அண்ணை ஒரு என்ட்ரி போடவேணும்"

"விடிய வா.."

"இப்ப போட வேணும்.."

"விடிய வாவெண்டால்...?'

... அவரை மடக்கினம். ஸ்ரேசனை சுத்தி வளைச்சிட்டம்.. கையிலை சாமான். ஒருத்தர் கிட்ட வாறார்....

"வராதை.. வராதை.. சுட வேண்டி வரும்... வராதை..."

..வந்தார். ஒண்டும் செய்யேலாமப் போச்சு.. வைச்சம்...

சத்தம் கேட்டாப் பிறகுதான் எல்லோரும் முழிச்சினம். ஓடினார்கள். சிலர் வந்தார்கள். காலுக்குக் கீழை வைச்சம்....

"....எங்களுக்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கேல்லை அள்ளிக்கட்டிக்கொண்டு வந்தம்...."

நாங்கள் வாயைப் பிளந்தோம். தேவன் பெருமையாகப் பார்த்தான்.

"அடுத்த கிழமை லெபனானுக்கு ஒரு குறுப்பை அனுப்பிறம்... நீங்கள் தேவனோடை கதையுங்கோ..."

தேவன், "என்ன மாதிரி?" என்று வெளியில் வந்தபோது கேட்டான்.

போகத் தலையாட்டினேன். "பிறகு கதைப்பம்..."

தேவன் மடத்தடியில் காத்து நின்றான். சபேசன் மடத்தடிப் பக்கம் வருவதில்லை: பரா அடியோடு விட்டான்.

"விடியப்போறம். என்ன மாதிரி...?"

"உனக்கு வீட்டுப்பிரச்சினை தெரியும் தானே?"

"எனக்கில்லாத வீட்டுப் பிரச்சினையா?"

"கொஞ்சம் யோசிக்க வேண்டி இருக்கு, அடுத்த குறுப்பிலை வந்தால் என்ன?".

"யோசிச்சுக் கொண்டே இரு..."

"கோவிக்காதை..."

" எனக்கென்ன கோவம்?'

"இல்லையெடாப்பா.. பலதையும் பத்தையும் யோசிக்கத்தானே வேணும்?'

உன்ரை விருப்பம்.. நான் விடியப் போறன்.. நீங்கள் வராட்டிலும் நான் சொல்லிக் கொண்டு போகத்தான் வந்தனான்..."

"வீட்டை வா..."

"ஏன்...?"

"வாவன்..."

அம்மாவிடம் பால் வாங்கிக் குடித்தான்.

பிறகு ஏதோ ஒரு காலம். பிறகு ஏதோ ஒரு பொழுது!

நான் வாழ்வின் வசந்தங்களை இழந்து துக்கத்தைச் சுமக்க வேண்டிய காலம்.

வாழ்வுடன் அதன் இனிமையுடன் சுகமான லயிப்புடன் மனதில் எந்தப் பாரமும் இல்லாது வாழ்ந்த அந்தக் காலங்கள்.... பத்து வருடங்கள் எப்படிப் பறந்தோடின?

கொழும்பு நகரின் வீதிவழியே அலைந்தேன். வேலை செய்து, களைத்து, உடல் சோர்ந்தேன். 'சவோய்' கடந்த போது சத்தியன் நின்றான். வாய் மணத்தது.

"மேலை இருந்து வாறன். வா ஒரு பெக்..."

"வேண்டாம் விடு.."

"பியராவது..."

"வேண்டாம்..."

"மாறனைக் கண்டனான்..."

"ஆர் மாறன்...?"

"மறந்திட்டியா...?'

மறக்கக் கூடியவனா அவன்?

அன்று ஜனவரி 17. தேவனைத் தேடிப் போனேன்.

"தேவன் எண்டு கேக்காதை. ஒருத்தருக்கும் தெரியாது. மாறன் - தமிழ் மாறன்..."

வெளியில் வந்தான் தேவன். சொண்டு கறுத்துப் போய் இருந்தது. முகத்தில் தேமல்.

"வெளியிலை போவம். இங்கை இருந்து கதைக்கேலாது"

"எங்கை...?"

"நீ எடுப்பாய் தானே? வா...."

ஜின்னை பியருடன் கரைத்தான். உறிஞ்சினேன். மீன் பொறியலைக் கடித்தேன்.

"சொல்லு..."

"என்னத்தைச் சொல்ல...? வாழ்க்கை எப்படியோ மாறீட்டுது. இடையிலை நடந்ததைப் பற்றி என்னட்டைக் கேக்காதை. பூசாவிலை கனகாலம் இருந்தன். அதைவிடு. அதுக்கு முன்னம். அம்மாள் கோயில் மடத்திலை இருந்து கதைச்சம். அதுக்கு முன்னம்.... நான் லெபனானுக்குப் போறதுக்கு முதனாளிரவு வந்து உன்ரை வீட்டிலை பால் குடிச்சன்.. அதுக்கு முன்னம்.. அதைப் பற்றிக் கதை..."

ஒரு பக்கெற் சிகரெட்டை முடித்துவிட்டான். பிறகு மாறனாயிருக்க அவன் விரும்பவில்லை. தேவன்: மாணிக்கத்தின் புதல்வன்!

பிறகுதான் எனக்குத் தெரியும்.

எங்கள் வாணியின் வீடென்றால் அழகானது. கொள்ளை அழகு! வாணியே அழகானவள்.

நடுவே முற்றம். சுற்றிவர வீடு. அதிகம் அறைகள். அறைகளின் முன்னே மாமரங்கள். சின்னநடராஜர் கோயில் வீட்டின் முன்னே பூ மரங்கள். குறோட்டன். அசோக மரங்கள். சுற்றி மதில். மதிலின் மருங்கில் வீதி. வீதிக்கு அப்பால் வயல் வெளி. சோளகம் பெய்கிற காலத்தில் வெளியிலிருந்து குபு குபுவென வீசுகிற காற்று. வானைத் தொட்டு விடுகிற நெடிதுயர்ந்த அழகிய பனைகள்...

ஒரு காலம் வீதியில் போகிறபோது எங்களைச் சுண்டியிழுக்கிற, எங்களை மயக்கடித்துக் கொண்டிருந்த, வசீகரமான எங்கள் வாணியின் வீடு, சோளகம் வீச முடியாத, வீசினாலும் அதன் குளிர்மையை ஒருவராலும் அனுபவிக்க முடியாத ஒரு அதிகாலைப் பொழுதில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகக் கேள்விப்பட்-டேன். குண்டு அதிரும் சத்தம் கேட்க அவ்வூரில் யாரும் உறக்கத்திலிருக்கவில்லை. மூட்டை முடிச்சுகளுடன் எப்போதோ வெளியேறி விட்டிருந்தனர். ஆயினும், ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கப்பாலும் இப்போதும் வாணியின் வீட்டில் வெடித்த குண்டுச் சத்தம் அதிர்ந்து கொண்டுதான் இருக்கிறது...

இந்தத் துன்பம் இழைகிற செய்திக் குறிப்பையும் தேவன் தான், ஜின்னின் மயக்கச் சரிவில், குரல் கமறக் கூறினான்.

□

# 51 வருடங்களுக்கு முன்னர்: சு'தந்திரம்' என்ற சதி!

கடந்த 4ம் திகதியுடன் இலங்கை சுதந்திரமடைந்து 51 ஆண்டுகள் கடந்து விட்டன. இச் சுதந்திரம் முழு மக்களுக்கான சுதந்திரமாக அமையவில்லை. மாறாக சிங்கள மக்களுக்கான சுதந்திரமாகவே அமைந்தது. ஆட்சி அதிகாரம் இந்தத் தினத்திலே தான் ஆங்கிலேயரிடமிருந்து முழுமையாக சிங்களத் தலைமைகளிடம் மாற்றப்பட்டது.

சிங்களத் தலைமைகள், தமது மேலாதிக்கத்தை வலுப்படுத்துவதற்காக ஏனைய தேசிய இனங்களின் உரிமைகளை ஒடுக்கத் தொடங்கியது. இதனால் இவ் ஒடுக்கு முறையின் வரலாறே சுதந்திர இலங்கையின் வரலாறாகவும் பரிணமிக்கத் தொடங்கியது.

தமிழ் மக்கள் 51 வருடங்க... இத்தினத்தை தமது உரிமைகள் முழுமையாக பறிக்கப்பட்ட துக்க தினமாகவே கொண்டாடி வருகின்றனர். இதனால் சுதந்திர தினமென்றால் தமிழ்ப் பிரதேசங்களில் கறுப்புக் கொடியை பறக்க விடுவதே ஒரு குறிக்கப்பட்ட காலம் தமிழ் முன்னேறிய பிரிவினர்களின் பணியாக இருந்து வந்தது.

இச் சுதந்திரதின காலத்தில் தமிழ் மக்கள் தமது கடந்த காலத்தை ஒரு தடவை மீண்டும் நினைவு கூர்ந்து அன்று உண்மையில் என்ன நடந்தது? என பரிசீலிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. சிங்கள சமூக அமைப்பினதும் அரச அமைப்பினதும் இயங்கு விதிகளை அடையாளம் கண்டு கொள்வதற்கும், தமிழ்த் தலைமைகளின் தவறுகளை அடையாளம் கண்டு கொள்வதற்கும் இப் பரிசீலனை ஒரு உதவியாக அமையும்.

இந்த வகையில் சுதந்திர காலத்தின் போது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ன? அது தொடர்பாக இலங்கை அரசியலுடன் தொடர்புடைய பல்வேறு சக்திகளும் என்ன நிலைப் பாட்டைக் கொண்டிருந்தார்கள் என்பதில் கவனத்தைக் குவிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

இலங்கைக்கான சுதந்திரம் என்பது, 1947 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு, 1947 இன் இலங்கைச் சுதந்திரச் சட்டம், 1947 இன் இலங்கைச் சுதந்திர விரிவாக்கச் சட்டம் என்பவற்றினூடாகவே வழங்கப்பட்டது.

இதில் சோல்பரி யாப்பே பிரதானமானதும் முக்கியமானதும் ஆகும். ஏனைய இரு சட்டங்களும் சோல்பரி யாப்பினை நடைமுறையில் அங்கீகரிக்கும் சட்டங்களாகவே விளங்கியிருந்தன.

இக் காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முன்னெடுத்த அமைப்பாக ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியே விளங்கியது.

1936 ம் ஆண்டு தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட மந்திரி சபை, தனிச் சிங்கள மந்திரி சபையாக அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜீ.ஜீ பொன்னம்பலம் 50:50 இயக்கத்தை ஆரம்பித்தார். அரசுடன் தொடர்புடைய விடயங்களில் பெரும்பான்மையினத்துக்கு 50 வீதம் கொடுக்கப்பட்டால், ஏனைய சிறுபான்மை இனங்களுக்கு மீதி 50:50வீதம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே இக்கோரிக்கைக்குப் பின்னால் உள்ள அரசியல் தத்துவமாகும். 50:50 என இதற்கு பெயரிடப்பட்டாலும் ஆட்சி அதிகாரத்தில் தமிழர்களுக்கு நியாயமான பங்கு வழங்கப்பட வேண்டும் என்பதே இதன் அடிப்படையாக இருந்தது. அன்று செயற்பட்ட தமிழ்த் தலைவர்களில் அருணாசலம் மகாதேவா, வைத்தியலிங்கம், துரைசுவாமி, தந்தை செல்வா உட்பட அனைத்துத் தமிழர்களும் ஆரம்பத்தில் இதனை ஆதரித்து முன்னெடுத்தவர்களாகவே விளங்கினர். கிழக்குத் தமிழ்த் தலைமைகள் இதில் பெரியளவு அக்கறை காட்டவில்லை. அங்கு அக்காலத்தில் ஒரு கொள்கை ரீதியான தலைமைத்துவம் என்பது வளர்ந்திருக்கவில்லை. முஸ்லீம் தலைவர்கள் ஆரம்பத்தில் இதனை ஆதரித்துப் பின்னர் பின் வாங்கினர். தமிழ்த் தலைவர்களில் ஒருவரான அருணாசலம்-மகாதேவா 1942 ல் மந்திரிப் பதவியைப் பெற்றதைத் தொடர்ந்து பின் வாங்கினார்.

50:50 கோரிக்கையை முன்னெடுப்பதற்காகவும், புதிய யாப்பை சிபார்சு செய்வதற்காக வந்த சோல்பரி குழுவினர் முன்னிலையில் அமைப்பு ரீதியாக சாட்சியம் அளிப்பதற்காகவும், ஜீ.ஜீ பொன்னம்பலத்தை தலைவராகக் கொண்டு 1944ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ம் திகதி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டது.




'தமிழர்களின் பிரச்சினையில் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்து விட்டேன்' என சோல்பரி கூறினார்.

1944 டிசம்பரில் சோல்பரிக் குழுவினர் இலங்கைக்கு வந்தனர் 1945 ஜனவரி 22 வரை தங்கியிருந்து சுமார் 80 சாட்சியங்களைப் பதிவு செய்தனர். தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஜீ.ஜீ பொன்னம்பலம் தலைமையில், 50:50 கோரிக்கையை முன் வைத்து சாட்சியமளித்து ஜீ.ஜீ பின்வருமாறு தனது வாதத்தினை முன் வைத்திருந்தார்.

பிரிட்டனில் உள்ளதைப் போன்ற பாராளுமன்ற ஜனநாயகம் இலங்கைக்கு ஒத்துவராது. காரணம் இலங்கையில் ஓரின மக்கள் வசிப்பதில்லை. பல இன மக்கள் வாழும் நாடுகளில், பாராளுமன்ற ஜனநாயக முறை பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனங்களை அடக்கி ஆளுவதற்கே வழி வகுக்கும். பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனங்களின் அக்கறைகளிலும், நன்மைகளிலும் கவனம் செலுத்தாது. எனவே, இலங்கையில் வாழும் சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். சம பல பிரதிநிதித்துவ முறை மூலம் அத்தகைய பாதுகாப்பை வழங்க வேண்டும்.

இவ்வாதத்தினை குழுவினர் அக்கறையாகக் கேட்டாலும், சம பிரதிநிதித்துவ முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவர்கள் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் யாப்பில் இருந்தால் போதும் என்றே கருதினர். அவ்வளவுக்கு அவர்கள் சிங்கள அரசியல் தலைவர்களில் நம்பிக்கை வைத்தனர். இதன் பின்னர் ஒரு தடவை சோல்பரியே கூறியிருந்தார். "தமிழர்களின் பிரச்சினையில் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்து விட்டேன்" எனக் கூறினார்.

உண்மையில் தமிழர்களின் கோரிக்கை ஒற்றை ஆட்சி அமைப்பில் அரச அதிகாரத்தில் நியாயமான பங்கு என்பதாகவே இருந்தது. அதாவது, எல்லா விடயங்களிலும் சம வாய்ப்பு என்பதாகவே இருந்தது. அதனுடைய ஒரு குறியீடாகவே இச் சம பிரதிநிதித்துவ கோரிக்கை அமைந்தது.

இக் கோரிக்கைகளைக் கொச்சையாக விளங்கிக் கொண்ட சோல்பரிக் குழுவினர், இதனை நிராகரித்து எந்த வகையிலும் உதவாத உப்புச் சப்பற்ற ஏற்பாடுகளையே பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற வகையில் முன் வைத்திருந்தனர். 29 வது பிரிவு, நியமன உறுப்பினர்கள், நீதிப் புனராய்வு அதிகாரம், பல அங்கத்தவர் தொகுதிகள், அரசியல் யாப்பினைத் திருத்தவதில் 2/3 பெரும்பான்மை, அரசாங்க சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்கள், கோமறைக் கழகம் என்பனவே பாதுகாப்பு ஏற்பாடுகளாக இருந்தன. இவை அனைத்தின் பாதுகாப்பும் பெரும்பான்மை இனத்தின் தயவிலேயே தங்கியிருந்தது. குறைந்த பட்சம் சிறு பான்மையோர் விடயங்களில் அவர்களின் உரிமைகள் மீறப்படும் போது அவர்களுக்கு மறுப்பாணை அதிரம் (VETO POWER) என்பதையாவது வழங்கியிருக்கலாம். அதுவும் வழங்கப்படவில்லை.

சோல்பரியின் கண்ணுக்கு முன்னாலேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் சுக்கு நூறாகிப் போனது தான் வரலாறு.

சோல்பரிக் குழுவினரின் அறிக்கை, 1945 ஆண்டு யூலை மாதம். 11ம் திகதி பிரித்தானிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. 1945 ம் ஆண்டு அக்டோபர் 30 ம் திகதி பிரித்தானிய பாராளுமன்றத்தினால் அது வெள்ளை அறிக்கையாக பிரசுரிக்கப்பட்டது.

தமிழ்க் காங்கிரஸ்க் கட்சி சோல்பரி அர்சியல் யாப்பினை கடுமையாக எதிர்த்தது. தமிழர்களின் நலன்கள், சிங்களவரிடம் விடப்பட்டுள்ளது என்றும், இது எந்த வகையிலும் தமிழர்களுக்குப் பாதுகாப்பாக இராது என்றும் கூறியது.



ஜீ. ஜீ. பொன்னம்பலம்

இவ் யாப்பு அறிக்கையை எதிர்த்து லண்டனில் பிரச்சாரம் செய்வதற்காக ஜீ.ஜீ. லண்டன் பயணமானார். அங்கு குடியேற்ற நாட்டு மந்திரியையும், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் கண்டு பேசினார். தமிழர்கள் இவ் அறிக்கையினை ஏற்கப் போவதில்லை எனக் கர்ச்சித்தார்.

ஜீ.ஜீ. லண்டனில் இருக்கும் போதே இங்கு சதி முயற்சி நடந்தது. அவர் லண்டன் செல்லும் போது அரசாங்க சபையின் பிரதிநிதிகளாக இருந்த தனது சகாக்களை "நீங்கள் இங்கு யாப்பினை எதிர்த்து நில்லுங்கள். நான் லண்டனில், இது அமுலுக்கு வருவதை தடுத்து நிறுத்த முற்படுகின்றேன்" எனக் கூறிச் சென்றார்.

ஆனால், இங்கு ஜீ.ஜீ. நினைத்தற்கு மாறாக நடந்தது. டி. எஸ். சேனநாயக்கா அரசாங்க சபைப் பிரதிநிதிகளாக இருந்த தமிழ்த் தலைவர்களை விலைக்கு வாங்கினார். யாப்பினை ஆதரிப்பதற்கு அவர்களிடம் சம்மதம் வாங்கினார். சூட்டோடு சூடாக ஜீ.ஜீ திரும்புவதற்கு முன்னரே அரசாங்க சபையில் அதனைப் பிரரித்து, 1945 நவம்பர் 9 ல் அதனை வாக்கெடுப்புக்கும் விட்டார். அருணாசலம் மகாதேவா, சு.நடேசன், ஜெ.தியாகராசா உட்பட வடகிழக்கு உறுப்பினர்களாக இருந்த ஜீ.ஜீ. தவிர்ந்த ஐந்து தமிழர்களும் ஆதரித்து வாக்களித்தனர். அரசாங்க சபையில் இருந்த சிறுபான்மை உறுப்பினர்களில் ஹட்டன் தொகுதி பிரதிநிதி நடேசையரும், இந்திய வம்சாவழி நியமன உறுப்பினருமான ஐ.எக்ஸ். பெரேராவும் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர். சிங்களப் பிரதிநிதிகளில் ய. தகநாயக்கா மட்டுமே எதிர்த்து வாக்களித்தார். தலவாக்கலைப் பிரதிநிதி எஸ்.பி. வைத்திலிங்கம் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. யாப்புக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் கிடைத்தன.

வாக்களிப்பு வெற்றியைத் தொடர்ந்து டி.எஸ். சேனாநாயக்கா, சிறு பான்மையினரும் ஏற்றுக் கொண்ட யாபபு எனப் பிரச்சாரம் செய்தார். வீரத்துடன் லண்டன் சென்ற ஜீ.ஜீ தனது சகாக்களின் காட்டிக் கொடுப்பால் துவண்ட நிலையில் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாடு திரும்பினார். அன்று தொடங்கிய காட்டிக் கொடுப்பு இன்றும் தொடர்கின்றது.

ஜீ. ஜீ. போராட மகாதேவா காட்டிக் கொடுத்தார். தந்தை செல்வா போராட ஜீ.ஜீ. காட்டிக் கொடுத்தார். இன்று பிரபாகரன் போராட தந்தை வழி வந்தவர்கள் காட்டிக் கொடுக்கின்றனர். இவ்வாறு காட்டிக் கொடுப்புகளுக்கே ஒரு நீண்ட வரலாறு உண்டு.

நாடு திரும்பிய ஜீ. ஜீ. தன்னைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கும், டி.எஸ் சேனாநாயக்காவுக்கும் ஒரு பாடம் படிப்பிக்க முற்பட்டார். சோல்பரி யாப்பின் கீழ் நடைபெற்ற 1947 தேர்தலை அதற்காக பயன்படுத்தினார். காட்டிக் கொடுத்தவர்களின் தலைவர், அருணாசலம் மகாதேவா எந்தத் தொகுதியில் போட்டியிட முன் வருகிறாரோ அதே தொகுதியில் தானும் போட்டியிட்டு சவாலுக்கு அழைத்து பழி வாங்க முனைந்தார். இதற்காக தான் இரண்டு தடவை வெற்றி பெற்ற, தான் பிறந்த தொகுதியான பருத்தித்துறைத் தொகுதியை விட்டு விட்டு அருணாசலம் மகாதேவா போட்டியிட்ட யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியிலேயே போட்டியிட்டார். தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில், போட்டியிட்டார். தேர்தல் பிரச்சாரங்களில் ஜீ.ஜீ.க்கு வலது கரம் போல திகழ்ந்தார்.

தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றியீட்டியது. அது நிறுத்திய 9 தொகுதிகளில், வெற்றியீட்டியது. குடாநாட்டில் ஆறு தொகுதிகளிலும், திருக்கோணமலையிலுமாக 7 தொகுதிகளிலும் வெற்றியீட்டியது. அருணாசலம் மகாதேவா உட்பட சோல்பரி யாப்பினை ஆதரித்த ஐந்து பேரில் நால்வர் தோல்வியடைந்தனர். நல்லையா மட்டும் கல்குடா தொகுதியில் வெற்றி பெற்றார்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து தந்தை செல்வா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் தனக்கு நடைபெற்ற வரவேற்பு விழாவின் போது "தமிழ், தமிழர், தமிழர் தாயகம் ஆகிய மூன்றும் தமிழ் மக்களின் உயிர்" என்றார்.

யாழ்ப்பாணம் முற்ற வெளியில் நடைபெற்ற வரவேற்பு விழாவின் போது, "ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையை தமிழ் மக்கள் கோர வேண்டி வரும்" என்றார்.

தேர்தல் முடிவு வெளியானதும், 1947ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ம் திகதி குடியேற்ற நாட்டு மந்திரிக்கு ஜீ. ஜீ. தந்தி ஒன்றை அனுப்பினார். அத் தந்தியின் வாசகம் பின்வருமாறு அமைந்திருந்தது, "சென்ற பொதுத் தேர்தலிலே ஐக்கிய தேசியக் கட்சித் தமிழ் வேட்பாளர்களில் ஒருவராவது தெரிவு செய்யப்படாததிலிருந்தும், சோல்பரி யாப்பை ஆதரித்த பழைய அரசாங்க சபை அங்கத்தவர்களுள் ஒருவர் தவிர ஏனையோர் தோற்கடிக்கப் பட்டதிலிருந்தும், இலங்கைத் தமிழ் மக்கள் சோல்பரி அரசியல் யாப்பினை நிராகரித்து விட்டார்கள் என்பது தெளிவு.

"இலங்கையிலுள்ள சமூகங்கள் எல்லாவற்றிற்கும் சம உரிமை அளிக்கும் சுதந்திர அரசியற் திட்டமொன்றை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கோருகிறது. இலங்கை மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஒன்று வேண்டும். இப்போது உள்ளது போன்ற சட்ட சபை, மந்திரி சபைகளுடன் கூடிய ஒற்றையாட்சி அரசாங்கத்தை தமிழர்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தகுந்த மாற்று முறை இல்லாதபடியால் நாங்கள் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை கோருகிறோம்."

இத் தந்தியின் பிரதி, பிரதமர் டி. எஸ். சேனாநாயக்காவுக்கும் அனுப்பப்பட்டது. டி.எஸ். ஆத்திரமுற்றார். எவ்வாறாவது ஜீ.ஜீ.யை அரசியல் ரீதியாக விழுத்த முயற்சித்தார். தேர்தலின் பின்னரே சுதந்திரம் பற்றி முடிவெடுக்கப்படும் எனக் கூறப்பட்டதால் ஜீ.ஜீ.யின் எதிர்ப்பு அதனைத் தாமதப்படுத்தி விடும் என அஞ்சினார்.

ஜீ.ஜீ. யை வீழ்த்த அவரது வலதுகரமாக இருந்த தந்தை செல்வாவுக்கு மந்திரிப் பதவி கொடுத்து வளைக்க முற்பட்டார். பிரதமரின் மிக நெருங்கிய நண்பராக இருந்த E.A.P. விஜயரத்தினா மூலம் அதற்கு முயற்சிக்கப்பட்டது. செல்வநாயகம் வளைந்து கொடுக்கவில்லை. ஈற்றில் சுயேட்சை உறுப்பினர்களான சி.சுந்தரலிங்கமும், சி.சிற்றம்பலமும் வளைக்கப்பட்டு, அவர்களுக்கு வர்த்தக அமைச்சர் பதவியும், தபால் தந்தி அமைச்சர் பதவியும் கொடுக்கப்பட்டது. கிழக்கின் உறுப்பினர்களான வி.நல்லையா, எதிர் மன்ன சிங்கம் என்போரும் அரசை ஆதரித்தனர். ஜீ.ஜீ. மீண்டும் ஒரு தடவை தோல்வியுற்றார்.

இவர்களின் ஆதரவையும் இணைத்துக் கொண்டு டி.எஸ். சுதந்திரக் கோரிக்கையை முன் வைத்தார். மந்திரி சபையில் சிறுபான்மையோர் இடம் பெற்றமையும், கணிசமானளவு சிறுபான்மையினர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டமையும் பிரித்தானியரை திருப்தி செய்ததால் 1948 பெப்ரவரி 4 ல் அவர்கள் சுதந்திரம் வழங்கினர்.

தொடர்ச்சியாகவே தோல்விகளைத் தழுவிக் கொண்ட ஜீ.ஜீ. இறுதியில் தானும் துரோகியாக மாற முடிவெடுத்தார். 1948 டிசம்பரில் தமிழ்க் காங்கிரஸ்க் கட்சியை அரசுடன் இணைத்ததுமல்லாமல் கைத்தொழில் மீன் பிடி அமைச்சராகவும் பதவியேற்றார். அரசடன் சேருமாறு கொழும்பு வாழ் தமிழர்கள் வற்புறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

ஜீ.ஜீ. யின் முடிவை எதிர்த்த கட்சியின் செயலாளராக E.M.V. நாகநாதன் உடனடியாக பதவியை இராஜிநாமாச் செய்து கட்சியிலிருந்து வெளியேறினார். தொடர்ந்து பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு ஜீ.ஜீ.உட்பட தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களித்ததைத் தொடர்ந்து, தந்தை செல்வா, கு.வன்னியசிங்கம் என்போர் வெளியேறினர்.

வெளியேறியவர்கள் 1949 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ம் திகதி அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். இது வரை கால தமது சம பிரதிநிதித்துவக் கோரிக்கையை புறந்தள்ளி விட்டு சமஷ்டிக் கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கினர்.

தமிழர் அரசியல் தலைவர்களிடம் மட்டுமல்லாது மக்களையும் நோக்கி நகரத் தொடங்கியது.

தமிழர் போராட்டம் இன்னோர் பரிணாமத்தை நோக்கி மெல்ல மெல்ல நகர ஆரம்பித்தது.

-பரந்தாமன்-

# 'பதில் இறுப்பது என் கடமை'

என். கே. மகாலிங்கம், கனடா




டிசம்பர் 10-23 சரிநிகர் இதழில் "சிதைவுகள்" மொழிபெயர்ப்பு பற்றிய மு.பொவின் மதிப்பீடு வெளிவ்ந்துது. தினமணி, இந்தியா டுடே, உதயன் போன்ற இதழ்களிலும் மதீப்பீடுகள் வெளி வந்துள்ளன. அம்மதீப்பீடுகள் சிலவற்றில் மெய்ம்மைகள்(Facts) சிலவற்றை ஆதாரங்களற்று பிழையென எடுத்துக் காட்டியுள்ளனர். அவற்றுக்கு மொழிபெயர்த்தவன் என்ற முறையில் பதில் இறுப்பது என் கடமை. அதை இங்கு செய்ய முயற்சிக்கிறேன்.

ஒரு மொழிபெயர்ப்பு நூலுக்கு தமிழில் இத்தனை மதீப்பீடுகள் வெளிவந்ததற்கு ஆப்பிரிக்காவின் நாவலொன்று முதன் முதல் தமிழுக்கு அறிமுகம் செய்யப்பட்டது என்பது பலமான காரணமாக இருந்த போதிலும் அதைவிட வேறு காரணமாக அந்நாவல் எமது கலாசார உணர்வுகளோடு உறவுள்ள சமாந்தரமான பல விசயங்களைக் கொண்டுள்ளதும் காரணங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். அப்படி இருந்த போதும் அது ஒட்டுமொத்தமான சமாந்தரங்கள், சமானங்கள் உள்ளவை அல்ல. முக்கியமாக புவியியல் ரீதியான வித்தியாசங்கள், சமூக கலாசார வேறுபாடுகள் அந் நாவலில் உள்ளன என்பதை வாசகர்கள் மனதில் இருத்திக்கொள்வது அவசியம். அந்த முன்னறிவு இல்லாமல் வாசித்தால் அது மொழிபெயர்ப்பு நாவல் என்ற பிரக்ஞை இல்லாமல் போய்விடுகிற ஆபத்து ஏற்பட்டு விடும். அந்த மயக்கத்தால் - அந்நாவல் ஆங்கிலத்தில் இல்லாமல், தமிழ் மொழியில் உள்ளதால் அது மேலும் ஏதுவாகும் - தான் மு.பொ. சில எளிய ஆங்கிலச் சொற்களை நேரடி மொழிபெயர்ப்பில் பெயர்த்திருக்கிறேன் என்று சொல்கிறார் என்று நினைக்கிறேன். அந்நாவலை ஆங்கில மொழியிலும் அவர் வாசித்திருப்பின் அக் குற்றச்சாட்டுக்களைத் தவிர்த்திருக்கலாம். அந்த நெருடல் உணர்ச்சியும் அவருக்கு ஏற்பட்டிருக்காது. அவர் குறிப்பிட்ட சொற்களை பிற வாசகர்களும் பிழையாக புரிந்து கொள்ளாமல் இருப்பதற்காக இங்கு சுருக்கமாக அவற்றை விளக்க வேண்டிய அநாவசியம் ஏற்பட்டுள்ளது.

நைஜீரியாவில் எமக்குப் பழக்கமான தென்னை மரமும், இல்லை. தேங்காயும் இல்லை. தென்னங்கள்ளும் இல்லை. தேங்காய் எண்ணெயும் இல்லை. அங்கு Palm Tree, Palm Wine, Palm Oil தான் உள்ளன. Palm Tree என்ற மரத்திற்கு தென்னை மரம் என்று சொல்லாமல் தெங்கு என்று சொன்னேன். கித்துள் மரத்தை தென்னை என்றும் கித்துள் கள்ளை தெங்கு கள்ளு என்று மொழிபெயர்க்க முடியாதோ அப்படித் தான் இதுவும். Plam Kernel தான் தெங்குப் பருப்பு.

அடுத்து, நுஃமான், மு.பொ. இருவருக்குமே ஏற்பட்ட குழப்பம் மனிதத் தலையில் ஒக்கொங்வோ எப்படிக் கள்ளுக் குடித்தான் என்பது. சினுவா ஆச்சிபி நைஜீரியாவின் ஈபோ இன சமூகக் கலாசார கதையை ஆங்கில மொழியில் எழுதி இருக்கிறார். அவரின் தாய் மொழி ஈபோ. அவர் ஒரு கலாசாரத்தையே வேற்று மொழியில் சிருஷ்டித்து இருக்கிறார். அத்துடன் அவர் ஆங்கிலப் படிப்பாளி. மண்டை ஓட்டுக்குப் பதிலாக தலை என்று எழுதி இருக்க மாட்டார். Skull க்கும் Headக்கும் வித்தியாசம் தெரியாதவர் அல்ல.... ..he drank his palm wine from his first human head என்று தான் எழுதுகிறார்.



இவ்விடத்தில் அக்காலத்தின் விவசாய சமூகமான ஈபோ இனத்தின் கலாசார பழக்க வழக்கங்களைப் பற்றிச் சிறிது ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. head hunting பழக்கம் ஆபிரிக்க, தென் அமெரிக்க, ஆசிய - இந்தியாவில் அஸ்ஸாம் பகுதிகள், இந்தோனேஷியாவில் போர்ணியோ, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம் வரை இருந்து வந்துள்ளது. அதற்குப் பல பௌராணிகக் காரணங்கள் இருந்துள்ளன. நைஜீரியாவில் அவர்கள் தலையைக் கொய்து பாதுகாத்து ஒரு சிரட்டையைப் போல பாவித்திருக்கின்றனர். மனிதனைப் பிடித்துச் சாப்பிடும் மனித இனம் மட்டுமல்ல விவசாயம் நல்ல விளைச்சலைத் தருவதற்காகவும், யுத்தப் பரிசாகவும், மறு உலகக் கட்டளைக்காகவும் மனிதத் தலையைக் கொய்து பாதுகாத்து வைக்கும் பழக்கமும் பல கலாசாரங்களில் இருந்துள்ளது. எனவே இது மொழிபெயர்ப்புப் பிரச்சினை அல்ல. அவர்களின் கலாசாரப் பழக்க வழக்கங்கள் பற்றிய எமது அறிவின்மை.

அடுத்தது Things Fall Apart என்ற தலைப்புக்கு சிதைவுகள் என்ற தலைப்புப் பற்றிய உடன்பாடின்மை. (அத்தலைப்பு ஆங்கிலக் கவிஞர் வில்லியம் பட்லர் யேற்சின் Second Coming- இரண்டாவது வருகை - என்ற கவிதையில் ஒரு வரி.

*Things Fall Apart; the centre cannot hold;*
*Mere anarchy is loosed upon the world.*

ஆச்சிபி எடுத்தாண்ட அக் கவிதையின் நாலு வரிகளில் இரண்டு வரிகள். அவை இந் நாவலினதும் ஆச்சிபியினதும் எண்ணத்தை வலியுறுத்துபவை. "வெறும் அராஜகம் இவ்வுலகில் அவிழ்த்து விடப்பட்டுள்ளது" என்று எதை நினைத்து ஆச்சிபி அவ்வரிகளை எடுத்தாண்டார்? அந்நாவல் அவ்வரிகளால் ஆச்சிபி எண்ணாதவற்றைக் கூட ஆழமாகச் சுட்டவில்லையா? அதுவும் அந்நாவலுக்குரிய வெற்றி

Things Fall Apart ஆங்கில அமைப்பில் ஒரு வாக்கியமுங்கூட, அதை அப்படியே கவித்துவமாக வாக்கியமாகவே மொழிபெயர்த்திருந்தால் நீண்ட தலைப்பாகி விடும் என்று அஞ்சியதால் ஒரே சொல்லில் அக்கதையின் உயிரை எட்டுவதற்கான ஒரு முயற்சியாகவே அதை உபயோகித்தேன். சிதைவுகள் என்ற சொல்லை விட வேறெந்தச் சொல்லுமே அந்நாவலை அர்த்தப்படுத்துவதாக எனக்குத் தெரியவும் இல்லை. கிடைக்கவும் இல்லை. இவ்விடத்தில் ஜெர்மன் மொழிபெயர்ப்பின் தலைப்பு ஒக்கொங்வோ என்பதை நினைவுறுத்தலும் தகும்.

தினமணியில் வெளிவந்த கி. ஆ.சச்சிதானந்தனின் மதிப்பீட்டில் இந்நாவலில் உள்ள ஈபோ மொழிப் பழமொழிகளுக்கு ஏற்ப தமிழில் ஏற்கத்தக்கதாக வரவில்லை என்ற விமர்சனமும் எனது பார்வையில் உடன்பாடானதல்ல. முன் கூறியது போல ஆச்சிபி ஈபோ வாய்மொழிப் பேச்சில் உபயோகிக்கும் பழமொழிகளை ஆங்கிலம் - தமிழ் என்று மூன்றாவது "மொழி"யில் பழமொழிகள், பழக்கவழக்கங்கள், தொன்மங்கள். நம்பிக்கைகள் மொழி ஆக்கம் பெற்றுள்ளன. அதுவும் முழுக்க முழுக்க அந்நியமான ஐரோப்பிய கலாசாரத்துக்கு ஆபிரிக்கக் கலாசாரம் மொழிப் புத்தாக்கம் பெற்று ஒரு ஆசியக் கலாசாரத்துக்கு மாற்றம் பெறுகையில் விளையும் மாற்றம் இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் மூலத்துக்கு ஊறு விளைவிக்காத வகையில் அக்கலாசார அனுபவத்தைத் தமிழ்ப் பிரதியில் கொண்டு வர முயற்சித்துள்ளேன்.

இந்நாவல் தமிழில் பரவலாக வாசிக்கப்படுவது மட்டுமல்லாமல் அதற்கு சிறந்த கூர்மையான வாசகர்களான - விமர்சகர்கள் அப்படியானவர்கள் என்று Northrop Frye கூறுகிறார் - மு.பொ., கி.ஆ.சச்சிதானந்தம், பெருமாள் முருகன் ஆகியோரிடமிருந்து இம்மொழி மொழிபெயர்ப்புக்கான காத்திரமான மதிப்பீடுகள் வருவது வித்தியாசமான ஆனால், வரவேற்கத்தக்க நிகழ்வு. அதற்கு நான் நன்றி உடையேன். இலக்கிய உலகம் கடமைப்பட்டுள்ளது. ☐

---




**விடுதலைக்காய்**
**(கவிதைத் தொகுதி)**
**வெளியீடு:**
**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
**விலை 50.00 ரூபா**

முன்னுரையில் "நூல்களினூடாக வெளிவரும் கருத்துக்கள் சமூக அக்கறையுடையதாகவே இருக்க வேண்டும். இலக்கியம் ஒரு சமூகக் கலை. சமூக இயங்கியலுக்கு இலக்கியம் உந்துசக்தி, இவற்றையுணர்ந்தே மனித விடுதலைக்காய் சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும், போராட்டங்களையும், படைப்பாளி படிப்பாளிக்கு விழிப்புணர்வுடன் வழங்க வேண்டும். இதனூடே உலக வளர்ச்சி, மனிதனின் சுதந்திரம், தன் போக்கில் போவதல்ல என்பதை அறைந்து பறைசாற்றுமென்பதுண்மை. எழுத்தாளனுக்கு சமூகப் பற்றுணர்வு, அர்ப்பணிப்பு என்பது எழுதுகோலும் தாள்களும் போலாகும். இதை அனுபவத்தில் உணர்ந்து கொண்டு தேவை உணர்ந்து வழங்கல் வேண்டும். ஏதோ அவ்வுணர்வுடனே சொற்பமேனும் தந்துவிட்ட திருப்தி எனக்குண்டு" என்று கூறும் கனக ரவியின் முதலாவது கவிதைத் தொகுப்பு இது.

தொகுதியிலுள்ள 30 கவிதைகளுள் அனேகமானவை போரின் கொடூரங்களையும், இழந்த வாழ்வின் மீதான ஏக்கங்களையும் வெளிப்படுத்துவனவாயுமுள்ளன.

தொகுதியில் பல இடங்களில் நல்ல கவிதைகளைத் தருவதற்கான நிறைய சாத்தியக் கூறுகளைக் காண்பிக்கிறார் கனக ரவி. தருவாரா?

—ராசாத்தி



**'சங்வேதி'**
**வெளியீடு:**
**வண. பிதா ஜூட் லால் பெர்ணாந்து**
**மகிந்த நாமல்**
**ரீதி மாவத்தை, கலமுல்லை,**
**களுத்துறை.**

'ஒளியை நோக்கி' எனும் சிறுசஞ்சிகையை வெளியிடுபவர்களான வண. பிதா ஜுட் லால் பெர்ணாந்து அவர்களால் இந்நூல் வெளியிடப்படுகின்றது. யுத்தத்தினால் பீடிக்கப்பட்டவர்கள், அவர்களின் அனுபவங்கள் என்பன, யுத்தமும் பெண்களும், யுத்தமும் சிறுவர்களும், யுத்தமும் பொருளாதாரமும், யுத்தமும் அரசியலும் என்ற பகுதிகளின் கீழ் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. வடக்கு, தெற்கு வேறுபாடின்றி சகல தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக வவுனியா வைத்தியசாலையின் அவலங்கள் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிங்களத்தில் வெளிவரும் இச்சஞ்சிகை தமிழ் வாசகர்களுக்குப் பயனளிக்கும் வகையில் விரைவில் தமிழில் வெளியிடப்படலாம் எனத் தெரியவருகின்றது.

—ரத்னா

---

**கவிதை – 01**

துப்பாக்கி வேட்டொலிகளுக்குள்ளும்
சப்பாத்து மிதியடிகளுக்குள்ளும்
சிதைவுறும்
எமக்கான கனவுகளனைத்தும்.

எம் ஒவ்வொருவரினதும் இருப்பும்
ஏதாவது ஒரு தெருக்கோடியிலோ
தொலைதூரக் காடுகளிலோ அல்லது அதற்கப்பால்
வனாந்தர வெளிகளிலோ
நிலைகொண்டிருக்கும்.

ஒரு நிலவு காலத்தில்
அல்லது முகங்களின் உணர்ச்சிகளை அறிந்து கொள்ள முடியாத
துயர் மிகுந்த கரிய இருளில்
நிகழலாம் எமக்கான சந்திப்புகள்.

நாம் காதலர்கள் ஆகவும்,
பெற்றோரைப் பிரிந்த குழந்தைகளாகவும்,
குழந்தைகளைப் பிரிந்த தாய் தந்தையராகவும்
கணவன் மனைவியராகவும் இருக்கிறோம்.

உனக்கு எப்போதுமே சந்தோசமளித்திருக்க முடியாத
இளமைக்காலம் பற்றி நீயும்,
பனியடர்ந்த காடுகளுக்குள் வாழும்
எனது இளமைக்காலம் பற்றி நானும்
எண்ணிப் பார்க்க முயல்வோம்
கணங்களில் அல்லது அதைவிட குறைவான நேரத்தில்.

மீளவும் சப்பாத்துக்களின் ஒலி நிலத்தில் அதிர்கிறது.

சகீ...
எமக்கான ஒவ்வொன்றின் முடிவிலும்
நாளை பற்றிய எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும்
தவிர
வேறு என்னதான் இருக்கிறது சொல்.

*06 பெப்ரவரி 97*

**கவிதை – 02**

பூமியின் ஒளி பொருந்திய முகங்கள்
குழந்தைகளினுடையவை.
துயரம் தரும் கனவுகளையும்
எமது காலங்களையும் அழித்துவிட்டு - எமது காலங்கள் நெருப்பில்
உழல்பவை
குழந்தைகளுக்கானதை அவர்களிடமே கையளிப்போம்.

நம்பிக்கைதரும் ஒரு சூரியனை
அல்லது ஒரு பௌர்ணமியை
மிக மெல்லிய வாசனையையும் இதழ்களையும் உடைய
மல்லிகை மலர்களை
நாங்கள் அவர்களுக்காகப் பரிசளிப்போம்.
கந்தக நாற்றம் எமது இருதயங்களில் உறைந்து விட்டதைப் போல
பிரிவின் துயரங்களும்
மன அழுத்தங்களும்
எமது வேர்களை அரித்துத் தின்று விட்டதைப் போல
அவர்களுடைய இருதயங்களை
அவை தின்றுவிட அனுமதிக்க முடியாது எம்மால்
உண்மையில்
நாம்
இழந்த சந்தோசங்களை
அவர்களின் மூலம் மீட்கும் கனவுகளில் வாழ்கிறோம் எனில்
அவர்களின் குதூகலங்களும் சிரிப்பும்
எமக்குச் சொந்தமானவை எனில்
பூமியின் ஒளி பொருந்திய முகங்களை
அவர்களிடம் பரிசளிப்போம்.

*98 கார்த்திகை 04*

**மூளும் தீயும், நீளும் குரலும்**

- போஸ்நிஹாலே

வட-மேல் மாகாண சபைத் தேர்தல் கூட்டல்களில் சந்திரிக்காவின் பேச்சுக்கள் எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அநியாயங்களை விபரிப்பதாகவே அமைந்துள்ளன. அந்தக் காலத்தில் நடைபெற்றவற்றை மீண்டும் நினைவூட்டுவது முக்கியமானதுதான். ஆனால், அந்தக் காலத்தில் நடைபெற்றவை ஜே.ஆர். இனது அல்லது பிரேமதாசவினது தனிப்பட்ட குணாதியசங்கள் காரணமாகவே நடந்தவை என எவராவது நினைப்பார்களாயின் அது பெருந் தவறாகும்.

அன்று ஐ.தே.க. அரசாங்கத்தின் அனைத்து அரசியல் நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்பட்டது அவர்கள் அமைத்திருந்த அபிவிருத்தத் திட்டத்தின் அடிப்படையிலேயேயன்றி அவ து தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் மீது அல்ல. ஏதாவது ஒரு சில நடவடிக்கைகள் தனிப்பட்ட தேவைக்காக அல்லது தனிப்பட்ட பலவீனத்தின் காரணமாக நடைபெற்றாதிருக்கக் கூடும். ஆனால் ஒரு ஆட்சியின் பிரதான நடைமுறை இலட்சனங்கள் தீர்மானிக்கப்படுவது அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளின் அடிப்படையிலேயே என்பதே உண்மையாகும்.

ஆனாலும் இப்போது சநதிரிக்க, ரணில் இருவரும் தமது மேடை விவாதங்களில் செய்வதை அரசியல் விமர்சனம் என்று கூற முடியாது. சந்திரிகாவின் பேச்சுக்களில் இருப்பதோ கடந்தகால ஐ.தே.க. அரசாங்கம் கொடிய, வஞ்சக, மனச்சாட்சியற்ற ஆட்சியாளர்கள் சிலரால் நடத்தப்பட்டது எனச் சுட்டிக்காட்ட விளைவது மட்டுமே. மறுபுறம் ரணிலின் பேச்சுக்களின் வெளிப்படுவதெல்லாம் சந்திரிகா உட்பட அரசாங்கத்தின் அமைச்சர்கள் அனைவரம் அனுபவமற்ற, நிர்வகிக்கத் தெரியாத வாய்ச் சவடால்காரர்கள் என்று சுட்டிக் காட்டுவது மட்டுமே.

இத்தகைய விமர்சனங்கள் கட்சிக் கூட்டங்களின் கலரிகளில் இருப்பவர்களுக்குச் கை தட்ட, சிரிக்க உகந்தவையாக இருக்காலாம ஆனால் மக்களை அறிவூட்ட இவ் அரசியல் பேச்சுக்களினால் பயன் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. நாடு முழுவதையுமே அவர்களின் அரசியல் 'கலரி' ஒன்று என இத் தலைவர்கள் நினைக்கிறார்கள் போலும். அதற்கினங்கத் தமது பிரதான எதிராளியின் குணாதிசயங்கள் பற்றிய விமர்சனமொன்றை அழகான அடுக்கு மொழி வசனங்களினால் செய்தால் பொதுமெ நினைக்கிறார்கள். உண்மையில் இவர்களது கொள்கைகளுக்கிடையில் பாரிய வேறுபாடு எதுவும் இல்லாததால் ஆழமான அரசியல் விமர்சனங்களை இவர்களால் ஒரு போதும் செய்யமுடிய்து என்பதும் மனங்கொள்ளத்தக்கது!

எவ்வாறாயினும் நல்லவர்கள் எல்லாம் ஒரு கட்சியிலும், கெட்டவர்கள் எல்லம் இன்னொரு கட்சியிலும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்பது போன்ற கதையை ஒப்புக் கொள்ளும் முட்டாள்கள் பெருந்தொகையாக இருக்கிறார்கள் என்று நம்புவது கடிடமான ஒரு விடயம். தீவிர அரசியல் விமர்சனங்களை எதிர்பார்க்கும் மக்களின் தொகை இப்போதெல்லாம் வர, வர அதிகரித்து வருகிறது. இதை தவிர்க்கவும் முடியாது. பிரச்சினைகள் உக்கிரமடையும் அளவுக்கு, அவை பற்றிய உண்மைகளை விளங்கிக் கொள்ளுவதில் அக்கறை கொள்ளும் அளவும் அதிகரிக்கவே செய்யும்.

உலக வங்கியின் ஆலோசனையுடனும் பல்தேசிய நிறுவன ஆட்சி முறையின் அனுசரணையுடனும், போலியான திறந்த பொருளாதாரமொன்றை ஏற்படுத்துவதே அபிவிருத்திக்கான வழி என இருசாராருமே ஒருமித்து ஏற்றுக் கொள்கிறனர். அதேசமயம் 'ரணிலிடம் இருப்பவர்கள் திருடர்கள், ஊழல் செய்வோர்" எனச் சந்திரிகா கூறுகிறார். மறுபுறம் 'சந்திரிகாவிடம் அறிவு, விளக்கம் உள்ள, அனுபவம் உள்ளவர்கள் இல்லை" எனறு ரணில் சொல்லுகிறார்.

# யுத்தம்

## திறந்த பொருளாதாரக் கொள்கையின் தவிர்க்க முடியாத விளைவே !



**கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன**

உண்மையில் இத்தகைய விமர்சனங்கள் அர்த்தமற்றவை. எந்தத் தரப்பிலும் மோசமான, ஊழல்கள் நிறைந்தவர்கள் இருக்கலாம். நேர்மையான, திறமையானவர்களும் இருக்கலாம். எனவே இவ்வாறன தனி நபர் நடத்தை இலட்சணங்கள் பற்றி விவாதிப்பதில் அர்த்தம் இல்லை.

இந்த விவாதங்களின் ஊடாக நிருபிக்கப்படுவது என்னவென்றால் ஒரு போலியான திறந்த பொருளாதார அபிவிருத்தியின் கீழ் இந்த ஆட்சியாளர்களால் ஒன்றில் ஊழமும் அடிக்கு முறையும் கொண்டவர்ளாக அல்லது எதுவும் இயலாத பொம்மைகளாக இருப்பது என்ற இரண்டு தெரிவுகளில் ஒன்றைத் தான் தெரிவு செய்ய முடியும் என்பது தான்.

பல்தேசிய நிறுவன ஆட்சி முறை தனது செயற்பாட்டை இந்த நாட்டினுள் செய்வதற்கு ஊழல் நிறைந்த கொலைகாரர்களை ஈடுபடுத்துவதா? அல்லது வாய்ச் சவடால்காரப் பொம்மைகளை ஈடுபடுத்துவதா என்பதை ஒவ்வொரு முறையும் தெரிவு செய்வதற்கே இத் தேர்தல்கள் உதவியுள்ளன என்று கூறுவது ஒன்றும் தவறானதல்ல.

உண்மையில் அரச சொத்துக்களைத் தனியார் துறைக்கு கையளிப்பது பற்றிச் சந்திரிகாவிடம் கேட்டால், "ஐ.தே.க., அரசன் சொத்துக்களை இந் நாட்டின் சிறு வியாபரிகளுக்கே ஒப்படைத்தது. அவர்களுக்கு அவற்றைச் சரிவர நிர்வாகம் செய்ய முடியாது. நான் கொடுப்பதோ உலகப் புகழ் பெற்ற அமெரிக்க, ஜப்பான, ஜேர்மன் போன்ற நிறுவனங்களுக்கே. அதனூடாக ஊழல் ஏற்படுவது தவிர்க்கப்படும் நாடு வளர்ச்சியடையும்." எனறு கூறுகிறார்.

இது ஐ.தே.க.யை விட தீவிரமாக வலதுசாரிக் கோணத்திலிருந்து தர்க்கம் புரிவதாகும். மிகச் சிறந்த அந்நிய நிறுவனங்களுக்கு நாட்டை ஒப்படைப்பது என்பது ஏகாதிபத்திய சார்பு அடிமைத் தர்ககம் ஆகும். தவிரவும் இவர்கள் கூறும் பல்தேசிய நிறுவனங்களுக்கு நாட்டின் வளங்களை ஒப்படைப்பதால் வளர்ச்சியடைந்த நாடு எது? இந்தோனேஷியா, மலேஷியா, கொரியா போன்ற நாடுகளை உதாரணமாக காட்டி முன்பெல்லாம் தர்க்கம் புரிந்தார்கள். இன்று இவ்வாறு உலக வங்கி முறையில் அபிவிருத்தியடையப் போன நாடுகள் நன்கு நலிவடைந்து உடைந்து போயுள்ளன. அதன் தாக்கம் உலகம் பூராவும் ஏற்பட்டுட்ள்ளது. உலகப் பொருளாதாரம் பின்னடைவு கண்டுள்ளது. ஆக சந்திரிகாவின் தர்க்கம் ஒரு அர்த்தமற்ற தர்க்கமாகும்.

மறுபுறம் ஐ.தே.க. உண்டுபண்ணிய அல்லது ஏற்படுத்திய யுத்தம் காரணமாக இத் திறந்த பொருளாதாரத் திட்டம் உடைந்து விழுந்தது எனச் சந்திரிகா தர்கம் புரிகிறார்.

உண்மையிலேயே திறந்த பொருளாதாரத் திட்டம் காரணமாகப் பொருளாராரம் வேகமாக வளர்ச்சியடைந்திருந்தால் இவ்வளவு துூரம் உக்கிரமமான யுத்தமொன்று ஏற்பட்டிருக்காது. மாறாக தற்காலிகமான ஒரு சமாதானமாவது ஏற்பட்டிருக்கும. அதற்கு நேர் மாறாகப் பொருளாதாரம் உக்கிரமமாக சிதைவடைந்ததன் காரணமாகவே சிறுபான்மை இனங்களுக்கு உரிய பங்கு மேலும் உக்கிரமான விதத்தில் வெட்டுக்கு உள்ளாக்கப்பட்டது. இதுவே சிங்கள இளைஞர்களை விட ஆழமான அர்ப்பணிப்புள்ள போராட்ட மொன்றில் தமிழ் இளைஞர்கள் ஈடுபடுவதற்கான காரணமாகும். இப்போது, இந்தப் போராட்டம் இவ்வளவு துூரம் முற்றிப் போய்த்

→19

## ஓவியர் குலராஜின் "வேர்களில் இருந்து ரேகைகளின் நடனம்"

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையினரின் ஏற்பாட்டில் ஓவியக் கண்காட்சி ஒன்று, அத்துறையின் காட்சி மண்டபத்தில் 07.01.99 அன்று ஆரம்பமாகி இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஈ.குலராஜ்யின் படைப்புக்களே கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அடையாறு கலாஷேத்திராவில் நுண்கலை டிப்ளோமாப் பட்டத்தை, பெற்றவர் இவர்.

"வேர்களிலிருந்து- ரேகைகளின் நடனம் எனும் தலைப்பில் இக்கண்காட்சி நடைபெற்றது.

பதில் உபவேந்தர் கலாநிதி யுவி தங்கராஜ் பிரதம அதிதியாக கலந்துகொள்ள நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் ஓவியக் கண்காட்சி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தலைமையுரையில் பேராசிரியர் அவர்கள் குலராஜின் ஓவியத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் இந்திய ஓவிய வரலாற்றையும் அதன் பாணி, போக்கு என்பவற்றையும், இரத்தினச் சுருக்கமாக எடுத்து விளக்கினார். பிரதம அதிதி அவர்கள், "தேசிய வாதத்திற்கு எதிராக பாரம்பரியம் பற்றிப் பேசும் போக்கு உருவாக ஓவியமும் பாரம்பரியத்தை பேணும் முயற்சியில் ஈடுபட்டது" என்று கூறி அதன் வெளிப்பாடாக குலராஜின் ஓவியங்களைச் சுட்டிக் காட்டினார்.

ஈ.குலராஜ் (48) அவர்கள் பிரதிமை வரைதல், துணி ஓவியம் வரைதல், மண்டப அலங்காரம், பற்றிக் அலங்காரம், கலம்காரி ஓவியப்பாணி (தாவரச்சாயம்) தஞ்சாவூர் பாரம்பரிய ஓவியப்பாணி முதலியவற்றில் தேர்ச்சியுடையவர் என்பது அவரது ஓவியங்களைப் பார்க்கும் போது புலனாகிறது.

இவருடைய ஓவியங்கள், புராணங்கள், ஐதீகங்கள், கிராமப்புறக் கதைகளின் சம்பவங்களைச் சித்திரிப்பனவாயும், பிரதிமைகள், அலங்கார உருவங்கள் பற்றிக் அலங்காரங்கள் முதலியனவற்றைக் கொண்டதாயும் இருந்தன. இவருடைய இந்த ஓவியங்களுள் அழகுபடுத்தல், அலங்காரபடுத்துதல் அதிகமும் மேலோங்கியிருந்தன.

விநாயக வடிவம் பற்றி இவர் குறிப்பிடும் பொழுது "இது நல்லதொரு வடிவம். இதனை Decorative ஆக, நன்றாக வரையலாம்" என அவர் கூறியது அலங்கார வேலைப்பாட்டிற்கு முதன்மை கொடுப்பவர் அவர் என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றது.

இவருடைய ஓவியங்கள் இந்திய மரபை பொதுவாகவே பிரதிபலித்திருந்தன. உருவம், உள்ளடக்கம், பாணி என்பன முற்றிலும் இந்திய மரபிற்குரியனவே. இதற்கு இவருடைய கல்விப் பின்புலத்தின் செல்வாக்கே காரணம் எனக் கூறின், கலாஷேத்திராவில் பயின்ற அனைவரும் நவீன பாணியை பின்பற்றாமல் பாரம்பரியத்தினுள்ளேயே நின்றுவிட்டனரா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது.

இவருடைய ஓவியங்களில் ராஜபுதன (Rajput), மொகலாய மரபுப் பாணியின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகின்றது. குறித்த சில ஓவியங்கள் ராஜபுதன ஓவியங்களை பிரதியுரு செய்ததாக இருந்தன. பல ஓவியங்கள் சிலைகளை பொதுவாக, பெண்களது சிலைகளை பிரதியுரு செய்தனவாகவே இருந்தன. இதனை விட இவர் இறுதியாக வரைந்தது எனக் கூறப்படும் ஆதாம் - ஏவாள் இந்திய மரபுப் பாணியிலேயே வரையப்பட்டிருந்தது. இதற்கு அவர் தனது கல்விப்பின் புலத்தைக் காரணம் காட்டினார். அத்தன்மை தன்னை ஆகர்ஷித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு திறனுள்ள (Skillful) படைப்பாளி குலராஜ் என்பதை மறுக்க முடியாது. அலங்காரக் கலைகளைப் படைப்பதில் கைதேர்ந்த ஒரு கலைஞன் (Decorative Artist) இவர் எனலாம். இந்தியப் பாரம்பரியத்திற்கேயுரிய ஓவியங்களில் கைதேர்ந்தவர் என்பதற்கு அவர் ஓவியங்கள் சான்று பகர்கின்றன" என்று கண்காட்சி வழிகாட்டி அவரை அறிமுகப்படுத்தியது.

இக்காட்சியையொட்டி கலந்துரையாடலும், ஓவியம் வரைதல் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது. ஓவியம் வரைதல் பயிற்சிப் பட்டறை குலராஜினால் நடாத்தப்பட்டது. நுண்கலைத்துறையின் முன்னாள் விரிவுரையாளர் அருந்ததி சபாநாதன் பல்கலைக்கழகத்தை விட்டுச்சென்ற பின்னர் மாணவர்களுக்கு இப்பயிற்சியிலீடுபட வாய்ப்புகள் கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதமே. இதற்கு குலராஜ் அவர்கள் இன்முகத்துடன் ஒத்தாசை வழங்கியதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பல்துறை சார்ந்தும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் முதலியோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறை முற்றிலும் நன்மை பயக்கும் ஒரு நிகழ்வாக இருந்தது. இது தொடர்ச்சியாக நடாத்தப்படுமாயின், மாணவர்கள் வெறும் ரசித்தலோடு நின்று விடாமல் ஆக்கம் என்பதிலும் ஆர்வம் காட்டுவர். இதற்கு நுண்கலைத் துறை ஆக்கமான பணிகளை முன்னெடுக்கும் என்பது எல்லோருடைய நம்பிக்கையும் ஆகும்.

பல்கலைக்கழகத்திற்கு உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் தரமான படைப்புக்களை நுண்கலைகள் சார்ந்தும், அரங்கம், நாடகம் சார்ந்தும் காட்சிப்படுத்துவதுடன், கருத்தரங்குகள் விழாக்கள் முதலிய நிகழ்ச்சிகளையும் நுண்கலைத் துறை ஒழுங்குசெய்து வருவது எல்லோரும் அறிந்த விடயம்.

இதன் தொடர்ச்சியாகவே, பல்கலைக்கழகத்திற்கு வெளியில் வாழும் ஈ.குலராஜ் அவர்களை இனங்கண்டு, அவருடைய படைப்புக்களை முதன்முதலில் காட்சிப்படுத்திய பெருமையும், நன்றியும் நுண்கலைத் துறையையே சாரும்.

- அழகு



# அது சாந்தனின் இரண்டாவது நூலல்ல!

'சரிநிகர் டிச. 24 - ஜன.14 படித்தேன். 'வரவு' பகுதியில் 'யாழ் இனிது' பற்றிய குறிப்பில், 'சாந்தனுடைய இரண்டாவது தொகுதி இது' எனக் கூறப்படுவது தவறானதும், எழுந்தமானதுமானதுமாகும். உண்மையில் சாந்தனின் பன்னிரண்டாவது நூல் இது.

பாளையங்கோட்டையைச் சேர்ந்த 'இலக்கியத் தேடல்' என்ற அமைப்பின்ரால் 1982ல், சாந்தனுடைய 'கிருஷ்ணன் தூது' என்ற தொகுதி வெளியிடப்பட்டிருந்தது. அந்த அமைப்பில் சேர்ந்திருந்தவர்களால், தற்போது 'யாழ் இனிது' வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இது அவர்கள் வெளியிடும் சாந்தனின் இரண்டாவது தொகுதியேயன்றி சாந்தனுடைய இரண்டாவது நூல் அல்ல.

தமிழகத்தில் பிரசுரிக்கப்பட்ட அவரது தொகுதிகளில் கூட இது மூன்றாவதாகும். ஏற்கனெவே அதே ஆண்டில் (1982) சென்னை, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் சாந்தனின் 'முளைகள்' என்ற தொகுதியையும் வெளியிட்டது. பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் மிகவும் சிலாகித்து எழுதிய முன்னுரையுடன் வெளிவந்தது அது. 'முளைகள்', கிருஷ்ணன் தூது' இரண்டுமே அப்போது தமிழகத்திலும், இலங்கையிலும் மிகுந்த கவனம் பெற்ற தொகுதிகளாக அமைந்தன என்பதனையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இவை தவிர, 'பார்வை' (70), 'கடுகு (75), 'ஒரே ஒரு ஊரிலே' (75), 'ஆரைகள்' (85), 'இன்னொரு வெண்ணிரவு' (88), 'காலங்கள்' (94) ஆகிய தொகுதிகள் இலங்கையில் வெளியான சாந்தனின் ஏனைய கதைத் தொகுதிகளாகும். இவற்றுள் 'பார்வை' கட்டுபெத்தை மாணவராக இருந்தபோதே வெளியானது. 'ஒரே ஒரு ஊரிலே' அந்த ஆண்டிற்கான சாகித்திய மண்டலப் பரிசுப் பெற்றது. 'இன்னொரு வெண்ணிரவு' தமிழக முன்னணி எழுத்தாளர் அசோக மித்திரன் அவர்கள் பாராட்டி எழுதிய முன்னுரையுடன் வெளியானது. 'காலங்கள்' அந்த ஆண்டிற்கான 'லில்லி தேவசிகாமணி' வெளிநாட்டுச் சிறப்புப் பரிசு பெற்றது.

இவற்றை விட 'The Sparks' (90) என்ற ஆங்கிலக் கதைகளின் தொகுதி ஒன்றும் 'ஒட்டுமா' (78) என்ற நாவலொன்றும் 'ஒளி சிறந்த நாட்டிலே' (85) என்னும் சோவியத் நாட்டுப்பயண அனுபவங்களும், நூலுருவில் வெளியாகி கவனம்பெற்ற சாந்தனின் ஏனைய ஆக்கங்களாகும்.

நூற்கணக்கில் பன்னிரண்டு நூல்களை வெளியிட்டுவிட்டு இருப்பவர் என்பதுடன் சாந்தனின் அடையாளம் முடிந்து விடவில்லை. தேசிய இனப் பிரச்சினையை அது 'வகுப்பு வாதம்' என்று கூக்குரல் எழுப்பப்பட்ட காலத்திலிருந்தே, பலத்த எதிர்ப்புக்குரல்களுக்கு முகங்கொடுத்து - தமிழின் ஆக்க இலக்கியத்தில் பதித்ததிலும், வெளிக்கொணர்ந்ததிலும், காத்திரமான தொடர்ச்சியான பங்களிப்பைச் செய்தவர் அவர். சிறுகதை வடிவத்தில் பரிசோதனைகளைச் செய்வதுடன் கலையாற்றலால் தமக்கென்றொரு முத்திரையையும் பதித்தவர். இப்படி, தமிழ்ச் சிறுகதை என்று வருகின்றபோது எவ்விதத்திலும் தவிர்த்துவிட முடியாத ஒரு படைப்பாளி பற்றி அறிய நேர்ந்திராது போனமைக்கு, போர்ச்-சூழலையும், அதனாலேற்பட்ட தொடர்புகளற்ற நிலையையும், இவற்றின் விளைவாக போதிய தகவல்கள் எட்டாது போனமையையும் மட்டும் காரணிகளாக்கிவிட முடியுமா?

அண்மையிற் வெளியான கே.எஸ்.சிவகுமாரனின் திறனாய்வு நூலில் கூட சாந்தனின் இரண்டு அல்லது மூன்று தொகுதிகள் பற்றிய திறனாய்வுகள் இடம்பெற்றிருப்பதாக அறிகின்றேன். 'இலங்கையில், ஆங்கிலத்திலும், தமிழிலும் சாந்தன் ஒரு 'Major Writer' என ஆங்கில இலக்கிய விமர்சகர் பேராசிரியர் குணதிலக்க (Daily News - 24.9.98) அவர்களும்: சர்வதேச தரத்தில் ஈழத்தின் பெயர்ச் சொல்ல வைக்கும் சிறுகதைகளைப் படைத்துவரும் நால்வரில் சாந்தனும் ஒருவர் என பேராசிரியர் நா. சுப்பிரமணியன் (தாமரை, பேட்டி - மே. '98) அவர்களும் சமீபத்தில் கூட குறிப்பிட்டவற்றை இங்கு சுட்டுவது அவசியம்.

விளம்பரங்களும் போலிகளும் கொடிகட்டிப் பறக்கும் இலங்கையின் - முக்கியமாக, கொழும்பின் - தற்போதைய தமிழ்க் கலை இலக்கியச் சூழலுக்கு, இலக்கியத்திலும் இலட்சியத்திலும், பற்றுறுதியுடனும், தாய் மண்ணில் வேர்பதித்து நிற்கும் பிடிவாதத்துடனும், வாழும் ஒரு கலைஞன் அந்நியமாகிப் போவதொன்றும் ஆச்சரியப்படக்கூடிய விஷயமில்லை.

**பொன் பூலோகசிங்கம்**

யாழ்ப்பாணம்

நன்றி. பொன் பூலோகசிங்கம் அவர்களே. சாந்தன் பற்றிய தகவல்களைத் தந்ததற்கு நன்றி. இலக்கியத் தேடல் அமைப்பினரால் வெளியிடப்பட்ட இரண்டாவது தொகுதி இது என்று அமைந்திருக்க வேண்டும். சுட்டிக்காட்டியதற்கு நன்றி - ஆ-ர்.

# முஸ்லிம் தலைமை...

போவதாய்க் கூறிவருகிறார். இதெல்லாம் தனித்துவம் இழந்த நிலை தான். பௌத்த மதம் உலகப் பொதுமதம். அதை ஏன் பௌத்தர்கள் சும்மா வைத்திருக்கிறார்கள் என்று ஆதங்கப்பட்டிருக்கிறார். இதனூடாக என்ன சொல்கிறேன் என்றால் அவர் தான் பேசி வந்த அந்த இஸ்லாமியத்தை குர்ஆன், ஹதீஸ் யாப்பென முழங்கி ஏற்படுத்திய முஸ்லிம் தனித்துவத்தை இழந்து அதற்கு நேர் எதிராக இயங்கி வருகிறார் என்பதையே. எனவே தான் நாங்கள் இதனை ஒரு போட்டியாகக் கருதவில்லை. நாட்டின் முஸ்லிம் இளைஞர்களை ஒன்று திரட்டி உரிய முறையிலான வழிகாட்டலை தலைமைத்துவத்தை வழங்க வேண்டுமென்பது தான் எமது நிலைப்பாடு.

**பொதுவாக முஸ்லிம் கட்சியொன்றின் இருப்பு பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் கிழக்கை மையப்படுத்தியதாகத் தான் இருக்கிறது. மு.ஐ.வி.மு. இதில் எந்தளவு அவர்களை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது?**

சிறுபான்மையினரின் பிரச்சினையை பிராந்திய ரீதியான பிரச்சினையாக நூற்றுக்கு நூறுவீதம் நாங்கள் பார்ப்பதில்லை. அதுவும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் எங்கிருந்தாலும் ஒரே வகையானதாக சிறுபான்மையினர் என்ற வகையிலேயே பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். அத்துடன் கிழக்கை விட இரு மடங்கான முஸ்லிம்கள் மற்றப் பகுதிகளில் தான் வாழ்கின்றனர். தமிழைத் தான் பேசுகிறார்கள். தமிழில் கற்ற வட - கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு அங்கு அதே மொழியிலேயே கருமமாற்ற முடியும். ஆனால், இங்கு ஒரு தந்திகூட தமிழில் அடிக்க முடியாது. அத்தனைக்கும் அரசாங்கம் பாலர் வகுப்பு முதல் - பல்கலைக்கழகம் வரை தமிழில் கற்பதற்கான அனைத்தையும் செய்கிறது. மொழியிலேயே இப்படிப் பிரச்சினை இருக்கிறது. எனவே கிழக்கல்லாத முஸ்லிம்கள் வாழும் ஏனைய பிரதேசங்களில் நாங்கள் இவ்வகையாக எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு அழுத்தம் கொடுக்கிறோம். வட - கிழக்கில் வேறுமாதிரியாக பிரச்சினை எழுகிறது. எனவே அதற்கேற்ப அதை அணுக வேண்டும். நாங்கள் சிறுபான்மை முஸ்லிம்கள் என்ற வகையில் நாடு தழுவிய ரீதியில் அவர்களின் பிரச்சினைக்கு பல்வேறு விதங்களில் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இவ்விடத்தில் ஓர் உதாரணம் கூறுவோம். மேல் மாகாண சபையில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் முஸ்லிம் வாக்குகளும், 90 ஆயிரம் சிங்கள வாக்குகளும், 80 ஆயிரம் தமிழர் வாக்குகளும் உள்ளன. கூட்டிப் பார்த்தால் தமிழ் பேசுபவர்களின் வாக்குகள் அதிகம். ஆனால், தமிழில் ஒரு கடிதத்தைக் கொடுத்தால் மாநகர சபை ஏற்றுக் கொள்ளாது. எனவே நாங்கள் சொல்கிறோம். பிரச்சினைகளை அந்தந்த வடிவங்களுக்கேற்ப எதிர்கொள்கிற வகையில் குரலெழுப்ப வேண்டுமென்று.

வட கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பிலும் அவர்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளிலும் நாம் என்னமாதிரியாக செயற்பட வேண்டும். என்றும், அதற்கான தீர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும், நாம் ஒரு தீர்வு நகல் வரைவில் ஈடுபட்டிருக்கிறோம். அது நடைமுறைச் சாத்தியமானதாகவே இருக்கும். மு.காவின் நிலைப்பாடுகள் இவ்விடயத்தில் அவ்வப்போது மாறிமாறியிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

**கடந்த தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட முஸ்லிம் கட்சி என்ற வகையில் உங்கள் கட்சி எந்தளவு அங்கீகாரத்தை அங்குள்ள முஸ்லிம்களிடம் நீங்கள் பெற்றீர்கள்?**

சமூக ரீதியான அங்கீகாரத்தைக் கணிப்பிட முடியாத தேர்தலாகவே அது இருந்தது. ஏனெனில் அன்று பெரும்பாலான வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. வாக்களித்தவர்கள் யாரென்றால் கொழும்பிலிருந்து சென்ற அரசியல்வாதிகளும் அவர்களின் பிள்ளைகளும், காடையர்களுமே. இவர்கள் திட்டமிட்ட வகையில் முஸ்லிம் கிராமங்களையே தாக்கினார்கள். வாக்குகள் திருடினார்கள். எங்களை தோறகடிப்பதும், அவர்களின் நோக்கம். குதிரைக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம் என்றும் முஸ்லிம்கள் பலரை எச்சரித்திருந்தார்கள. எனவே இலங்கையிலே, ஏன் உலகத்திலேயே மிக மோசமாக நடந்த தேர்தலை வைத்து எங்கள் கட்சிக்கு அங்கு கிடைக்கும் அங்கீகாரத்தைக் கணிப்பிட முடியாது.

**தேர்தல் மோசடி தொடர்பில் உங்கள் கட்சி வேறு பல கட்சிகளுடன் இணைந்து (ஜே.வி.பி., புதிய இடதுசாரி முன்னணி) வழக்குத் தொடரவுள்ளது பற்றி....**

இது அநியாயமான தேர்தல் என்று அனைவருக்கும் தெரியும். இது பற்றி இந்த மோசடிகளுக்கெதிராக பல வேலைத்திட்டங்களை நாமும் வேறும் சில கட்சிகளும் மேற்கொள்ளவுள்ளோம். பத்திரிகையாளர் மாநாடுகள் மூலமும் மக்களுடன் மக்களாக இறங்கிச் சென்று அவர்களுக்கு இதை உணர்த்தி இவ்வாறானதைப் பகிஷ்கரிக்கச் சொல்வதன் மூலமும் செயற்படவுள்ளோம். இந்தத் தேர்தலை ரத்துச் செய்வதற்காய் வழக்கொன்றைத் தாக்கல் செய்ய நாமும் மேற்சொன்ன கட்சிகளும் சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

**இன்னொரு கேள்வி. மு.கா. முன்வைத்த இஸ்லாமியம் சார்ந்த வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தாமையே அதன் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருக்கிறது. அது ஒரு இடைவெளியாகவும் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. இந்த இடைவெளியை முஸ்லிம்கள் எதிர்பார்க்கிற இஸ்லாமியத் தனித்துவத்தை உங்கள் கட்சி நிரப்புமா?**

நிச்சயமாக. இது ஒரு முஸ்லிம் இளைஞர்களின் கட்சி. முஸ்லிம் என்பது உலகளாவிய முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கம். நாங்கள் மு.கா.போல் குர் ஆனை ஏந்திப்பிடித்து வாக்குகள் கேட்கவிரும்பவில்லை. ஆனால், இஸ்லாம் தான் எங்கள் லட்சியம். நாட்டின் சுபீட்சம் இஸ்லாத்தால் தான் கிடைக்கும் என்பது தான் எங்கள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும். முஸ்லிம்களின் நடைமுறைப்பிரச்சினையிலிருந்து சகல விதமான பிரச்சினைகளுக்கும் நாங்கள் குரல் கொடுத்து தனித்துவத்தோடு செயற்படுவது தான் எங்கள் நோக்கம். அதேவேளை இலங்கைப் பிரஜைகள் அனைவரது பிரச்சினைகளையும் நாங்கள் அவதானித்து அதற்காகக் குரல் கொடுப்போம். சகோதரத்துவத்துடன் செயற்படுவோம். வாக்கு வேட்டைக்காக இஸ்லாத்தை தூக்கிப்பிடித்து செயற்படமாட்டோம்.

**மு.ஐ.வி.மு. மிகத்தீவிரமாகச் செயற்படும் ஒன்றென்ற அபிப்பிராயம் நிலவுகிறது. இத்தீவிரம் அது இளைஞர்களைக் கொண்டிருப்பதாலா? அல்லது இன்றைய அரசியல் போக்குகளுக்கூடே தேவைப்படுகிற ஒரு நியாயமான தீவிரமா?**

இளைஞர் தீவிரம் என்ற ஒன்று இருக்கலாம். ஆனால், இது ஒரு தீவிரவாதக் கட்சியாக இல்லை. ஆனால், சமூகத்தில் தீவிரவாதக் கட்சிகள், ஆயுதமேந்திப் போராடிய கட்சிகள் இருக்கின்றன. ஆனால், முஸ்லிம்கள் அந்த நிலைக்குப் போகவில்லை. நாங்கள் இன்னும் தூரத்திலேயே இருக்கிறோம்.

**— நேர்காணல்: எம்.கே.எம்.ஷகீப்.**

# யுத்தம்...

தமிழ் தேசிய உணர்வு வளர்ச்சி பெற்ற ஒரு நிலையில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தினால் மட்டும் யுத்தம் நின்றுவிடப்போவதில்லை.

இப்போது திமிழ்த் தேசியவாதம் பாரதூரமானதாக இலங்கையினுள் வளர்ந்து விட்டுள்ளது. மறுபுறம் தமிழ்த் தேசியப் போராட்டமும் இப் போது ஒரு விதத்தில் சமூகப் போராட்ட வடிவத்தைப் பெற்றுவிட்டது. சுருக்கமாகச் சொல்வதானால் அமெரிக்கா கூட இப்போது புலிகள் இயக்கத்தினை ஒரு தேசிய இயக்கமாகப் பார்ப்பதை விடப் பல்தேசிய நிறுவன அமைப்பிற்கே சவால் விடுக்கும் ஒரு சக்தியாகக் கருதியே பார்க்கிறது.

இவ்வாறான நிலமை தோன்றியி ருப்பது பற்றிய காரணங்களை தெளிவுபடுத்தாது, ஐ.தே.க. காரணம் எதுவுமின்றி யுத்தத்தை ஏற்படுத்திது என்று கூறுவது நம்பக்கூடிய தொன்றல்ல. அது ஏற்படுத்திய திறந்த பொருளாதாரம் இன்று இச் சமூக, இனக் கொந்தளிப்புக்குக் காரணமா வது மட்டுமல்லாது இன்றைய அரசாங்கத்தால் சீராட்டி வளர்க்க ப்ட்டு வருவதால் அது இன்றும் பலமிக்கதாக இருக்கிறது. ஆகவே, கடந்த காலத்தில் இடைவிடாது பேணிவளர்க்கப்பட்ட போலிப் பொருளாதார அபிவிருத்தி காரணமாக இந்த யுத்தம் இவ்வளவு தூரம் ஊதிப் பெருத்து நாசகாரப் பேயாக உருவாகி உள்ளது என்ற தர்க்கத்தை இருவருமே ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

இப்போது அது தனியான வேறு தீர்வைக் கோரும் தேசியப் பிரச்சினையொன்றானாலும், அது உக்கிரமான போராட்டம் ஒன்றாக உருவாகியிருப்பது போலித் திறந்த பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக பிறந்து வளர்ந்த பாரபட்சம் காரணமாகவே ஆகும். சந்திரிகா இந் நிலமையை மூடிமறைத்து ஐ.தே.க. மீது அனைத்துத் தவறுகளையும் சுமத்தித் தப்பித்துக் கொள்ள முனைவதற்கு இடமளிக்க முடியாது.

திறந்த பொருளாதாரத்தைச் சரிவர நெறிப்படுத்த விரும்பும் எவருக்கும் அதிக காலம் செல்ல முன்பே ஏற்படும் மக்கள் எதிர்ப்புகளை ஒடுக்க அவசர காலச் சட்டத்தைச் கையிலெடுக்க வேண்டியிருக்கும். கொலை அதிகாரப்பலத்தை பிரயோகிக்க வேண்டியிருக்கும். சந்திரிகா அரசாங்கமும் மின்சார சபை ஊழியர்கள் மீதும் கொலை அதிகாரத்துடன் கூடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. பல்கலைக்கழக மாணவர் களுக்கெதிராக அதேபோலவே கொலை அதிகாரத்தையும், அரச பயங்கரவாதத்தையும் பிரயோகித்தது. 'மே' தினத்தன்று நவ சம சமாஜக் கட்சி நடாத்திய ஊர்வலம் மீது அரச பயங்கரவாதத்தைப் பிரயோகித்தது. சமூர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு, 'ரெலிகொம்' தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அதே போலவே அடி கொடுத்தது.

தென் பகுதி மீது ஐ.தே.க. யுகம் போன்ற அடக்குமுறையொன்று இன்றும் உருவாகவில்லை என்பது உண்மைதான். மறுபுறம் தென் பகுதியில் மக்கள் போராட்டம் ஒன்று அன்றுபோல் பாரதூரமானதாக ஆகவில்லை. ஏனெனில், அரசாங்கத்திலுள்ள இடதுசாரிகள் இப்போதும் அரசாங்கம் பற்றிக் புதுப் புதுக் கனவுகளைக் காண்பிப்பதால் போர்ட்டம் நின்று நின்றே செல்கிறது. அன்று ஐ.தே.க. நிர்வாகத்தைத் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் போது "மக்கள் கோஷம்" எழுப்பிய அல்லது செய்த , கதிர்காமத் துக்கப் பாத யாத்திரை சென்ற, பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சில தலைவர்கள் இன்று, அமெரிக்கா ஜப்பான், தென் கொரியா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் பல்தேசிய நிறுவன்ஙகளுக்கு முழு நாட்டினதும் முக்கிய இடங்களை ஒப்படைக்கும் போதும் சந்திரிகாவின் நாற்காலிக்குக் கீழ் இருந்து கொண்டு இளைப்பாறுவதுதான் ஆச்சரியமானது.

இன்றும், அன்றுபோல உள்ளவன் மேலும் உள்ளவன் ஆகிறான். இல்லாதவன் எதுவுமே இல்லா தவனாகிறான். பல்தேசிய நிறுவ னங்களின் தரகர்களுக்கும், முகவர்களுக்கும் இப்போது முன்னெப்போதையும் விட காலம் மிகச் செழிப்பாயுள்ளது. சந்திரிகா தனிப்பட்ட முறையில் தரகுக் கூலி அடிக்கிறாரா? இல்லையா? என்பது அவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. அன்றும் இன்றும் நிலைமை ஒன்று தான். அதாவது பெரும் மனிதர்களுக்கு, சர்வதேச கல்லூரிகள் உள்ளன, சுப்பர் மாக்கெட்கள் உள்ளன, சுப்பர் வைத்தியசாலைகள் உள்ளன, இன்ரா் கூலர்கள் அங்கும், இங்கும் திரிகின்றன. வேண்டிய உணவு, பானங்களும், ஜொலியும் உள்ளன. இல்லாதவனுக்குக் கூட்டுறவுக் கடையும் இல்லை, நிவாரணமும் இல்லை, தொழிலும் இல்லை, இலவசக் கல்வியும் இல்லை, வைத்தியசாலையும் இல்லை.

இது அதிக காலம் நிலைத்து நிற்கக் கூடிய ஒரு முறை அல்ல. எதிர்காலத்தில் தெற்கில் மக்கள் போராட்டமொன்று புரட்சிகரமான விதத்தில் எந்தக் கணமும் ஏற்படலாம். அன்று சந்திரிகா வடபகுதியில் ஈடுபடுத்திய இராணுவத்தையே தெற்கிலும் பயன்படுத்துவார். அப்போது ஒன்றில் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும், அல்லது பயங்கரவாத வன்முறை கடுமையான வித்தில் ஆரம்பமாகும்.

**நன்றி: லக்பிம**
**தமிழில்: சி.செ.ராஜா**

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.19/4, நாவல வீதி, நுகேகொட

தொலைபேசிஇலக்கம் 01 - 814859


## நூலகம் இராணுவத்திற்கே!

### —பாதுகாப்பு அமைச்சு கடிதம்!

பாதுகாப்புக் காரணங்களுக்காக சாவகச்சேரி நூல் நிலையக் கட்டிடத்திலுள்ள இராணுவ முகாமை மாற்ற முடியாது. நீங்கள் விரும்பினால் நூலகத்திற்கு வேறொரு இடத்தைத் தெரிவு செய்யுங்கள் என்று பாதுகாப்பு அமைச்சிலிருந்து சாவகச்சேரி நகரசபைச் செயலாளருக்கு ஜனவரி 28ம்திகதியான நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுபற்றி மேலும்தெரிய வருவதாவது, 95ம் ஆண்டு படையினர் யாழ்ப் பாணத்தை ஆக்கிரமித்ததோடு தமக்குப் பாதுகாப்பானது எனக் கருதும் பாடசாலைகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்கள், தனியார் வீடுகள் என்பவற்றில் முகாம் அமைத்தார்கள் . அவ்வாறு முகாம்அமைத்த போது சாவகச்சேரி நூலகக் கட்டிடத்தையும் முகாமுக்காக எடுத்துக் கொண்டார்கள். அங்கிருந்த புத்தகங்களை அள்ளிச் சென்று சாவகச்சேரி சுப்பர் மார்க்கட்டிலுள்ள இரண்டு அறைகளில் போட்டுப் பூட்டி வைத்தார்கள்.

தற்போது யாழ்.குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சாவகச்சேரியைப் பொறுப்பேற்றுக் கொண்ட புளொட் அமைப்பைச் சேர்ந்த உள்ளூராட்சி உறுப்பினர்கள் நகரசபைக்குச் சொந்தமான கட்டிடங்களை படையினரிடம் இருந்து பெறும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். அதனடிப்படையில் சாவகச்சேரி நூலகத்திலுள்ள படைமுகாமை அகற்றி நூலகப் பாவனைக்காக அதனைத் தந்துதவுமாறு பாதுகாப்பமைச்சுக்கு நகரசபைச் செயலாளர் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார். அக்கடிதத்திற்குப் பதிலளிக்கையிலேயே பாதுகாப்பு அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது பற்றி அபிப்பிராயம்தெரிவித்த அரச அதிகாரி ஒருவர் அரசாங்கம் யாழ் பொது நூலகத்தைப் புனரமைப்புச் செய்கிறோம் என்று சொல்லி 'செங்கல்லும் புத்தகமும்' என்று பேரணி நடாத்துகிறது. ஆனால் இருக்கிற நூலகத்தைப் பாவிப்பதற்கு அனுமதி வழங்குகிறார்களில்லை. மக்களைப் பற்றிய அக்கறையை அரசுக்கு தனது படைகளை பற்றித் தான் அக்கறை எனத் தெரிவித்தார்.

## அந்த இருவருக்கும் நடந்தது என்ன?

யாழ்போதனா வைத்திய சாலையிலிருந்து நாகராஜா ரூபகுமார் என்ற 16 வயது இளைஞர் பெப்.05ம் திகதி காலை ஆறரை மணியளவில் ஆயுதம் ஏந்தியவர்களால் கைது செய்யப்பட்ட அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவ்விளைஞர் தனது பேரனான சின்னத்தம்பி வன்னித்தம்பி(80) என்பவரைப் பராமரிப்பதற்காக வைத்தியசாலையில் 14ம் வார்ட்டில் நின்றிருந்தார்.

அன்று காலை திடீரென வந்த ஆயுதம் தாங்கியோர் இவரைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

இவ்விளைஞனின் தந்தையார் படை முகாம்களுடன் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் தாம் அவ்விளைஞரைக் கைது செய்யவில்லை என்று மறுத்துள்ளனர்.

இது தவிர பெப். 3ம் திகதி பாக்கியநாதன் ஜெரி லோட் என்ற 17 வயது இளைஞர் கடைக்குப் பொருட்கள் வாங்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை எனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர். இவர் யாழ்.புனித சூசையப்பர் கல்லூரி மாணவனாவார். இவரையும் படையினர் தாம் கைது செய்யவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

புளொட் உறுப்பினர் ஒருவர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இளைஞர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது என்கிறார் மனித உரிமைகள் தொடர்பாக அக்கறைப்படும் அதிகாரி ஒருவர். இளைஞர்கள் கைது செய்யப்படுவதன் காரணமாக அவர்கள் தனியே செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். பெரும்பாலான இளைஞர்கள் இருவர் அல்லது மூவராகவே சென்று வருகின்றனர். இவ்வாறு செல்வதனூடாக யாராவது கைது செய்யப்பட்டால் ஆகக் குறைந்தது யாரால் கைது செய்யப்பட்டார்கள் என்பதையாவது அறிந்து அறிந்த கொள்ள வசதியாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். கூடவே இந்நிலைமை இலங்கை - இந்திய ஒப்பந்தக் காலத்தில் தொண்டர் படைக்காக ஈ.பி.ஆர்.எல்.எப்பினரால் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட போது அவர்களது கைது நடவடிக்கையில் இருந்து தப்புவதற்காக இளைஞர்கள் வெளியே செல்லும் போது சிறு பிள்ளைகளை அழைத்துச் சென்றதை ஒத்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் பாடசாலைக்குப் போகாத சிறுவர்கள் 20 வீதம்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைக்குச் செல்லக் கூடிய வயதுள்ள சிறுவர்களில் 20.1 வீதமானோர் பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதாக ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது.

பிரிட்டிஷ் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் யுனிசெப் அமைப்பின் அநுசரணையின் கீழ் யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் என். சிவராஜா தலைமையிலான எட்டுப் பேரடங்கிய குழுவே இந்த ஆய்வை நடாத்தியது. நவம்பர் 1997- மே 1998 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை செல்லும் சிறுவர்களின் நிலைமையை அறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

தற்போதைய யாழ்.மாவட்ட சனத்தொகையான 132,859 பேரில் 27,000 பேர் 5ற்கும் 19வயதிற்கும் இடைப் பட்டவர்கள். இவர்களில் 17.1 வீதமானவர்கள் ஏறத்தாழ 23,000 சிறுவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

1.9 வீதத்தினர் ஏறத்தாழ 2,500 சிறுவர்கள், பாடசாலையில் சேர்க்கப்படவில்லை.

இதேபோன்று 13.3 வீதமான சிறுவர்கள் அதாவது 17,700 சிறுவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

6.9 வீதமான சிறுவர்கள் ஏறத்தாழ 62,300 சிறுவர்கள் இரண்டாயிரம் ரூபாவுக்கும் குறைவான வருமானமுள்ள குடும்பங் களைச் சேர்ந்தவர்கள்.

தொழில் செய்யும் சிறுவர்கள் 6.9 வீதத்தினர். அதாவது 9200 பேர்.

10.2 வீதமான சிறுவர்கள் ஏறத்தாழ 13,500 பேர் பெற்றோரை இழந்தோர். அத்துடன்அங்கு ஊனமுற்ற சிறுவர்கள் 0.09 வீதத்தினர். அதாவது1,200 பேர்.

குடாநாட்டில் 5.2 வீதமானோர் குறைந்த வயதிலேயே திருமணம் முடித்துள்ளனர்.

நெருக்கடியான சூழ்நிலைமை காரண மாகவும், இடப்பெயர்வின் காரணமாகவும் யாழ்.மாவட்ட மாணவர்களால் கல்வியைத் தொடர முடியாமல் இருப்பதாகவும், இதனால் பல மாணவர்கள் பாடசாலை களை விட்டு வெளியேறுவதாகவும், பரீட்சைகளில் சித்தி அடையத் தவறுவதாகவும் அவ்வாய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

பிரிட்டிஷ் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். இணைப்பதிகாரி லிபி கெனார்ட் இது தொடர்பான ஆய்வறிக்கையை வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவிடம் அண்மையில் கையளித்துள்ளார்.

## மாத்தையா குழுவின் பெயரில் வந்தவர்கள் யார்?

செல்லத்துரை புவிச்சந்திரன்(25) என்ற இளைஞரின் சடலம் பெப்.02ம் திகதியான காலை ஆறரை மணியளவில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் கிடக்கக் காணப்பட்டது.

சடலத்தினருகில் 'பிரபாவின் பிணந்தின்னிப் பேய்களுக்கு முடிவு இது தான் - புரட்சிப் புலிகள் - மாத்தையா குழு' என சிவப்பு நிற பெயின்றிங் ஸ்ரிக்கால் எழுதப்பட்ட அட்டை ஒன்றும் காணப்பட்டது.

பெப்.முதலாம் திகதி காலை கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு புவிச்சந்திரன் தான் வேலை செய்யும் கடை முதலாளியுடன் வந்திருந்தார். முதலாளி இவரை வங்கிக்கு வெளியில் நிறுத்தி விட்டு உள்ளே சென்று வங்கி அலுவல்களை முடித்துவிட்டு வெளியில்வந்து பார்த்த போது இவரைக் காணவில்லை. முதலாளி எங்கு தேடியும் இவரைக் கண்டு கண்டு பிடிக்க முடியவில்லை.

இனம் தெரியாத இருவரால் இவர் அழைத்துச் செல்லப்பட்டதாக அவருக்குத் தகவல் கிடைத்தது.

மறுநாள் காலை இவருடைய சடலம் யாழ். பெருமாள் கோவிலடியில் கிடக்கக் காணப்பட்டது. இவருடைய சடலம் கிடந்த இடத்திலிருந்து 200 யார் தொலைவில் இராணுவ முகாம் ஒன்று உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அன்று காலை ஆறரை மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்க்கட்சி ஒன்று பாவிக்கும் நீல நிற டொல்பின் வாகனம் அவ்விடத்தில் தரித்துச் சென்றதாக அயலவர்கள் தெரிவிக்கிறார்கள். செல்லத்துரை புவிச்சந்திரன் மல்லாகத்தைச் சேர்ந்தவர். இடப் பெயர்வின் பின் கட்டைப்பிராயில் வசித்து வந்தவர்.

## அதிகரிக்கும் தற்கொலைகள்!

நயினாமடு நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்து வவுனிக்குளம் பாளிநகரில் வாழும் 7 பிள்ளைகளின் தந்தையான சுப்பையா அமிர்தலிங்கம் 05.02.99 அன்று தற்கொலை புரிந்துள்ளதாக தெரிய வருகின்றது. அவர் உணவின்றி தவிக்கும் தமது குடும்பம் தொடர்பாக விசனம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. வன்னிப் பிரதேசத்தில் பட்டினி காரணமாக தற்கொலை செய்துகொண்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

ஜனவரி 26ம் திகதி 5 பிள்ளைகளின் தந்தையான முத்துவீரன் சுப்பிரமணியம் என்பவர் தற்கொலை செய்திருந்தார்.

மேலும் வன்னி சுகாதாரத் திணைக்களத்தின் தரவின்படி, வகுப்பில் மயக்கமுறும் பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பெரும்பாலான பிள்ளைகள் இடம்பெயர்ந்தவர்களாகவும், போசாக்கின்மை கொண்டவர்களாகவும் உள்ளனர். பொருளாதாரம் மற்றும் உணவுத்தட்டுப்பாடு காரணமாக இந்நிலைமை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முனைந்த போதும் வன்னி நிலைமை கட்டுக்கடங்காததாக உள்ளதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கோதுமை மாவுக்கும் தடை!

படையினர் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கோதுமை மா விநியோகத்தைத் தடைசெய்துள்ளனர். இராணுவக் கட்டுப்பாடற்ற இப்பிரதேசத்தில் இதன் விளைவாக 5000 மக்களுக்கு பாண் கொள்வனவு செய்ய முடியாது போகும்.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் ஒரேயொரு பேக்கரியான குடத்தனை பேக்கரியில் ஒரு நாளில் 15,000 இறாத்தல் பாண் தயாரிக்கப்படும். ஆனால், இராணுவத்தின் இக்கட்டுப்பாடு காரணமாக இப்பேக்கரியில் பாண் தயாரிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வடமராட்சி கிழக்குப் பகுதியில் கிராமம் ஒன்றில் அமைந்திருந்த மம்முனை - குடாரப்பு பேக்கரி, நாகர் கோவில் முகாமைச் சேர்ந்த படையினரால் எரித்து நாசமாக்கப்பட்டது.

பொதுவாக நாளாந்தம் கூலி வேலையில் ஈடுபடுவோர், வயலில் வேலை செய்வோர், இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தலின் போது குறைந்த விலைக்குப் பாண் தருவதாக வாக்களித்த ஜனாதிபதியின் ஆட்சியில் குறைந்த விலைக்கில்லாவிட்டாலும் தட்டுப் பாடில்லாமல் பாண் வாங்க முடியாத நிலைமை அம்மக்களுக்கு!

## தற்கொலை முயற்சிக்கு புளொட் காரணம்!

புளொட் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட நபர் ஒருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்ய முயற்சித்த சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

அளவெட்டியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் விநாயகமூர்த்தி(23) என்பவர் அவரது சகோதரர் ஒருவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக புளொட் அமைப்பினால் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புளொட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனவரி 24ம் திகதியன்று முகாமிலிருந்த மண்ணெண்ணெய் கலன் ஒன்றிலிருந்த மண்ணெண்ணெயை எடுத்து தனது உடலில் ஊற்றித் தீ வைத்திருக்கிறார். எனினும் தீ அணைக்கப்பட்டு தற்போது கடும் எரிகாயங்களுடன் யாழ்.வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். புளொட் உறுப்பினர்கள் தன்னை ஐந்து நாட்களாகத் தடுத்து வைத்து தாக்கியதாகவும் தாக்குதல் தாங்க முடியாததாலேயே தான் தற்கொலை செய்ய முயற்சித்ததாகவும் அவர் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

## சும்மா வெடிக்கும் துப்பாக்கிகள்!

யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி முகாமில் இயக்க உறுப்பினர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததனால் அவ்வுறுப்பினர் காயமடைந்துள்ளார். நவம் வைரமுத்து (27) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் பெப்.1ம் திகதி இரண்டரை மணியளவில் நடை பெற்றுள்ளது. இப்போதெல்லாம் துப்பாக்கிகள் அடிக்கடி தவறுதலாக வெடிக்கத் தொடங்கி விட்டன. என்ன செய்வது எதிரிகளின் துப்பாக்கிகளுக்கு மட்டுமல்ல தம்மவரின் துப்பாக்கிகளுக்கு கூட அஞ்ச வேண்டிய காலம் இது.

## சட்டியிலிருந்து அடுப்புக்குள்?

பெப். ஐந்தாம் திகதி காலை யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்திற்கு அருகில் இருக்கும் ரெலோ முகாமிலிருந்து கைது செய்யப்பட்டு தாக்குதலுக்குள்ளான இளைஞர் ஒருவர் தப்பிச் சென்று அருகிலுள்ள இராணுவ சென்றிப் பொயின்றில் சரணடைந்திருக்கிறார் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இவருடைய நிலைமை தொடர்பாக விசாரித்த போது எதுவும் கூற மறுத்த படையினர் அவ்விளைஞரது பெயரைக் கூட வெளியிட மறுத்து விட்டனர். படையினரும் ரெலோவுக்குப் பயப்படுகிறார்களோ?